
கல்கி

KALKI 25-3-1973 45 காசு



ஐம்பது வயதுக்குரிய விழா; நூறு வயதுக்குரிய சாதனை!



எத்தகைய வேலைக்கும் உபயோகியுங்கள்
ஏசிசி யின் சில்விக்ரீட் வெள்ளை சிமெண்ட்
அலங்கரித்தல், எழில் கொஞ்சும் பூந்தொட்டிகளை அமைத்தல், உங்கள் வரவேற்பு அறையில் டெர்ரசோ தள வரிசை இடல், காங்க்ரீட் ஜாலி வேலை செய்தல்; நீங்கள் விரும்பும் எவ்வித வண்ண வேலைக்கும் ஏற்றது ஏசிசியின் சில்விக்ரீட் வெள்ளை சிமெண்ட்.

AGMARK

சுத்தமான உணவுப் பண்டங்களை அடைய அக்மார்க் முத்திரை இருக்கிறதா என்று பாருங்கள்

நெய், வெண்ணெய், எண்ணெய்,
பலவித மசாலா பொடிகள், கோதுமை மாவு,
தேன், முட்டை போன்ற பல அன்றாட
உபயோகப் பொருள்களில்
அக்மார்க் முத்திரை இருப்பின்
அவை சுத்தமானவை.

சுத்தமான உணவுப் பண்டங்களையே உட்கொள்ளுங்கள்
அக்மார்க் பண்டங்களையே வாங்குங்கள்


பவுடரினால் துலக்கிய
பாத்திரத்தின் மீது பொடிக் கசடு
பின்தங்கியிருக்கிறதா?
மாசில்லாத பளபளப்பை
வீசிட வைப்பது
விம்.
கசடு இல்லை!
பிசுக்கு இல்லை!
கீறல் இல்லை!
Vim

கல்கி சிறுகதைச் சிறப்பிதழ்




பொருளடக்கம்

பரிதாபி, பங்குனி 12 :: மார்ச் 25, 1973

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


விஷ விதைகள்
கலப்படமான
கோதுமை
மொய்னிஹான்
புதிய
யதார்த்த
நிலையை நான்
புரிஞ்சுக்கறது-
க்குள் முன்னாடி
புதிய புதிய யதார்த்த
நிலைகள் தோன்றிக்
கிட்டே இருக்கே!
அமெரிக்கா
போர்த்
தளவாடங்கள்
இந்தியன்
பாக்


உயிரும் ஊக்கமுமுள்ள
இந்தக் குதிரையை விட்டுட்டு
அதை ஏன் கட்டிக்கிட்டு
அழுறாம்?
அரசு
மக்கள்
ஓடவே
மாட்டேங்கிதே!
அடிப்படையில்
ஏதோ கோளாறு!
தனியார் துறை
கே.கே.ஷா
அரசுத்
துறை
புதுசா
வர்ணம் பூசினால்
ஒரு வேளை ஓடும்!
டி.ஏ.பை

கல்கி மலர் 32 இதழ் 34

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

பாகிஸ்தான் பெரும் போர்க் கருவிகள்

பாகிஸ்தானுக்கு 1971ம் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க ஆயுத சப்ளை மீண்டும் தொடங்கப்படும் என்ற செய்தி வெளியானதும் பிரதமர் இந்திரா காந்தியும் அமைச்சர் ஸ்வரண் சிங்கும் பார்லிமெண்டில் தெரிவித்துள்ள கவலை நாட்டு மக்களின் கலக்கத்தை அப்படியே பிரதிபலிப்பதாக உள்ளது. ஜனாதிபதி நிக்ஸனின் நிர்வாகம் செய்துள்ள இம்முடிவு, இந்திய — அமெரிக்க நல்லுறவு விரைவில் சீர்படக் கூடும் என்ற நம்பிக்கைக்கு ஊறு விளைவிக்கவே செய்யும்.

பாகிஸ்தான் தனது போர்த் தளவாடங்களை அதிகரித்துக் கொள்வதில் ஈடுபட்டு அதற்காகச் சென்ற ஓராண்டு காலத்தில் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி ஏற்கனவே ஃபீல்ட் மார்ஷல் மானெக்ஷா எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தானுக்குச் சமீப காலத்தில் சீனாவிலிருந்தும், மற்றும் அராபிய நாடுகளிலிருந்தும் போர்க் கருவிகள் வந்து கொண்டிருந்தாலும் சென்ற இருபது ஆண்டுகளாக அளிக்கப்பட்டு வந்த அமெரிக்கப் போர் ஆயுதங்கள்தான் அதனுடைய போர் வலிமைக்கு ஆதாரம் என்பது மறுக்கமுடியாத உண்மை.

பாகிஸ்தான் — இந்தியப் பிரச்னைகளை இரு நாடுகளும் நேரடியாகப் பேச்சு வார்த்தைகள் மூலமாகவே தீர்த்துக் கொள்வது என்ற சிம்லா ஒப்பந்த முடிவை நிறைவேற்றவிடாமல் செய்யும் அபாயத்தை அமெரிக்காவின் இப்போதைய ஆயுத சப்ளை தோற்றுவித்திருக்கிறது. ஆயுத சப்ளை மீண்டும் தொடங்குவதற்கு அமெரிக்கா கூறியுள்ள காரணங்களை ஓரளவுக்குக் காகித சமாதானமாகக் கொள்ளலாமே தவிர உண்மைச் சமாதானமாக ஆகாது. ஏற்கனவே 1971க்கு முன்பு கொடுப்பதாக ஒப்புக் கொண்ட தளவாடங்கள் மட்டுமே இப்போது கொடுக்கப்படும் என்பதும், இவை நேரடிப் போர் ஆயுதங்கள் அல்ல, உபகரணங்களே என்பதும் நடைமுறைக்குப் பொருந்தாது. இந்தத் தளவாடங்களினால் பாகிஸ்தானின் ராணுவ பலம் ஓங்குவது நிச்சயம். இதில் பலவீனமடைந்துள்ள பாகிஸ்தானுக்கு இந்தியாவினிடம் பழைய விரோத மனப்பான்மையைத் தூண்டிவிடக்கூடிய அபாயம் உண்டு.

பாகிஸ்தானுடன் ஏற்கெனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களின்படி ஆயுதங்கள் வழங்கப்படுகின்றனவே ஒழிய, புதிதாக ஆயுதக் குவிப்புக்கு அமெரிக்கா பாகிஸ்தானுக்கு உதவாது என்று அமெரிக்க அரசு கூறியுள்ளது. என்றாலும்கூட இப்போது வழங்கப்படும் உபகரணங்களும் ஆயுதங்களுமே இந்தியா மீது புதிய பெரிய பொறுப்புக்களைச் சுமத்துகின்றன என்பதை அமெரிக்க அரசு மறுப்பதற்கில்லை. மக்களின் நல்வாழ்வுக்கான பிரச்னைகளே மலைபோலிருக்க இந்தியா இந்தப் புதிய பெரிய சுமையை ஏற்று உரிய தற்பாதுகாப்பு நடவடிக்கை ஏற்கவேண்டியிருக்கும். ஒரு சமாதானத் தலைமுறைக்காகப் பாடுபடுவதாகக் கூறும் அமெரிக்க அதிபரின் செயல் அவரது சொல்லுக்கு விரோதமாயிருப்பது கண்கூடு.

இந்திய உபகண்டத்தில் அமைதியை நிலைக்கச் செய்யவும், அயல் நாடுகளின் தலையீடு இல்லாமல் எல்லாவிதப் பிரச்னைகளையும் தமக்குள்ளே தீர்த்துக் கொள்வதற்கும் அதிகமான அவசியம் ஏற்பட்டுள்ள இப்போதைய சூழ்நிலையில், அமெரிக்கா எடுத்துள்ள நடவடிக்கை வருந்தத்தக்கது ஆகும். பங்களா தேசத்துக்கு உதவி அளிக்க முன்வந்துள்ளதாலும், இந்தியாவுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிதி உதவியை மீண்டும் அளிப்பதாலும் அமெரிக்கா பாகிஸ்தானுக்குத் தரும் ஆயுத சப்ளையின் தீய விளைவு மறைந்து போகாது.

இந்திய மக்களின் உண்மை மனநிலையை அமெரிக்க அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறுவது அமெரிக்கத் தூதுவரின் முதல் கடமை. அதை அவர் செவ்வனே நிறைவேற்றுவார் என்று எதிர்பார்ப்போம்.

சோஷலிஸவாதி சொல்லுகிறார்!

சோளம் மொத்த வர்த்தகத்தை இவ்வருடத்திலிருந்தும், அரிசி மொத்த வர்த்தகத்தை அடுத்த ஆண்டிலிருந்தும் அரசாங்கம் மேற்கொண்டு தானே நடத்த முடிவு செய்துள்ளது என்று சில நாட்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் இத் தொழிலில் ஈடுபட்டுள்ள லட்சக் கணக்கான வர்த்தகர்கள் தொழிலை இழப்பர். அதோடு, முக்கிய உணவுப் பொருள்களாகிய இவை மக்களுக்குத் தடங்கலின்றி அரசாங்கத்தின் விநியோக ஏற்பாட்டில் கிடைக்குமா என்பதும் சந்தேகம். அகில இந்திய தானிய வியாபாரிகள் சங்கம் அரசின்போக்கு தவறானது என்பதை வலுவான காரணங்களுடன் விளக்கியிருக்கிறது. வர்த்தகர்கள் எதிர்ப்புத் தெரிவித்தால், சம்பந்தப்பட்டவர்கள் எதிர்க்கத்தானே செய்வார்கள் என்று அரசு ஒதுக்கித் தள்ளிவிடக் கூடும். ஆனால் சோஷலிஸ்டுக் கொள்கையை ஆதரிப்பவரும், சர்வோதயத் தலைவரும், நேர்மையான மக்கள் தலைவர் என்று போற்றப்படுபவருமான திரு ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்களே இக்கொள்கையைக் கண்டித்தால் அவருடைய கருத்துக்கு மதிப்பு அளிக்கத்தானே வேண்டும்? அவர் சொல்லுகிறார்:

''ஏகபோகத்தை ஒழிப்போம், சோஷலிஸத்தைச் சமைப்போம் என்று ஓயாது பிதற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு, உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஏகபோக ஒழிப்பும் இல்லை, சோஷலிஸமும் இல்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன். உண்மையில் இந்த நடவடிக்கை ஏழை எளிய மக்களிடையே சோஷலிஸத்தைப் பற்றித் தாழ்வான அபிப்பிராயத்தையே நிச்சயமாக உண்டாக்கும்.

''பதுக்கலையும் கொள்ளை லாபம் அடிப்பதையும் தவிர்க்க வேண்டும் என்பது இந்த நடவடிக்கையின் குறிக்கோள். உண்மையில் இவ்விரண்டு தீமைகளும் அரசாங்கத் தலையீட்டினால் நூறு மடங்கு அதிகரிக்கவே செய்யும். ஏனெனில் இக் கொள்கையைச் செயல்படுத்த எந்த நடைமுறையை ஏற்படுத்தினாலும் அவற்றில் எல்லாம் திறமையின்மையும், தவிர்க்க முடியாத ஊழலும் லஞ்சமும் அதிகரிக்கவே செய்யும். பரிகாரத்தை விட நோயே தேவலை என்றுதான் ஆகும்.

''அமெரிக்காவிலிருந்து விஷவித்து கலந்த மைலோ இறக்குமதி செய்த விவகாரம் அரசாங்க நிறுவனங்களில் காணப்படும் திறமையின்மைக்கும் ஊழலுக்கும் உதாரணம். இதுவே ஒரு பாடமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.''

உணவு தானிய மொத்த வியாபாரத்தை ஏற்பதற்குப் பதில் மதிப்புக்குரிய தலைவர் கூறியிருப்பதை அரசு ஏற்க வேண்டும். அலட்சியப் படுத்தலாகாது.

டாக்டர் கரண்சிங் ராஜிநாமா

ஆவ்ரோ விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியதற்கு ஜனநாயக முறைப்படி பொறுப்பேற்று மந்திரி பதவியை ராஜிநாமா செய்துள்ள டாக்டர் கரண்சிங்கைப் பாராட்டுகிறோம்.



ஆவ்ரோ விமானத்தில் பல குறைகள் உள்ளன என்றும் பயணிகளை ஏற்றிக்கொண்டு பறப்பதற்கு லாயக்கற்றது என்றும் நீண்ட காலமாகவே வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வந்துள்ளன.

டாக்டர் கரண்சிங் இத்துறை மந்திரியாகப் பொறுப்பேற்பதற்கு முன்பிருந்தே இந்த வாதப் பிரதிவாதங்கள் இருந்துவந்துள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விமானம் பறப்பதற்குத் தகுதியுடையதே என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளார்கள். இருந்த போதிலும் மிகவும் பெருந்தன்மையுடன் டாக்டர் கரண்சிங் ஜனநாயக ரீதியில் தாம் பொறுப்பேற்க வேண்டியிருப்பதாகக் கூறி ராஜிநாமா சமர்ப்பித்திருக்கிறார்.

குறிப்பிட்ட விமானத்தின் தயாரிப்பு, விமானப் போக்குவரத்து இரண்டுமே அரசுத் துறையில் இருக்கும்போது பிடிவாதமாக ஆவ்ரோ விமானங்களை இந்தியன் ஏர்லைன்ஸ் பறக்கச் செய்து வந்ததில் வியப்பில்லை. தரக் குறைவான விமானங்களை அயல்நாட்டுக் கம்பெனி ஒன்று விற்றிருந்தால் அரசு ஏற்றிருக்குமா என்ன?

டாக்டர் கரண்சிங்கின் ராஜிநாமா ஆவ்ரோ விமானங்களின் தரம் பற்றிய பிரச்னையைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டியதை அழுத்தமாக வலியுறுத்துகிறது.

ஜனநாயகப் பண்புகளும் அறிவாற்றலும் திறமையுமுடைய டாக்டர் கரண்சிங்கின் உழைப்பை நாட்டுக்கு வேறு நல்விதத்திலும் பிரதமர் பயன்படுத்திக் கொள்ளவேணும்.

தமிழ் நாட்டிலே...

தீரன்

டாக்டர் இல்லாத ஆஸ்பத்திரி

தமிழ் நாட்டில் உள்ள விழுப்புரம் நகராட்சிக்குச் சொந்தமான மகப்பேறு மருத்துவ மனைக்கு ஒரு புதுவிதமான 'பெருமை' கிடைத்திருக்கிறது. அதாவது அந்த மகப்பேறு மருத்துவ மனையில் கடந்த ஒன்பது மாத காலமாகப் பிரசவம் பார்க்கும் பெண் டாக்டர் இல்லாமலே அது நடந்து வருகிறதாம். எப்படி?

அந்த நகரவையின் கடந்த கூட்டத்தில் டாக்டர் இல்லாத குறை பற்றி அரை மணி நேரம் விவாதம் நடந்தபோது, மக்கள் நல் வாழ்வுத் துறை இயக்குநருக்குப் பலமுறை எழுதியும், பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தும் தக்க டாக்டர் கிடைக்காததால் நர்ஸுகளை வைத்தே பிரசவம் பார்க்க நேரிடுகிறது என்று பதில் கிடைத்தது. பிரசவம் பார்க்கும் டாக்டர் இல்லாமலே மருத்துவ மனையை முக்கால் வருடம் நடத்தியவர்களைப் பாராட்டுவதா, குறை சொல்லுவதா என்று தெரியாமல் விழுப்புரம் மக்கள் ஒருவேளை மலைத்துப்போயிருக்கலாம். பிரசவம் என்பது தாய்மையின் புனிதமான வேதனை. அதற்குக் கூட உதவி யில்லாமல் ஒன்பது மாத காலமாக ஒரு மருத்துவ மனை நடப்பது விந்தைதான்.

கடுமையான நடவடிக்கை

சென்னையில் மார்ச் முதல் வாரத்தில் கைதான பட்டதாரி ஆசிரியர்கள் விஷயத்தில் தமிழ்நாடு அரசாங்கம் மிகவும் கடுமையாக நடந்து கொண்டு விட்டதோ என்று சந்தேகப் படத்தக்க சில காரியங்கள் நடந்துள்ளன.

கைதான ஆசிரியர்களைச் சந்திப்பதற்கு அந்த ஆசிரியர்கள் கழகத் துணைத் தலைவருக்கே அனுமதி மறுக்கப்பட்டதாகவும், கைதான ஆசிரியர்களின் மனைவிமார்கள், உறவினர்கள் வெகுதூரத்து ஊர்களிலிருந்து வந்திருந்தும் அவர்களுக்கும் சிறையில் சென்று கைதாகி இருந்தவர்களைக் காண அனுமதி மறுக்கப்பட்டதாகவும் தெரிகிறது. சகாக்களைச் சந்திக்க ஜெயிலுக்கு வந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கும் அனுமதி யளிக்கப் படவில்லை என்று கூறப்படுகிறது. படித்தவர்களும், சமூகத்தின் அந்தஸ்துள்ள பிரிவைச் சேர்ந்த கல்வியாளர்களுமாகிய பட்டதாரி ஆசிரியர்கள் விஷயத்தில் அரசு இவ்வளவு கடுமையாக நடந்து கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்றே படுகிறது. கோரிக்கைகளுக்காகப் போராடிய பட்டதாரி ஆசிரியர்களுக்குச் சிறையிலே 'சி' வகுப்புக் கொடுத்ததும் அதிதீவிரக் குற்றவாளிகளைப் போல நடத்தி அவர்களை மனைவி மக்கள் கூடச் சந்திக்க விடாமல் செய்ததும் சஸ்பெண்டு செய்ததாக அறிவித்ததும் எல்லாம் தேவைக்கதிகமான கடுமை என்றே யாருக்கும் தோன்றும். கல்விக் கண் திறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களிடமாவது அவர்கள் உண்ணாவிரத எல்லை வரை போக விடாமல் அரசு சுமுகமாக நடந்து கொண்டிருக்கலாம்.

ஏன் குறைந்தது?

"தமிழ் நாடு சட்டசபையில் பரிசுச் சீட்டு விற்பனை ஏன் குறைந்தது? மதுவிலக்கை ரத்து செய்ததுதான் அதற்குக் காரணமா?" என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு முதல்வர் மறுமொழி கூறும்போது, "இரண்டுக்கும் சம்பந்தமில்லை, இரண்டையும் இணைக்க வேண்டாம்" என்று சொல்லியிருப்பதோடு, "லாட்டரிச் சீட்டுப் பரிசுத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை மத்திய அரசு வரி போட்டு வசூலித்து விடுவதால்தான் லாட்டரிச் சீட்டு விற்பனை ஓரளவு குறைந்துள்ளது" என்றும் கூறியிருக்கிறார். ஆனால் உண்மையில் மக்கள் மத்தியிலே நிலவும் கருத்துக்களைக் கொண்டு பார்க்கும்போது விலைவாசி ஏற்றம், வேலை இல்லாத் திண்டாட்டம் முதலிய வாழ்க்கைத் தொல்லைகளால் பரிசுச் சீட்டு போன்றவற்றில் மக்களின் கவர்ச்சி குறைந்து விட்டது என்று தெரிகிறது. வேறு சமாதானங்களால் அதை மறைக்க முடியாது. காரணம் என்னவானாலும் பரிசுச் சீட்டுக்கள் அதிகம் விற்பனையாகவில்லை என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். சூதாட்ட வலையில் சிக்காமல் மக்கள் விழிப்படைந்து வருகிறார்கள் என்றல்லவா அதற்கு அர்த்தம். இந்த விழிப்புணர்ச்சி மேலும் வளரட்டும்.

ஒரு புதுக் கருவி

"குடித்துவிட்டு பஸ் ஓட்டும் டிரைவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க ஒரு கருவி கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது" என்று சட்ட சபையில் கேள்வி நேரத்தில் தமிழகப் போக்கு வரத்து அமைச்சர் தெரிவித்திருக்கிறார். மிகவும் நல்ல யோசனை. ஆனால் இந்தக் கருவி டிரைவர்களுக்கு மட்டும் தானா? குடித்து விட்டு வந்து பொது



இடங்களில் கலவரம் புரிவோர், மதிப்புக்குரிய பல மன்றங்களில் வந்து பிறரை ஜாதிப் பெயர் கூறித் திட்டும் பிரமுகர்கள், ஊர்வலங்களில், பொதுக்கூட்டங்களில் இடையூறு விளைவிப்பவர்கள் எல்லாரையும் இந்த நவீன கருவியின் மூலமாக ஒழுங்குபடுத்தினால் என்ன? குடித்துவிட்டுத் தீமை புரிபவர் எல்லோரையும் கட்டுப்படுத்தும் கருவி ஒன்று

ராஜாஜி சிந்தனை

உலக இயக்கங்கள் யாவும் ஒரு நியதிப்படி நடப்பதால் 'இயற்கையாக நடக்கிறது. இறைவன் எதற்கு?' என்கிறார்கள். இந்த நியதியை மாற்றி அற்புதம் செய்து காட்டினால்தான் இறைவனை நம்புவேன் என்கிறார்கள்.

ஆனால் இந்த இயற்கையின் சட்டம் எப்படி வந்தது? உயிரற்ற இயற்கை தானாகச் சட்டத்தை வகுத்துக் கொண்டு நடத்திக் காட்ட முடியுமா? பௌதிக உலகத்தில் காணுகிற இயற்கை விதிகள், ஆத்ம உலகத்தைச் சேர்ந்த தரும விதிகள் அனைத்தும் பகவானுடைய சங்கற்பத்தில் உதித்தனவே. இதுவே ஒழிந்து மதம் தரும் விளக்கம். பகவானின் பூரணத்துவத்தை நாம் பார்க்க இயலாது. நாம் அவனது எந்த அம்சத்தைப் பார்க்கிறோமோ அதைத்தான் இயற்கை நியதி என்கிறோம். இது பகவானைச் சாராமலே ஏதோ தானாக நடப்பது போலத் தோன்றுகிறது. எந்தச் சட்டத்தின் மூலம் ஆண்டவன் ஆளுகிறானோ அந்தச் சட்டம் மட்டுமே தெரிவதால் அதுவே ஆளுகிறது. ஆண்டவன் வேண்டியதில்லை என்று கூடத் தோன்றிவிடுகிறது.

பகவான் வேறு அவனது சட்டம் வேறு இல்லை. எனவே 'இயற்கைச் சட்டத்தை மாற்றி அற்புதம் செய்து உன் சக்தியைக் காட்டு' என்று நாம் அவனைக் கேட்பதற்கில்லை. தனக்கு உரிமை இல்லாத சிங்காதனத்தை அபகரித்திருக்கிறவனிடம் 'உன் தகுதியை நிரூபித்துக் காட்டு' என்று கேட்கலாம். ஆனால் சகல உரிமைகளுடன் சக்கரவர்த்தியாக இருப்பவனிடம் அவன் பதவி வகிப்பதற்கு எந்த நிரூபணமும் கேட்பதற்கில்லை. ஆண்டவனிடம் நிரூபணம் கேட்க நாம் யார்? 'எல்லாம் இயற்கை விதிப்படி நடக்கிறவரையில் உன்னை நம்ப மாட்டோம். உன் சட்டத்தை மாற்றி அதன் மூலம் உன்னை நிரூபி' என்று அவனிடம் கேட்பது, 'சத்தியமே, நீ அசத்தியத்தின் மூலம் உன்னை நிரூபித்துக் காட்டு' என்று கேட்பது போலவே ஆகும். ஆண்டவனின் சட்டம் அப்பழுக்கற்றதாக இருப்பதால் அதை மட்டுமே அரங்கத்தில் காட்டிவிட்டு அவன் திரைக்குப் பின்னால் நிற்க முடிகிறது. ''என்னுடைய தெய்வீகமான யோகத்தைப் பார்! நான்தான் எல்லாவற்றையும் உண்டாக்கி, தாங்கி, நடத்துகிறேன். ஆனாலும் நான் அவைகளிலிருந்து விலகியும் நிற்கிறேன்'' என்றான் கண்ணன் பகவத் கீதையில்.

தமிழ் நாட்டுக்கு அவசியம் உடனே தேவைதான். குடித்துவிட்டுப் புனிதமான கல்விக் கூடங்களின் அருகே கூப்பாடு போடுபவர்கள், கோவில்களின் வாயிலில் வம்பு புரிவோர், கடை வீதிகளில் ஆடை அலங்கோலமாக விழ நடைபோடுவோர் அனைவரையும் சரிப்படுத்தக்கூட இந்தக் கருவியோ இதை விடச் சக்தி வாய்ந்த கருவியோ தேவைப்படத்தான் செய்யும். எல்லாவற்றையும்விடச் சாலச் சிறந்த கருவி மதுவிலக்கு.

அமைதியான ஆர்ப்பாட்டம்

மக்கள் உரிமைப் பாதுகாப்பு நாளாக ஸ்தாபன காங்கிரஸ் தலைமையில் தமிழ் நாட்டில் சுதந்திரா, சோஷலிஸ்ட், உழைப்பாளர் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகியவை நடத்திய மார்ச் 15ந் தேதி ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் அமைதியாகவும், காந்திய முறையிலும் சிறப்பாக நடந்தன. தமிழ் நாட்டிலுள்ள நிர்வாகக் குறைபாடுகளையும், தி. மு. க. அரசின் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டும் பத்து அம்சக் கோரிக்கைகளையும், கோஷங்களையும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் எழுப்பியதோடு மக்களுக்கும் கூறி விளக்கி, கலெக்டர், தாசில்தார் அலுவலகங்களில் மகஜர்களையும் அளித்தன. எல்லா ஊர்களிலும் உள்ள மக்கள், மாவட்டத் தலைநகர்களிலும் தாலுகா, துணைத் தாலுகா அலுவலகங்கள் உள்ள மையங்களிலும் திரண்டு ஊர்வலமாகச் சென்று இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட பிரதான ஊர்களில் இந்த ஆர்ப்பாட்டம் திட்டமிட்டபடி அமைதியாகவும் கட்டுப்பாட்டுடனும் ந...ந்து மக்களுக்கு மகத்தான அரசியல் விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

'தமிழா எண்ணிப் பார்'

இந்தத் தலைப்பில் மின்சார வெட்டைப் பற்றி ஒரு சுவரொட்டி அடித்து வெளியிட்டுள்ளது தி. மு. கழகம். இந்தச் சுவரொட்டியில் மின்சார வெட்டு வேறு எந்த எந்த மாநிலங்களில் எவ்வளவு சதவிகிதம் உள்ளது என்பதைப் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த ஒரு பிரச்னையில் மட்டும் இன்றி எந்த ஒரு பிரச்னையிலும் இங்கே உள்ள ஒரு பெரிய குறையை மக்களோ, எதிர்க் கட்சிகளோ சுட்டிக் காட்டினால் உடனே தி. மு. க. அரசு 'அந்த மாநிலத்தில் இது இல்லையா, இந்த மாநிலத்தில் அந்தக் குறை நமக்கிருப்பதை விட அதிகமாகவே இருக்கிறது' என்றெல்லாம் பதில் சொல்லி நழுவுவதும் சுவரொட்டி அச்சிட்டு ஒட்டிவிட்டுத் தப்புவதும் ஒரு நிரந்தர வழக்கமாக இருக்கிறது. வேறு மாநிலத்தில் உள்ள குறைகளைத் தமிழ் மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதால் மட்டும் தமிழகத்தின் குறைகள் தீர்ந்து விடாது. நம் மாநிலக் குறைகளை உடன் கவனித்துப் பரிகாரம் தேடுவதுதான் ஒரு நல்ல அரசின் பணியாக இருக்கும்.



சேமிப்புத் திட்டங்களிலே ஒரு விந்தை:
ஐஓபியின் நீண்ட காலப் பயன் தரும் சேமிப்பு
கட்டிய பணம் மொத்தமும் வாங்குகிறீர்கள்-
பிறகும் சேமிப்பும் வட்டியும் குறையாமல் இருக்கிறது!
உங்களுக்கு அருகாமையிலுள்ள ஐஓபி கிளையை இன்றே அணுகுங்கள். அல்லது முழு விவரம் அடங்கிய இலவச வெளியீட்டைக் கேட்டு எழுதுங்கள்.
IOB
இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்
151 மவுண்ட் ரோடு, சென்னை 600002



இன்னும் மதில்மேல் பூனையாக இருக்கிறீர்களா?

விவேகமான காரோட்டிகளுடன் இது வரை சேரவில்லையானால், உடனே அவர்கள் பக்கம் குதியுங்கள். ஆம்கோ பவர் ப்ளஸ் பாட்டரி உபயோகிக்கத் தொடங்குங்கள். முன்னேற விரும்பும்போது, முட்டுக்கட்டையினால் தடுமாறி நின்றுவிடாதீர்கள்.

தொழில்துறை, விவசாயம், பாதுகாப்பு, போக்குவரத்து—ஆகிய நாட்டின் ஒவ்வொரு துறைக்கும் ஏற்றதொரு பாட்டரியை ஆம்கோ வழங்குகிறது. உலகின் பல நாடுகளிலும் விரும்பிப் போற்றப்படும் பாட்டரியாகத் திகழ்கிறது ஆம்கோ பாட்டரி!

ஆம்கோ பாட்டரிகளே வேண்டுமென வற்புறுத்துங்கள்—அவை உறுதியானவை—நீடித்துழைப்பவை.



ஆம்கோ பாட்டரீஸ் லிமிடெட்
யூனிட் பில்டிங்ஸ், பெங்களூர்-2

AM-102 MAC (B) TM



1922 ஜனவரி, 28உ

சனிக்கிழமை: நேற்றிரவு எட்டு மணி அடித்த சமயம் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகள் இருந்த அறைப் பக்கமாக வராந்தாவில் திடீரென்று ஏதோ சச்சரவு ஏற்பட்டது. அடிக்கும் உதைக்கும் உண்டான சத்தம் கேட்டது. அப்பொழுது நான் இருந்த அறை பூட்டப் பட்டிருந்ததால் அதைப் பார்க்க முடியவில்லை. அடிச் சத்தத்தையும் அழுகைச் சத்தத்தையும்தான் கேட்டேன். காவலாளர்களைக் கூப்பிட்டேன். அவர்கள் என்ன என்று கேட்காதிருந்து விட்டார்கள். அவர்கள் அடிப்பதை நிறுத்திவிட்டு என்ன விஷயம் என்று எனக்கு விளக்கிச் சொல்ல விரும்ப வில்லை. அவர்கள் ஒரு கைதியை மிருகத்தனமாக அடித்துவிட்டு அவனை அறையில் போட்டுப் பூட்டினார்கள். அந்தக் கைதி மாலையில் பூட்டும்பொழுது எங்கோ ஒளிந்து கொண்டிருந்துவிட்டான். அதற்காகத்தான் இந்தத் தண்டனை. நாங்கள் எல்லோரும் எங்கள் அறைகளில் பூட்டப்பட்டிருந்ததால் எங்களால் எவ்வித உதவியும் செய்ய முடியவில்லை.

இன்று காலையில் பிரதமக் காவலாளி வந்து மகமது கௌஸிடம் விஷயத்தை விளக்கிச் சொன்னார். அந்தக் கைதி மாலையில் ஒளிந்து கொண்டதாகவும், அவர்கள் அவனைத் தேடியதாகவும், சாக்கடைக் கால்வாயில் கண்டதாகவும் கூறினார். ஏன் இவ்வளவு கடுமையாக அடிக்க வேண்டும் என்று கேட்டதற்கு அப்படி அடிக்கவேயில்லை என்று சாதித்துவிட்டார். அந்தக் கைதியைப் பலர் சேர்ந்து அறைக்குள், தள்ளிய பொழுது உண்டான செருப்புச் சத்தத்தையே அடிச் சத்தமாக நாங்கள் எண்ணிக் கொண்டதாகக் கதை விட்டார். இந்தக் கதையை என்னிடம் கூறினார். நான் அதை நம்பாமல் அவரைக் கண்டித்தேன். அதன் மேல் அவர் தாம் சாவிகளை . எடுத்து வரப் போனதாகவும், அந்தச் சமயம் மற்றவர்கள் அடித்திருக்கக் கூடும் என்பதாகவும் சொல்ல ஆரம்பித்தார். இந்த விஷயத்தைச் சிறை அதிகாரியிடம் சொல்ல வேண்டுமா வேண்டாமா என்று யோசித்தேன். இறுதியில் வேண்டாம் என்று முடிவு செய்தேன். சிறை அதிகாரியே இப்படி நடந்து கொண்டிருந்தால் நான் என்ன செய்திருக்க முடியும்? அதற்குப் பதிலாக இந்தக் காவலாளர்களுக்குப் புத்தி புகட்டினால் அதனாலேனும் நன்மை உண்டாகக் கூடும். அதை விட்டுச் சிறை அதிகாரியை நம்பி அவரிடம் கூறுவதில் பயனில்லை. கடைசியில் அப்படித்தான் நடந்தது. காவலாளிகள் உதைத்தது போதாதென்று சிறை அதிகாரி அந்தக் கைதிக்கு மூன்று மாதங்கள் கால் விலங்கு அணியுமாறு தண்டனை கொடுத்தார்.

வெங்கட சுப்பையா என்னுடைய அறைக்கு வந்து உதவி ஜெயிலருக்கு உதவி செய்யுமாறு தம்மை நியமித்



திருப்பதாகக் கூறினார்: இது ஒரு பெரிய உத்தியோக ஏற்றம்தான் !

சிறையில் உண்டாயிருக்கும் பருத்திச் செடிகளில் கிடைக்கும் பருத்தி நூற்பதற்கு மிகவும் சிறந்ததாக இருக்கிறது. நாராயணசாமி என்று ஒரு கைதி. அவன் திருட்டுச் சொத்தை ஏற்றதற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறான். அவன்தான் எங்கள் பகுதிக்கு ஜலம் கொண்டு வந்து கொடுப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறான். அவன் அந்தப் பருத்தியை எடுத்து அழகாகப் பட்டை போட்டுக் கொண்டு வந்து கொடுத்தான். அதை முழுவதும் நான் அதிக ஆவலுடன் நூற்று முடித்தேன்.

பண்ட உபயோகிப்பாளர்கள், வினியோகஸ்தர்கள் ஆகியோரின் நலனுக்காக

கட்டுப்படுத்தும் வர்த்தக முறைகள்

நீங்கள் ஒரு பண்ட வினியோகஸ்தரா? அல்லது சில்லறை விற்பனையாளரா?

போட்டித் தயாரிப்பாளர்களின் பொருள்களை வைத்திருக்காமல், தாம் தயாரிக்கும் பொருள்களையே ஸ்டாக்கில் வைத்திருக்க வேண்டுமென்று, எந்த ஒரு தயாரிப்பாளராவது உங்களை வற்புறுத்துகிறாரா?

அப்படி அவர் செய்தால், ஏகபோக, கட்டுப்படுத்தும் வர்த்தக முறைகள் சட்டத்தின் (மானாபலீஸ் அண்ட் ரெஸ்ட்ரிக்டிவ் ட்ரேட் ப்ராக்டிசஸ் ஆக்ட்) பிரிவு 33(1) (ஸி)யின்படி, கட்டுப்படுத்தும் வர்த்தக முறையைப் பின்பற்றும் குற்றத்திற்கு உள்ளாவார் அவர்.

அந்தத் தயாரிப்பாளர்மீது உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக, இவ்வித விஷயங்களை, சான்றுகளுடன் தயவு செய்து ரெஸ்ட்ரிக்டிவ் ட்ரேட் அக்ரிமண்ட்ஸ் ரெஜிஸ்ட்ராருக்குத் தெரிவியுங்கள். அவருடைய முகவரி:
ரெஜிஸ்ட்ரார் ஆஃப் ரெஸ்ட்ரிக்டிவ் ட்ரேட் அக்ரிமண்ட்ஸ்,
தபால் பெட்டி 424, புது தில்லி.

வெளியீடு:
இந்திய அரசு,
கம்பெனி விவகார இலாகா,
சாஸ்திரி பவன், 5-வது மாடி,
புது தில்லி-1.

davp 72/706

19. வாலை நிமிர்க்கலாமோ?

மனிதர்களுடைய குணங்களை எவ்வளவு தூரம் சீர்திருத்தம் செய்தபோதிலும், சில இயல்புகளை மாற்றவே முடிவதில்லை என்று அவ்வையார் கண்டார். ஈகை, கருணை, நட்போடு பழகும் பாச உணர்வு முதலிய பண்புகள் எல்லாம் பிறவியிலேயே வர வேண்டிய நல்லியல்புகள் என்று ஆராய்ந்தறிந்த அவ்வையார், மனிதனுடைய சில தீய தன்மைகளையும் ஆராய்ந்தார். என்ன கண்டார்?

''பிறவிக் குணத்துக்கு மட்டை வைத்துக் கட்டினால் போகுமா?'' என்று ஒரு வசனம் உண்டு.

[கணங்கள் – நாய். அருங்கணங்கள் – அருமை பெருமை பொழிந்து வளர்க்கிற உயர்ந்த சிறப்புள்ள நாய்க் குட்டி.]

எத்தனைதான் 'பாசந்தி' ஊற்றிப் பாதாம் அல்வா ஊட்டி வளர்த்தாலும், நாய்க் குட்டியின் வாலை நிமிர்த்தி நேராக்க முடியுமா? அதுபோலவே.


– நீலநிறக்
காக்கைதனைப் பேசவிக்க
லாமோ

[நீலம் – கறுப்பு.]

குயில் பாடும்; கிளி பேசும். காக்கையைக் கூட்டிலே வளர்த்து அதற்குப் பாலும் பழமும் கொடுத்துக் கிளியைப் போலப் பேசும்படி பழக்க முடியுமோ? முடியாது! அவ்வாறுதானே,

இலக்கிய மலர்கள்

மீ. ப. சோமு



எருக்கிலைக்குப்
பாத்திகட்டி
எத்தனைப்பூப்
பூத்தாலும்
மருக்கொழுந்தின்
வாசமுண்டோ
மலைப்பழநி
வேலவனே!

என்று ஒரு நாட்டுப் பாடல் உண்டு. மருக்கொழுந்தின் வாசனையை நன்கு அனுபவிக்கும் ரசிகன் அல்லவா பழநியாண்டி! அவனையே பார்த்து மலையின் அடிவாரத்திலிருந்து குரல் கொடுக்கிறது இந்த நாட்டுப் பாடல்! எருக்கிலைக்கு எத்தனை விவசாயம் செய்தாலும் மருக்கொழுந்தாக மாறி விடுமா அது?

அவ்வையார் பாடுகிறார்:

ஆலைப் பலா ஆக்கல்
ஆமோ?

ஆலமரத்தைப் பலாமரமாகச் செய்து விட முடியுமா என்ன?

ஆலைப் பலா ஆக்க
லாமோ? அருங் கணங்கள்
வாலை நிமிர்க்க
வசமாமோ?

கருணையிலா
மூர்க்கரைச்சீ
ராக்கலா
மோ?

இரக்கமில்லாத மூர்க்கனைச் சீராக்க முடியாது. எத்தனை முயன்றாலும் அந்த மூர்க்கத்தனம் அவனை விட்டு அகலாது என்பது அவ்வையாரின் அனுபவ ஞானம்!

ஆலைப் பலாவாக்க
லாமோ அருங்கணங்கள்
வாலை நிமிர்த்த
வசமாமோ – நீலநிறக்
காக்கைதனைப் பேசவிக்க
லாமோ கருணையிலா
மூர்க்கரைச்சீ ராக்கலா
மோ!

''மோ'' என்று ஒரே வேகத்தோடு பாடல் ஓலமிட்டுக் கொண்டே முடிகிறது! ஆனாலும் உலகத்தின் முயற்சி முடிந்தபாடாக இல்லை! கிளிக் கூண்டிலே காகத்தை வளர்க்கிற பயிற்சி இன்னும் உலகில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது!

படித்துப் பாருங்கள்

இந்திய ஓவியம்

'ஓவியத்தை வெறுப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களை எனக்குப் பிடிக்கிறதில்லை. கடவுளை உணர வேறு ஒருவருக்கும் இல்லாத தனி வழி ஓவியனுக்கு இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.'

இப்படி அக்பர் கூறுவதாக அபுல் பசலின் கூற்று. உருவ வழிபாட்டை ஏற்காத இஸ்லாமிய மதம் தழுவிய முகலாய மன்னர்களே, இந்து மதம் தழுவும் ஓவியர்களின் உதவி கொண்டு எத்தனையோ அற்புதமான ஓவியங்கள் வரையச் செய்து இந்திய ஓவியச் செல்வத்தைப் பெருக்கியிருக்கிறார்கள்.

இந்த ஓவியக் கலை தோன்றிய வரலாற்றைக் கூறுவது எளிய காரியமன்று. எழுத்து தோன்றுவதற்கு முன்பு ஓவியங்கள்தான் கருத்துப் பரிமாறுதலுக்கு உதவியிருக்க வேண்டும். கைப்பழக்கமான ஓவியக் கலை தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு என்ற திசை வேறுபாடின்றி வளர்ந்து கொழித்த வரலாற்றை திரு மே. சு. இராமசுவாமி, தமது செந்தமிழ்ப் பழக்கத்தையும் சேர்த்துக் குழைத்து அழகான ஓவிய வரலாற்று நூலாகத் தந்திருக்கிறார். பண்டைய ஓவியங்களில் தொடங்கித் தற்கால ஓவியங்கள்வரை — வங்காள—கூர்ஜர—ரஜபுத்திர—மொகலாய ஓவியங்களின் இயல்புகளையும் நன்கு ஓர்ந்து விளக்கியிருக்கிறார், மாதிரிக்கு இந்திய ஓவியங்களின் 19 படங்களும் சிறப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றன. இந்தத் துறையில் தமிழுக்கு இது ஒரு முன்னோடி நூல் என்று கூறலாம்.

பிரசுரம்: வாசகர் வட்டம், 14, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை — 600017. விலை ரூ. 6.00.

நள்ளிரவில் சூரியன் ஒளிரும் நாடு

வட நார்வேயில் ஓர் அதிசயம். அங்கே சில மாதங்களில் நள்ளிரவிலும் சூரியனைக் காணலாம். இரவு பன்னிரண்டு மணிக்கும் மாலை நேரம்போல் இருக்கும். ஆகவே ஜன்னல்களுக்குத் திரைகள் போட்டுச் சூரிய ஒளியைத் தடுத்துக் கொண்டு மக்கள் உறங்குகிறார்கள். நள்ளிரவில் சூரியன் ஒளிரும் நார்வேயைப் பற்றி இதுபோன்ற பல ருசிகரமான தகவல்கள் இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ளன.

இந்திய சர்க்காரின் பரிசு கிடைத்துள்ள இந்த நூலைத் திரு நி. நாராயணன் எழுதியிருக்கிறார்.

பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை — 4; விலை ரூ. 1 00.

அனுசக்தி யோகம்

குரு க்ஷேத்திரத்திலே குருதித் தொடர்புடையவர்களுக்கிடையே நிகழ்ந்த போரில், பற்றும் பாசமும் காட்டி, நெறி தவறிவிடக் கூடாது என்பதற்காகக் கிருஷ்ண பரமாத்மா கீதோபதேசம் செய்தார். அந்தக் கீதை எத்தனையோ சிந்தனைச் செல்வர்களுடைய பேருரையையும் விளக்க உரையையும் பெற்றுப் புகழ் பூத்து நிற்கிறது.

போர்க் களத்திலே தோன்றிய இந்தப் பேருரை தனக்கு விளக்கவுரை எழுதியவர்களையும் ஏதாவது ஒரு போராட்டத்தில் சிக்க வைத்தே எழுதுவித்திருக்கிறது. காந்தியடிகளும் இதற்கு விதி விலக்கல்ல. சிறையில் நோன்பு இருந்தபோதுதான் கீதைக்கு விளக்கம் எழுதினார். அவர் தம் இயல்புக்கேற்ப அஹிம்சையும் சத்தியமுமே கீதையில் உள்ளுறை பொருளாக விரவிக் கிடப்பதைக் கண்டு அதையே எல்லோருக்கும் எளிய முறையில் வழங்கியுள்ளார். தஞ்சை, சர்வோதயப் பிரசுரத்தினர் காந்தி வழிச் செல்வர் ஸ்ரீ க. சந்தானத்தின் தமிழாக்கமாக இதைப் பிரசுரித்துள்ளார்கள்.

கிடைக்கும் இடம்: சர்வோதயப் பிரசுரம், தஞ்சாவூர், விலை ரூ. 2.00.

காதல் காவியம்

காதல் சுவை சொட்டும் பலவிதக் கவிதைகள் இந்த நூலில் காணப்படுகின்றன.

''நந்த வனத் தருகே
    நானொரு நாள் நிற்கையிலே
சிந்தை பதை பதைக்கப்
    பதற்றமுடன் வந்து நின்றாள்
சோகத் திரை படர்ந்த
    சொர்ண முக மலரில்,
நீலக் கருவிழிகள்
    நெருப் பெனவே மலர்ந்திருக்க''

என்று ''வயல்வெளிப் போர்'' என்னும் கவிதையை விறுவிறுப்போடு தொடங்கியிருக்கும் பாங்கு ஒன்றே போதும், இந்தக் கவிதை நூலை எடை போட.

டாக்டர் மு. வ., நாமக்கல் கவிஞர், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், டாக்டர் மெ. சுந்தரம் ஆகிய பெரும் புலவர்கள் பலர் பாராட்டியிருப்பதை விட நாம் புதிதாக இந்த நூலைப் பற்றி என்ன பாராட்டிவிட முடியும்?

ஆசிரியர்: திரு இ. க. முத்துசாமி; கிடைக்குமிடம்: பாரி நிலையம், சென்னை-1; விலை:ரூ. 2-50.

அதிசயம், ஆனால் உண்மை!

இந்த அவசர யுகத்தில் சிறு துணுக்குகளுக்கு அமோக கிராக்கி. அவ்வாறிருக்க, இரு ஆழி துணுக்குகளை வண்ணப் படங்களுடன் தருவது, போனஸ்.

ஒரு சோறு பதம் பார்க்கலாமா ?


பீட்டர் சக்கரவர்த்தியின் காலத்தில் ரஷ்யாவில் தாடி வைத்திருப்பவர்களுக்கு வரி விதிக்கப்பட்டது! பிரபுக்களின் தாடிக்கு ஒரு ரூபிள், சாதாரண மக்களின் தாடிக்கு ஒரு கோபெக். அப்படி வரி செலுத்தாதவர்கள் தாடியை எடுத்து விடக் கட்டாயப் படுத்தப்பட்டனர். தாடி வைத்துக் கொள்வது அப்போது உயர்ந்த கௌரவமாகக் கருதப்பட்டது. ஐந்தாவது பிலிப்பின் காலத்திலும் தாடிக்குப் பெருமை இருந்தது. தாடியை எடுத்து விட்டவர்கள் 'நாம் தாடியை இழந்துவிட்டோம், கூடவே ஆத்மாவையும் இழந்துவிட்டோம்' என்று வருத்தப்பட்டுக் கொண்டார்கள்.

நிறைய படங்களுடன்கூடிய இந்தத் துணுக்குகள் புத்தகத்தை எழுதியவர் ஆழி; படங்களும் அவருடையதே !

பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை - 4; விலை: ரூ. 3 00.

யோகம்

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசார்ய சுவாமிகள்




யோகம் என்றால் சுவாசத்தை அடக்கி அப்படியே சிலை மாதிரி உட்கார்ந்திருப்பது தான் என்று பொதுவாக நினைக்கிறார்கள். 'யோகம்' என்பதற்கு நேர் அர்த்தம் 'சேர்க்கை' என்பது. பல வஸ்துக்களோடு நாம் வாழ்க்கையில் சேர வேண்டியதாகிறது. ஆனால் இந்தச் சேர்க்கை எதுவும் நிரந்தரமாக இருக்கவில்லை. அதனால்தான் மனசு கிடந்து ஆடிக்கொண்டேயிருக்கிறது. இப்படியில்லாமல் முடிந்த முடிவான ஒரே வஸ்துவுடன் எந்த நாளும் சேர்ந்து விட்டோம் என்று ஆக்கிக் கொண்டு விட்டால் அதுவே யோகம். நம் மனசுகளுக்கெல்லாம் மூலமாக இருக்கிற பரமாத்மாதான் அந்த ஒன்று. மனசை மூலத்தில் திருப்புவதற்காகவே சுவாசத்தை அடக்குகிறார்கள். ஏனென்றால் எண்ணம் உதிக்கிற வேர் எதுவோ, அதுவேதான் சுவாசத்தின் வேரும் ஆகும். எனவே சுவாச மூலத்தில் நின்றால் மனமும் அடங்கிப் போகிறது.

யோகம் என்பதற்கு எதிர்ப் பதம் 'வியோகம்'. விட்டுப்போவதை 'வியோகம்' என்கிறோம். 'தேக வியோகம் ஆகிவிட்டார்' என்று சொல்கிறோம் அல்லவா?

ஒரு தினுசான வியோகம் வந்து விட்டால் அதுவே யோகம் ஆகிவிடும் என்று பகவான் கீதையில் சொல்கிறார். ஏதோ ஒன்றில் வியோகம் வந்தால் — அதாவது, எதுவோ ஒன்றை விட்டு விட்டால் — அதுவே யோகம் என்கிறார். அந்த ஒன்று என்ன? துக்கம் என்பதே. துக்கம் உன்னிடம் ஒட்டாமல் பிரித்துத் தள்ளிவிட்டால் அதுவே யோகம் என்கிறார். (தம் வித்யாத் து:க ஸம்யோக வியோகம் யோக ஸம்ஜ்ஞிதம்) லோக ரீதியில் நாம் சொல்கிற இன்பங்களும் கூட இந்தத் 'துக்க'த்தைச் சேர்ந்தனவே. பரமாத்மாவைப் பிரிந்திருக்கிற எல்லா அநுபவமுமே துக்கம்தான்.


சித்தம் ஓடிக் கொண்டே இருப்பதால்தான் இன்ப துன்ப அநுபவங்கள் ஏற்படுகின்றன. சித்தம் சஞ்சரிக்காமல் நிறுத்திவிட்டால் இவை இல்லை. ஒரே முனையைவிட்டு அகலாமல் —ஏகாக்ரம் என்று சொல்வார்கள் — அப்படியிருக்கச் சித்தத்தைப் பழக்குவதே சித்தசுத்தி. யோக சித்திக்கு இதுவே உபாயம். பொதுவாக நாம் 'யோகிகள்' என்று சொல்கிறவர்களைப்போல் எல்லோரும் ஆரம்பத்திலேயே சுவாசபந்தம் செய்து கொண்டு உட்காருவதற்கில்லை. ஏதாவது ஒரு நல்ல விஷயத்திலே நாம் பூரணமாக ஈடுபடப் பழகினால் அப்போது சித்தம் கூடியமட்டும் அழுக்குப்படாமல் இருக்கும். சித்தத்தை நேராக அடக்க முயன்றால் அது திமிரிக் கொண்டு நாலா திசையும் பாயத்தான் செய்யும். எனவே சித்தத்தில் கவனம் வைக்காமல் **ஏதாவது ஒரு நல்ல காரியத்தில் ஈடுபட்டு விட்டால்** அப்போது சித்தத்துக்குச் சஞ்சரிக்க இடம் குறைந்து போகும். பழைய நாளில் அரிகண்டம் என்று போட்டுக் கொள்ளுவார்கள். படுக்காமலே நியமமாக இருக்க வேண்டும் என்பதற்காகக் கழுத்திலே பெரிய கம்பி வளையம் போட்டுக் கொள்வார்கள். அதற்கு அரிகண்டம் என்று பெயர். ஒருத்தர் இதைப் போட்டுக் கொண்ட பின் இஷ்டப்பட்டால் கூடப் படுக்க முடியாது. அந்த மாதிரி, நம் சித்தத்தை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் போகாதபடி செய்வதற்கு அரிகண்டம் மாதிரி, சத்காரியங்களில் பூரணமாகத் தலையைக் கொடுக்க வேண்டும். அநேக நியமங்களோடு பெரிய யக்ஞம் செய்வது, விரதம் இருப்பது, பிரம்மாண்டமான கோயில் கோபுரங்களைப் பார்த்துப் பார்த்துக் கட்டுவது, குளம் வெட்டுவது என்றிப்படி யெல்லாம் முன்னே பல காரியங்களைச் செய்து வந்தார்களே, இவையெல்லாம் அந்தந்த இலட்சியத்தோடு நின்று விடவில்லை. இவற்றின் முக்கியமான இலட்சியம் சித்தத்தை ஒருமுகப்படுத்தி சுத்தமாக்கப் பழக்குவதேயாகும். இந்த சத்காரியங்களின் நடுவிலும் அநேக கஷ்டம், அநேக அவமானம் எல்லாம் வரத்தான் செய்யும். ஆனாலும் காரியத்தை முடித்தாக வேண்டும் என்பதால் அவற்றை யெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு மேலே போய்க் கொண்டேயிருப்பார்கள். இதுவே சித்த சுத்திக்கு நல்ல உபாயமாகும். அப்புறம் சுவாச பந்தம், தியானம் எல்லாம் வைத்துக் கொள்ளலாம். முடிவிலே, ஒரு கழுக்கோடி எப்படி எந்த அழுக்கிலும் பட்டுக்கொள்ளாமல் கிறுகிறு என்று உருளுகிறதோ — அந்தக் கழுக்கோடி மேல் நாம் கொஞ்சம் விபூதியைப் பூசினால் அதைக்கூட உதிர்த்துவிட்டு ஓடும்— அப்படி எந்த இன்ப துன்பத்திலும் ஒட்டாமல் பரமாத்மாவை நோக்கி ஓடி அவரைச் சேர்ந்து விடுவோம். இந்தச் சேர்க்கைதான் யோகம் என்பது.

நோய்களிலிருந்து குணம் பெற
உங்களுக்கு மருந்து தேவைப்படுகிறது.
இழந்த சக்தியை மீண்டும் பெற
உங்களுக்கு 'ஹார்லிக்ஸ்'
தேவைப்படுகிறது.



நோய்களினுல் பலஹீனமடையும் போது, உங்களுக்கு அதிக சக்தி தேவைப்படுகிறது. அதற்கு 'ஹார்லிக்ஸ்' தேவைப்படுகிறது. அது எளிதில் செரிக்கக் கூடியது. இழந்த சக்தியை மீண்டும் பெற வழி செய்து விரைவில் குணமடைய உதவுகிறது.

அதனுல்தான் சுமார் 100 வருடங்களாக நோயுற்றவர்களுக்கும், அதிலிருந்து குணமடைந்து வருபவர்களுக்கும் டாக்டர்கள் 'ஹார்லிக்ஸ்' சிபாரிசு செய்து வருகின்றனர்.





முழுமையான ஊட்டம்பெற-
'ஹார்லிக்ஸ்'

'ஹார்லிக்ஸ்'
பதிவு பெற்ற ட்ரேட்மார்க்

HL-5601A



அலை ஓசை

அமரர் கல்கி

19. "பாம்புக்கு வார்த்த பால்"

பட்டாபிராமனுடைய மாமியாரின் மனோரதம் வீண் போகவில்லை. தேவப்பட்டணத்து முனிசிபல் சேர்மன் பதவிக்கு நடந்த தேர்தலிலும் பட்டாபிராமனுக்கே வெற்றி கிடைத்தது. அந்த வெற்றி தனியாக வரவில்லை. இடி, மின்னல், பெருமழை, பிரளயம், இவற்றுடன் சேர்ந்து வந்தது.

சீதாவுக்கு ஏற்பட்ட மனச் சோர்வு இரண்டு மூன்று தினங்களில் மறைந்து போய் விட்டது. சரஸ்வதி அம்மாள் அடிக்கடி முணுமுணுத்ததைப் பொருட்படுத்தாமல் பட்டாபிராமனும் லலிதாவும் சீதாவை உற்சாகப்படுத்துவதில் முனைந்தார்கள். முதல் தேர்தலில் ஏற்பட்ட வெற்றிக்காக நடந்த உபசார விருந்துகளுக்கும் வாழ்த்துக் கூட்டங்களுக்கும் சீதாவையும் தவறாமல் உடன் அழைத்துப் போனார்கள். சென்ற இடங்களில் எல்லாம் சீதா தன்னுடைய கலகலப்பான சுபாவத்தினாலும் சாதுர்யமான பேச்சுக்களினாலும் அனைவரையும் குதூகலத்தில் ஆழ்த்தி வந்தாள். எதிரி மனப்பான்மை கொண்டவர்கள் சிலரும் பொறாமைக்காரர்களும் தங்களுக்குள் ஏதோ அப்படி இப்படி என்று பேசிக் கொண்டது உண்மைதான். ஆனால் அது ஒன்றும் பட்டாபிராமன் காது வரையில் வந்து எட்டவில்லை.

நாளாக ஆக, பட்டாபிராமனுக்குச் சேர்மன் பதவி நிச்சயம் என்று ஏற்பட்டது. சேர்மன் தேர்தல் தினம் நெருங்க நெருங்க, பட்டாபிராமன், லலிதா, சீதா — ஆகிய இவர்களின் உற்சாகமும் உச்சத்தை அடைந்து வந்தது.

ஆனால் குறிப்பிட்ட தேதிக்குச் சரியாக இரண்டு நாட்கள் இருக்கும்போது, லலிதாவின் தலையில் இடி விழுந்தது போன்ற ஒரு திடுக்கிடும் சம்பவம் ஏற்பட்டது.

அன்று காலையில் பட்டாபிராமன் வெளியிலே போயிருந்தான். சீதா தன்னுடைய மாடி அறையில் உட்கார்ந்து ஏதோ கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள்.

அச்சமயம் தபால்கள் வந்தன. லலிதா தபால்களை வாங்கிக் கொண்டு வந்து பட்டாபிராமனுடைய மேஜையின் மேல் வைத்தாள். பிறகு தனக்கு ஏதேனும் கடிதம் உண்டா என்று பார்ப்பதற்கு அசிரத்தையாகத் தபால்களைப் புரட்டினாள். அவளுடைய பெயருக்கு ஒரு கடிதம் இருந்தது. சாதாரணமாய் விலாசத்தைப் பார்த்ததும் யாரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது என்று அவளுக்குத் தெரிந்துவிடுவதுண்டு. ஏனெனில் அவள் பெயருக்குக் கடிதம் எழுதக்கூடியவர்கள் வெகுசிலர்தான். சூரியா ஒருவன். சீதா டில்லியிலிருந்தபோது அடிக்கடி எழுதுவாள். கல்கத்தாவிலிருந்து சித்ரா எழுதுவாள். இன்னும் இரண்டொருவர்தான். ஆனால் இந்தக் கடிதத்தின் மேல் விலாசத்திலிருந்து அதை எழுதியது யார் என்று தெரியவில்லை. ஆகையால் வழக்கத்தைக் காட்டிலும் சிறிது ஆர்வத்துடனேயே உறையை உடைத்தாள். ஏனோ தெரியவில்லை; அவளுடைய நெஞ்சம் கொஞ்சம் பலமாகவே அடித்துக் கொண்டது.

உறைக்குள்ளே கடிதம் ஒன்றுமில்லை. அதற்குப் பதிலாக அச்சடித்த பத்திரிகைத் துண்டு ஒன்று இருந்தது. லலிதா திரும்பவும் உறைக்குள் பார்த்தாள். மடித்திருந்த பத்திரிகைத் துண்டைப் பிரித்து அதற்குள் ஏதாவது கடிதம் இருக்கிறதோ என்று பார்த்தாள். தவறிக் கீழே விழுந்திருக்கிறதோ என்று பார்த்தாள். இல்லையென்று நிச்சயமாயிற்று. 'ஏதோ தவறுதலாகக்


கூடித்தை வைப்பதற்குப் பதில் இந்தப் பத்திரிகையை வைத்துவிட்டாற்போல் இருக்கிறது. அப்படி வைத்தது யாராக இருக்கும்?' என்று எண்ணிக்கொண்டே அச்சுத் தாளைப் பார்த்தாள். அதில் கொட்டை எழுத்தில் போட்டிருந்த ஒரு தலைப்பு அவளுடைய கண்ணையும் கவனத்தையும் கவர்ந்தது. ''பட்டாபிராமன் லீலைகள்'' என்ற அந்தத் தலைப்பைப் பார்த்ததும் அவளுடைய மனம் பதறியது; உடம்பு நடுங்கியது. இரண்டு வரிகள் படித்ததும் பதறலும் நடுக்கமும் அதிகமாயின. அதற்கு மேல் அங்கேயிருந்து படிக்கக் கூடாது என்று தோன்றியது. ஒருவேளை பட்டாபிராமன் அங்கு வந்து விட்டால்? அல்லது சீதா தான் வந்துவிட்டால்? அவர்களுடைய கண்களிலே இது படக் கூடாது! நிச்சயமாய்க் கூடாது! ஆகையால் அந்தப் பத்திரிகைத் துண்டை எடுத்துக் கொண்டு தன் அறைக்குள் ஓடிச் சென்று கதவையும் தாள் போட்டுக் கொண்டாள். ஜன்னல் ஓரமாக நின்று படித்தாள். பாதிக்கு மேல் படிக்க முடியவில்லை. கண்களில் கொதிக்கும் வெந்நீரைப் போன்ற உஷ்ணத்துடன் கரகர வென்று ஜலம் கொட்டத் தொடங்கிக் கண்களை அடியோடு மறைத்துவிட்டது. அடிவயிற்றிலிருந்து வெப்பமான புகை போல் ஏதோ கிளம்பி மாரை அடைத்துக் கொண்டு மேலேறி மூச்சுத் திணறும் படி செய்து தலைக்குள்ளே பிரவேசித்தது. தலை கிறுகிறுவென்று சுழலத் தொடங்கியது. மயக்கம் வந்து கீழே தள்ளிவிடுமோ என்று தோன்றியது. அந்த நிலைமையில் லலிதா ஆச்சரியமான மனேதிடத்துடன் அந்தப் பத்திரிகைத் துண்டைத் தன் பெட்டிக்குள்ளே வைத்துப் பூட்டினாள். பிறகு கட்டிலின் மேலே மெத்தையின் மீது தொப்பென்று விழுந்தாள். சிறிது நேரம் கண்ணீர் ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து நின்றது. மனமும் தெளிவடைந்தது. 'சீச்சீ! யாரோ அயோக்கியன், பொறாமைக்காரன், எதையோ கன்னா பின்னாவென்று எழுதி அச்சுப் போட்டு விட்டதற்காக நம்முடைய மனத்தை மீற விட்டுவிடலாமா?' என்று எண்ணி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். பிறகு எழுந்து கண்களையும் முகத்தையும் நன்றாகத் துடைத்துக் கொண்டு நிலைக்கண்ணாடியில் பார்த்து, நெற்றிப் பொட்டையும் சரிப்படுத்திக் கொண்டு அறையைவிட்டு வெளியேறினாள். ''அம்மா! சமையல் ஆகிவிட்டதா? அவர் வரும் நேரமாகிவிட்டதே!'' என்று கேட்டுக் கொண்டு சமையல் அறைக்குச் சென்ற லலிதாவின் முகத்திலோ குரலிலோ சற்றுமுன் அவள் அநுபவித்த கொடிய வேதனைக்கு அடையாளம் கொஞ்சம்கூட இருக்கவில்லை.

இப்படி லலிதாவுக்கு நரக வேதனை அளித்த விஷயம் என்னவென்று கேட்டால்:

கொஞ்சகாலமாகத் தேவப்பட்டணத்தில் 'மஞ்சள் பத்திரிகை' ஒன்று நடமாடிக் கொண்டிருந்தது. அதில் அந்த ஊர்ப் பிரமுகர்களுடைய சொந்த வாழ்க்கையில் உள்ள ஊழல்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது என்னும் வியாஜத்தில் சொல்லவும் எழுதவும் தகாத ஆபாச விஷயங்களை யெல்லாம் எழுதித் தள்ளிக் கொண்டிருந்தார்கள். அந்த ஆபாசப் பத்திரிகை பெரும்பாலும் இரகசியமாகப் பரவிக் கொண்டிருந்தது. நல்ல மனிதர்கள், நாகரிகமான மனிதர்கள் அதை வாங்குவதற்கும் படிப்பதற்கும் லஜ்ஜைப்பட்டார்கள். ஆயினும் பலருடைய மனத்தில் தங்களைப் பற்றி ஏதாவது அவதூறு வந்திருக்கிறதோ என்ற பீதி குடிகொண்டிருந்தது. சிலர் அந்த ஆபாசப் பத்திரிகையை இரகசியமாக வாங்கிப் படிப்பதும், மற்றவர்களைப் பற்றிக் கேவலமாக எழுதியிருப்பதைப் படித்து சந்தோஷப்படுவதும், தங்களைப் பற்றி எழுதியிருப்பதைப் படித்துவிட்டு அவஸ்தைப்படுவதும், அதை வேறு யாரும் படிக்காமல் இருக்க வேண்டுமே என்று கவலைப்படுவதுமா யிருந்தார்கள்.

இந்த முட்டாள்தனப் படுகுழியில் விழாதிருந்தவர்களில் பட்டாபிராமன் ஒருவன். அந்தப் பத்திரிகையை அவன் பார்த்ததுமில்லை; படித்ததும் இல்லை. யாராவது அதைப் பற்றி பிரஸ்தாபித்தாலும் உடனே அவன் தன்னுடைய அருவருப்பை வெளியிட்டு அந்தப் பேச்சை அடக்கிவிடுவான். ஆகவே பட்டாபிராமனுடைய வீட்டுக்குள்ளே அந்த மஞ்சள் பத்திரிகை அதுவரையில் பிரவேசியாமல் இருந்ததில் ஆச்சரியம் இல்லையல்லவா?

அந்த மாதிரி ஓர் ஆபாசப் பயங்கரப் பத்திரிகை நடந்து வருகிறதென்று லலிதா பராபரியாகக் கேள்விப்பட்டிருந்தாள். அவளுக்குத் தெரிந்த இரண்டொரு மனிதர்களைப் பற்றி அதில் கேவலமாக எழுதியிருந்ததென்பதும் அவள் காதில் விழுந்திருந்தது. அதையெல்லாம் கேட்டபோது, 'இதுவும் ஒரு பத்திரிகையா? இப்படியும் எழுதுவதுண்டா?' என்று அவள் ஆச்சரியப் பட்டதுண்டு. ஆனல் இப்போது அந்தப் பத்திரிகையிலிருந்து வெட்டி எடுத்த



துண்டைத் தானே படித்துப் பார்க்க நேர்ந்தபோது அவள் ஆச்சரியப்பட முடியவில்லை. ஆச்சரியத்துக்குப் பதிலாக ஆத்திரமும் துயரமும் அளவில்லாத குரோதமும் பொங்கி எழுந்து அவளைத் திக்குமுக்காடும்படி செய்தன.

கர்ம சிரத்தையாக யாரோ வெட்டி எடுத்து அவளுக்கு அனுப்பியிருந்த பத்திரிகைப் பகுதியில் பட்டாபிராமனும் சீதாவும் காதலர்கள் என்றும், சீதாவை வீட்டில் வைத்துக் கொண்டிருக்கும் லலிதா ஒரு முழு மூடம் என்றும், இப்பேர்ப்பட்ட ஒழுக்கத்தில் சிறந்த பட்டாபிராமனைத்தான் தேவப்பட்டணத்து மகாஜனங்கள் நகரசபைத் தலைவராகப் பெறும் பாக்கியத்தை அடையப் போகிறார்கள் என்றும் எழுதியிருந்தது. கட்டுரையில் பாதி வரையில் இந்த அருமையான விஷயங்கள் இருந்தன. அதற்கு மேலே படிக்க முடியாமல் லலிதா நிறுத்திவிட்டாள். ஆனால் அந்த ஆபாசக்

குப்பையை உடனே தீயில் போட்டுக் கொளுத்தாமல் பெட்டிக்குள் பூட்டி வைத்த காரணம் என்ன? அவளுடைய அந்தரங்கத்துக்கும் அவளைப் படைத்த கடவுளுக்குந்தான் தெரியும் !

பத்திரிகையைப் படித்த உடனே ஏற்பட்ட முதல் உணர்ச்சிக்கும் வேதனைக்கும் பிறகு லலிதாவின் பேச்சும் நடவடிக்கையும் முன்னைக் காட்டிலும் அதிக உற்சாக மயமாயிருந்தன. அத்தகைய ஒரு பயங்கரமான விஷயத்தைப் படித்த பிறகும் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமல் முன்மாதிரியே நடந்து கொள்கிறாளே என்னும் எண்ணம் அவனுக்கு எக்களிப்பை ஊட்டியது. அவளுடைய நடத்தையில் காணப்பட்ட அதிகப்படி குதூகலத்தைத் தேர்தல் தினம் நெருங்கியதால் ஏற்பட்டது என்று மற்றவர்கள் எண்ணினார்கள்.

ஆனால் யாரேனும் கூர்ந்து கவனித்திருக்கும் பட்சத்தில் லலிதா வெளிக்கு எவ்வளவு குதூகலத்தைக் காட்டினாலும் அவளுடைய மனத்தில் ஏதோ ஒரு வேதனை அரித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்திருப்பார்கள். அதோடு சீதாவின் விஷயத்தில் அவள் நடந்து கொண்டதிலும் ஒரு மாறுதல் இருப்பதைக் கண்டிருப்பார்கள்.

இந்த நிலைமையில் சேர்மன் தேர்தல் நாளும் வந்தது. தேர்தலும் நடந்தது. பட்டாபிராமன் மகத்தான வெற்றியை அடைந்தான். அது காரணமாக மறு தடவை தேவப்பட்டணம் அல்லோலகல்லோலப்பட்டது. பொதுஜன வெற்றிக் கொண்டாட்டங்கள் எல்லாம் முடிந்த பிறகு முக்கியமான நண்பர்கள் பட்டாபியின் வீட்டுக்கு வந்து வெகு நேரம் இருந்து பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போனார்கள். இன்றைக்கும் ஸ்ரீமதி சீதாதேவி வெற்றிக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. நண்பர்கள் கூட்டத்தின் நடுவே லலிதாவும் இன்றைக்கு வரவில்லை. இதைப் பற்றி ஒரு நண்பர் பிரஸ்தாபித்தபோது இன்னொருவர் அவர் தோளைத் தொட்டுத் தம்முடைய மூக்கின் பேரில் விரலை வைத்து எச்சரித்தார். "நீச மனிதர்களின் அவதூறுகளையெல்லாம் நாம் பொருட்படுத்தக் கூடாது. பொருட்படுத்தினால் அந்த நீசர்களுக்குத்தான் கௌரவம் கொடுத்ததாக முடியும். இந்த விஷயத்தை வீட்டுப் பெண்களுக்கும் சொல்லி வைக்க வேண்டும்!" என்று மற்றொரு நண்பர் கூறினார். இதெல்லாம் பட்டாபிராமனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "எதைப் பற்றிப் பேசுகிறீர்கள் ?" என்று பட்டாபிராமன் கேட்டதற்கு, "அந்த 'அல்கா' விஷயங்கள் இந்தச் சந்தோஷ சமயத்தில் என்னத்துக்கு?" என்று இன்னொருவர் சொல்லி முடித்துவிட்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் பட்டாபிராமனைத் தனியே விட்டுவிட்டுச் சிநேகிதர்கள் போய்ச் சேர்ந்தார்கள்.

நண்பர்கள் இருக்கும் போதே பட்டாபிராமனின் எண்ணம் அடிக்கடி லலிதா — சீதாவின் பேரில் சென்று கொண்டிருந்தது. இரண்டு பேருக்கும் இன்றைக்கு என்ன வந்துவிட்டது என்று ஆச்சரியப்பட்டான். நண்பர்கள் போன பிறகு, "லலிதா!" "லலிதா!" என்று கூப்பிட்டான். அதற்குப் பிறகு லலிதா, "சாப்பிடப் போகலாமா?" என்று கேட்டுக் கொண்டே அறைக்குள் வந்து சேர்ந்தாள்.

அவசரமாகக் கண்ணைத் துடைத்துக் கொண்டு வந்தவளின் முகம் போல் அவள் முகம் காணப்பட்டது. "இது என்ன ? முகம் ஏன் அழுது வடிகிறது ? நான் ஜயித்துவிட்டேனே என்று ஒரு குரல் அழுதாயா, என்ன!" என்று பட்டாபிராமன் காரமாகக் கேட்டான்.

"நான் ஒன்றும் அழவில்லை. என் முகத்தைப் பார்த்தால் உங்களுக்கு ஒருவேளை அழுது வடிகிறதுபோலத்தான் இருக்கும்!" என்று லலிதாவும் குரோதமாகப் பதில் சொன்னாள்.

"உங்கள் எல்லோருக்கும் இன்றைக்கு என்ன வந்துவிட்டது?" என்று பட்டாபிராமன் கேட்டான்.

"உங்கள் எல்லோருக்கும் என்று யாரைச் சொல்கிறீர்கள்? என் ஒருத்தி விஷயந்தான் எனக்குத் தெரியும் !" என்றாள் லலிதா.

"யாரைப் பற்றிக் கேட்கிறேன் என்று உனக்குத் தெரியவில்லையா? உன் அருமைத் தோழி சீதாவைப் பற்றித்தான் கேட்கிறேன்."

"அவள் என் அருமைத் தோழி இல்லை. ஒரு வேளை உங்கள்...."

"யாருடைய தோழியாக இருந்தாலும் இருக்கட்டும். அவளுக்கு என்ன வந்துவிட்டது? அன்றைக்கு நான் ஜயத்துடன் வந்தபோதும் மச்சுக்குப் போய்க் குப்புறப்படுத்துக் கொண்டிருந்தாள். இன்றைக்கும் அப்படியே செய்கிறாளா?" என்றான் பட்டாபிராமன்.


"அவள் சமாசாரம் எனக்குத் தெரியாது. நீங்களே கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்."

"உனக்கும் இன்றைக்கு உடம்பு சரியில்லை போலிருக்கிறது. ஒரு வேளை உன் அம்மாவுக்கு ஏதாவது தெரியுமோ என்று கேள். இன்றைக்கு ஏதாவது பல



விட்டமின்கள் மற்றும்
தாதுப் பொருட்களுக்கான
'உணர முடியாப் பசி' உங்களுக்கு
சோர்வும், எரிச்சலும் ஊட்டுகிறது...

வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக்
மட்டுமே 12 இன்றியமையாத சத்துக்களை அளிக்கிறது
அந்த 'உணர முடியாப் பசி'யைத் தீர்ப்பதற்கு



உங்கள் உடலில் விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் முக்கிய சத்துக்களுக்கான பசி நிரந்தரமாக இருக்கிறது என்பதை எந்த டாக்டரும் கூறுவார். இந்த 'உணர முடியாப் பசி'யின் விளைவு— சோர்வு, எரிச்சல், இருப்புக் கொள்ளாமை, பசியின்மை, ஜீரண சக்தி குறைவு.

எல்லா சத்துக்களும் அடங்கிய வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் சாப்பிட்டு 'உணர முடியாப் பசி'யைப் போக்குங்கள். அதில் 12 முக்கிய சத்துக்கள் உள்ளன: வளர்ச்சிக்கும், வலிமைக்கும் விட்டமின்கள்; இரத்த விருத்திக்கு இரும்புச் சத்து; நல்ல பசியெடுக்க எல்லாப் பொருட்களும்; நரம்புகளுக்கு உரமூட்ட ஃபாஸ்ஃபேட்டுக்கள்.

சிந்தித்துப் பாருங்கள்; உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கு வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் தேவை, இன்றே!

இரண்டு அளவுகளில் கிடைக்கிறது:
250 ml., 470 ml.



ஒரு தரமான வார்னர் லாம்பர்ட் தயாரிப்பு

WVT-G-7 TH

மாக மண்டகப்படி செய்தாளோ, என்னமோ ?''

''என் அம்மாவின் தலையை ஏன் உருட்டுகிறீர்கள்? அவள் ஒருவரையும் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. நாளைக்கே அவளை ஊருக்குப் போய் விடச் சொல்கிறேன். நானும் வேணு மானாலும் போய்விடுகிறேன். எந்த நாய் இந்த வீட்டில் இருக்க வேண்டுமோ, இருக்கட்டும்.''

பட்டாபிராமன் லலிதாவை எரித்து விடுகிறவனைப் போல் பார்த்தான். அடுத்த நிமிஷம், 'இந்த அசட்டுச் சண்டையை வளர்த்துவதில் பிரயோஜனமில்லை' என்று தீர்மானித்தவனாய்ச் சமையலறையை நோக்கி நடந்தான். சில நாட்களாக அவனுடைய மனத்தில் ஒரு சந்தேகம் தோன்றிக் கொண்டிருந்தது. தன் மாமியார் சீதாவைப் பற்றி அடிக்கடி நிந்தனை பேசி நிஷ்டூரம் சொல்கிறாள் என்றும் அதற்கு லலிதாவும் இடம் கொடுத்துவருகிறாள் என்றும் ஐயங்கொள்ள ஏதுக்கள் இருந்தன. அந்தச் சந்தேகம் இப்போது உறுதிப்பட்டது. நேற்று வரையில் நல்ல உற்சாகத்துடன் இருந்தவள் இன்றைக்கு மச்சிலிருந்து கீழே இறங்காமல் இருக்கும் காரணம் என்ன? சீதாவின் காது கேட்கத் தன் மாமியார் ஏதோ நிந்தைமொழி சொல்லியிருக்க வேண்டும். அதைக் குறித்துச் சீதா லலிதாவைக் கேட்டிருக்கலாம். லலிதா தன் தாயாருக்குப் பரிந்து பேசியிருக்கலாம். சீதா மனம் நொந்துபோயிருக்கிறாள். — வேறு காரணம் ஒன்றும் இருப்பதற்கில்லை. உண்மை அப்படி இருப்பதினாலேதான் லலிதாகூட இன்றைக்குச் சீதாவைப் பற்றிக் கடுமொழி பேசுகிறாள். ஐயோ! பாவம்! அநாதை சீதா இவர்களுடைய வாயில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள். மாமியார் ஒரு ராட்சஸி என்பதில் சந்தேகமில்லை. தன்னிடம் அவள் பயபக்தியுடன் இருப்பதாக நடிப்பதெல்லாம் வெறும் பாசாங்கு. ராட்சஸியின் பெண்ணிடம் ராட்சஸ குணம் இல்லாமற் போகுமோ? தாடகையும் சூர்ப்பனகையும் போன்ற இரண்டு ராட்சஸிகளிடம் அகப்பட்டுக் கொண்டு பேதை சீதா தவிக்கிறாள். அடாடா! அவளுடைய தலைவிதியை என்னவென்று சொல்லுவது? அங்கே தாலி கட்டிய புருஷன்தான் பரம முட்டாளாயிருக்கிறான். பெண்டாட்டியைத் திண்டாட விட்டுவிட்டுக் கெட்டலைகிறான் என்றால், தஞ்சம் புக வந்த இடத்திலும் சீதாவுக்கு இந்தக் கதியா நேர வேண்டும்? அதிலும் அவளால் தனக்கு ஏற்பட்டிருக்கும் நன்மைகளையெல்லாம் உத்தேசிக்கும்போது, தன்னுடைய சொந்த வீட்டில் அவளுக்கு அவமதிப்பும் மனத்துயரமும் ஏற்படலாமா? கடவுளுக்கு அடுக்குமா?

இப்படியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே பட்டாபிராமன் சாப்பிட்டு முடித்தான். லலிதாவுடன் ஒரு வார்த்தையும் பேசவில்லை. சாப்பிட்டானதும் படுக்கை அறைக்குள் சென்று கட்டிலின் மீது விரித்திருந்த படுக்கையில் படுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் லலிதா வந்து சேர்ந்தாள். அவள் வந்ததையே கவனியாதவன் போல் இருந்தான் பட்டாபிராமன். ஐந்து நிமிஷம் சும்மா இருந்து பார்த்துவிட்டு, ''ஏன்னா? என் பேரில் ஏதாவது கோபமா?'' என்று லலிதா கேட்டாள்.

''கோபம் என்ன வந்தது, கோபம்!'' என்றான் பட்டாபிராமன்.

''கோபம் இல்லாததற்கு அடையாளமா இப்படி வெடுக்கென்று பேசுகிறீர்கள்?''

''முட்டாள்கள் நிறைந்த இந்த வீட்டில் வேறு எப்படிப் பேசுவது?'' என்றான் பட்டாபிராமன்.

லலிதா சற்று நேரம் சும்மா இருந்துவிட்டு, ''ஏன்னா? இன்று நடந்த சேர்மன் எலெக்ஷனில் உங்களுக்கு எவ்வளவு வோட்டு? எதிரிக்கு எவ்வளவு வோட்டு?'' என்று கேட்டாள்.

''எவ்வளவு வோட்டாயிருந்தால் உனக்கு என்ன?''

''எனக்கு ஒன்றும் இல்லையா?''

பட்டாபிராமன் மௌனம் சாதித்தான்.

''உங்களுடைய ஜயத்தில் எனக்கு ஒன்றும் பாத்தியதை கிடையாதா? நிஜமாக என்னைப் பார்த்துச் சொல்லுங்கள்!''

''பாத்தியதை உள்ளவளைப் போல் நீ நடந்து கொண்டாயா?''

''என்னவிதத்தில் நடந்துகொள்ளவில்லை? சொல்லுங்களேன்!''

''எனக்கு இன்றைக்குச் சேர்மன் பதவி கிடைத்தது. இனி மூன்று வருஷங்களுக்கு இந்த ஊருக்கே நான் ராஜா மாதிரி. அவ்வளவு பெரிய வெற்றியுடன் நான் இன்று வீட்டுக்குத் திரும்பி வந்தேன். நீ எப்படி என்னை வரவேற்றாய்? அழுது வடிய முகத்தைக் காட்டிக் கொண்டு நின்றாய்!''

''என் முகத்தில் எப்போதும் இருக்கிற இலட்சணந்தானே இருக்கும்? புதிதாக எப்படி வந்துவிடும்?''

''இலட்சணத்தைப் பற்றி இப்போது யார் என்ன சொன்னார்கள்? நீ சந்தோஷமாக என்னை வரவேற்றாயா என்று கேட்டேன்.''

''நான் சந்தோஷமாகத்தான் இருந்தேன். உங்களுக்கு அழுது வடிகிறது போலத் தோன்றியது. சீதா சந்தோஷமாக வந்து வரவேற்கவில்லையே என்று உங்களுக்குக் கோபம். அந்தக் கோபத்தை என்மேல் காட்டினீர்கள்.''

''அப்படித்தான் வைத்துக் கொள்.''

''அந்த நீலி மாடி அறையில் குப்புறப் படுத்துக் கொண்டு அடம் பிடித்தால் அதற்கு நான் என்ன செய்வேன்?''

''அவளை சாக்ஷாத் லக்ஷ்மி என்றும் சரஸ்வதி என்றும் நீதான் சொல்லிக் கொண்டிருந்தாய். இப்போது நீலியாகி விட்டாளா?''

''நான் கபடமில்லாதவள்; அவளையும் என்னைப் போல் நல்லவள் என்று நம்பி ஏமாந்து போய்விட்டேன்.''

''அவள் நல்லவள் இல்லை — கெட்டவள் என்று எப்போது தெரிந்தது?''

லலிதா மௌனம் சாதித்தாள்.

''நேற்று வரையிலேகூட உற்சாகமாக இருந்தாளே? இன்றைக்குத் திடீரென்று அவளுக்கு என்ன வருத்தம் வந்து விட்டது?'' என்று பட்டாபிராமன் மறுபடியும் கேட்டான்.

''எனக்கு என்னமாய்த் தெரியும்? என்னிடம் அவள் சொல்லவில்லை!'' என்றாள் லலிதா.

''நீயே யோசித்து உத்தேசமாகச் சொல்லேன், பார்க்கலாம்.''

''அவளுக்கும் புருஷன், குழந்தை, குடும்பம் உண்டு அல்லவா? அவர்களோடு போய்ச் சேர வேண்டும் என்ற எண்ணம் வந்திருக்கும்.''

''அவள் போவதை யார் வேண்டாம் என்றார்கள்?''

''வேண்டாம் என்று சொல்லாதிருந்தால் போதுமா? புறப்பட்டுப் போவதற்கு ஏதாவது வழி செய்து கொடுத்தால்தானே போவாள்? அதைத்தான் அம்மாவும் சொல்கிறாள்!''

பட்டாபிராமன் மௌன சிந்தனையில் ஆழ்ந்தான். ஆஹா! நாம் சந்தேகித்தது சரிதான். மாமியாரின் வேலைதான் இது! பெண்ணின் மனத்தையும் கெடுத்திருக்கிறாள்! இரண்டு பேரும் சீதாவை ஏதோ சொல்லியிருக்கிறார்கள்! இந்தப் பரிதாபத்துக்கு என்ன பரிகாரம்? கணவனால் கைவிடப்பட்ட அந்த அநாதைக்கு என்ன கதி?

''ஏன்னா? 'யமதூதன்' என்கிற பத்திரிகையை நீங்கள் பார்த்தீர்களா?'' என்று லலிதா கேட்டதும் பட்டாபிராமன் திடுக்கிட்டான். தன்னை வீட்டுக்குக் கொண்டுவிட வந்திருந்த நண்பர்கள் ஏதோ ஜாடைமாடையாகச் சொன்னது ஞாபகம் வந்தது. ஓகோ! அப்படியா சமாசாரம்? அந்தக் குப்பைப் பத்திரிகையில் ஏதோ எழுதியிருக்கிறதாக்கும்! அதை மெனக்கெட்டு யாரோ வந்து லலிதாவிடம் எடுத்துச் சொல்லி அவளுடைய மனத்தைக் கெடுத்திருக்கிறார்கள்!

''நான் கேட்டதற்கு நீங்கள் பதில் ஒன்றும் சொல்லவில்லையே?'' என்று லலிதா தூண்டினாள்.

''அந்தக் கந்தலை நான் படிக்கவில்லை; படிக்கப் போவதுமில்லை.''

''நீங்கள் படிக்காவிட்டால் ஊரெல்லாம் படிக்கிறார்கள். பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் அஸ்தமித்துப் போய்விடுமா?''

''ஏது? பேச்சு ரொம்பப் பலமாயிருக்கிறதே! நீ இருக்கிற வரையில் உலகம் அஸ்தமிக்காது!''

''உங்களுக்கு என்னைக் கேலி செய்யத்தான் தெரியும். ஊரெல்லாம் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது.''

''ஊரெல்லாம் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறதா? எதற்காக?''

'' 'யமதூதன்' பத்திரிகையில் எழுதியிருப்பதைப் பற்றித்தான். அண்டை வீட்டு அம்மாமி, எதிர்வீட்டு அம்மாமி எல்லோரும் என்னிடம் வந்து சொல்லிவிட்டுப் போனார்கள். ஊரெல்லாம் தெரிந்துதானிருக்கிறது. உங்களுக்கு மட்டுந்தான் தெரியாது.''

''அப்படியா சமாசாரம்? 'யமதூதன்' பத்திரிகையில் அப்படி என்னதான் எழுதியிருக்கிறதாம்? உனக்குத் தெரியுமா விஷயம்?''

''எல்லாம் தெரியும்.''

''அப்படியானால் சொல்லேன்.''

''வாயினால் சொல்லவே முடியாது. அவ்வளவு அசிங்கமான விஷயம். அவரவர்களே படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.''

பட்டாபியின் மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. ''அந்தப் பத்திரிகை உன்னிடம் இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''இருக்கிறது'' என்றாள் லலிதா.

பட்டாபிராமனுக்கு அளவில்லாத கோபம் வந்தது. காரியார்த்தமாகக் கோபத்தை அடக்கிக் கொண்டு, ''எங்கே? அதைப் போய் எடுத்து வா, பார்க்கலாம்?'' என்றான்.

''இங்கேதான் இருக்கிறது!'' என்று சொல்லிவிட்டு லலிதா மின்சார விளக்கை ஏற்றிப் பெட்டியைத் திறந்து

அந்தப் பத்திரிகைத் துண்டை எடுத்துக் கொடுத்தாள்.

பட்டாபிராமன் எழுந்து நின்றவண்ணம் அதைப் படித்தான். படிக்கும்போது அவனுடைய ரத்தம் கொதித்தது என்றால் அது மிகையாகாது. அந்தக் கந்தல் பத்திரிகையில் அச்சாகியிருந்த ஆபாசக் கட்டுரையின் முதற் பகுதியில் பட்டாபிராமனும் சீதாவும் கள்ளக் காதல் செய்வதாகவும் லலிதா சுத்த முழு மூடம் என்றும் கண்டிருந்தது. பிற்பகுதியில் சூரியாவுக்கும் சீதாவுக்கும் ஏற்கனவே இருந்த நேசத்தைப் பற்றியும் சூரியா சீதாவுக்காக அவளுடைய கணவனிடம் தூது சென்றது பற்றியும், சௌந்தரராகவன் தூதனைச் செம்மையாக உதைத்து அனுப்பிவிட்டது பற்றியும் எழுதியிருந்தது.

பல்லைக் கடித்துக் கொண்டு எல்லாவற்றையும் படித்து முடித்த பிறகு, ''நெருப்புப் பெட்டி இருக்கிறதா?'' என்று பட்டாபிராமன் கேட்டான்.

''எதற்கு?'' என்றாள் லலிதா.

''கொடு, சொல்கிறேன்!''

லலிதா எடுத்துக் கொடுத்தாள்.

நெருப்புக் குச்சியைக் கிழித்து அந்தப் பத்திரிகைத் துண்டைப் பட்டாபிராமன் கொளுத்தப் போனான்.

''ஐயையோ! அதைக் கொளுத்தாதீர்கள்!''

''ஏன்?''

''அதில் பாதிதான் படித்திருக்கிறேன். பாக்கிப் பாதி படிக்க வேண்டும்'' என்றாள் லலிதா.

''அது வேறேயா?'' என்று சொல்லிக் கொண்டே பட்டாபி அதைக் கொளுத்திச் சாம்பலாக்கினான்.

''அது என்ன அவ்வளவு அவசரம்? நான் சொன்னது உங்களுக்கு இலட்சியமில்லையா? குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது சரியாயிருக்கிறதே!''

பட்டாபிராமன் லலிதாவிடம் நெருங்கி வந்து பளீரென்று, அவளுடைய கன்னத்தில் ஓர் அறை கொடுத்தான். ''இந்தக் குப்பையையெல்லாம் வாங்கவும் கூடாது; படிக்கவும் கூடாது என்று நான் சொல்லவில்லையா? நீ என்னமாய்த் துணிந்து வாங்கினாய்?'' என்றான்.

லலிதா திக்பிரமையிலிருந்து விடுபட்டு, தேம்பிக் கொண்டே ''நான் ஒன்றும் வாங்கவில்லை; தபாலில் வந்தது'' என்றாள்.

''தபாலில் அனுப்பியது யார்?''

''யாரோ தெரியாது.''

''இந்த மாதிரி ஒன்று தபாலில் வந்ததும் ஏன் என்னிடம் சொல்லவில்லை? பெட்டிக்குள்ளே வைத்து எதற்காகப் பூட்டினாய்? இது பொக்கிஷமா வைத்துப் பாதுகாப்பதற்கு?''

''அப்புறம் சாவதானமாகச் சொல்லலாம் என்று இருந்தேன்.''

''அப்புறமாவது சொல்லவாவது? தரித்திரம் பிடித்த மூதேவி நீ! உன் மனசு அசிங்கத்துக்கு ஆசைப்படுகிறது. ஆகையினாலேதான் இதைப் பெட்டியில் வைத்துப் பூட்டினாய்.''

லலிதா மௌனமாயிருந்தாள்.

விளக்கை அணைத்து விட்டு வந்து பட்டாபிராமன் மறுபடியும் படுத்துக் கொண்டான்.

லலிதா, ''நான் செய்தது பிசகுதான்; தயவுசெய்து மன்னித்து விடுங்கள்!'' என்று சொன்னாள்.

''ரொம்ப சரி; இனிமேல் இப்படி எனக்குத் தெரியாமல் ஒரு காரியமும் செய்யாதே. இப்போது பேசாமல் படுத்துக் கொண்டு தூங்கு'' என்றான் பட்டாபி.

அவ்வாறே லலிதா படுத்துக்கொண்டாள். ஆனால் தூக்கம் வரவில்லை. தேம்பலும் அழுகையும் வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

கொஞ்ச நேரம் கழித்து, ''ஏன்னா! சேர்மன் வேலை என்றால் தினமும் ஆபீஸுக்குப் போக வேண்டியிருக்குமோ?'' என்று கேட்டாள்.


''ஆமாம், ஆமாம். 'எங்காத்துக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்' என்று நீ எதிர் வீட்டு அம்மாமி, பக்கத்து வீட்டு அம்மாமி எல்லாரிடமும் பெருமையடித்துக் கொள்ளலாம்.''

''அதற்காக நான் ஒன்றும் கேட்கவில்லை. தினந் தினம் அப்படி என்ன வேலை இருக்கும் என்று தெரிந்து கொள்ளக் கேட்டேன்.''

''டேய், என்னடா! பாடப் புத்தகங்களைப் படிக்காமல் நம்ம முதலமைச்சர் எழுதியவற்றைப் படிச்சிக்கிட்டிருக்கிறாய்?''

''பத்துக்கு நாலு கேள்விகள் முதல்வரைப் பற்றித்தானே இருக்கும்!''

— நெல்லை சுந்தரம்



"தூக்கம் வருகிறது; என்னைத் தொந்தரவு செய்யாதே! எல்லாம் நாளைக்குச் சொல்கிறேன்."

தூங்குவதற்காக லலிதா மனப்பூர்வமான முயற்சி செய்தாள். எனினும், தூக்கம் வரவில்லை. ஆகவே பட்டாபியின் தூக்கத்தைக் கெடுக்காதிருக்கும் பொருட்டுத் தூங்குவதுபோல் பாசாங்கு செய்தாள்.

மணி பதினொன்று அடித்தது.

* * *

கடிகாரத்தின் நிமிஷ முள் முழு வட்டத்தையும் ஒரு சுற்றுச் சுற்றி வந்தது. மணி பன்னிரண்டு அடித்தது.

எங்கிருந்தோ ஒரு விம்மல் சத்தம் கேட்டது. நெஞ்சைப் பிளக்கும்படியான சோகமும் வேதனையும் நிறைந்த விம்மல் சத்தம் அது.

தூக்கமின்றிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த பட்டாபிராமன் காதில் அது விழுந்து திடுக்கிடச் செய்தது.

மறுபடியும் அந்த விம்மல் சத்தம்.

மேல் மாடியிலிருந்துதான் அந்த விம்மல் வருகிறது; சீதாதான் விம்முகிறாள். சந்தேகம் இல்லை.

தன்னுடைய உள்ளத்தை இந்த உலகத்தில் உண்மையாக உணர்ந்தவள் சீதாதேவி ஒருத்திதான். தன்னுடைய ஆசாபாசங்களில் பூரண அநுதாபம் உள்ளவள் அவள். தனக்கு வாழ்க்கையில் புதிய உற்சாகம் ஊட்டியவள் அவள். தன் வாழ்க்கைக்கே ஓர் ஆதாரத்தை அளித்தவள் அவள்.

அத்தகைய சீதா தன்னந் தனியாகப் படுத்துக் கொண்டு விம்மி அழுகிறாள். நெஞ்சு உடையும்படியான வேதனையினால் துடிக்கிறாள். நள்ளிரவு ஆகியும் தூங்காமல் தவிக்கிறாள். அவளுக்கு என்ன துயரமோ, என்னமோ? தன் மாமியாரும் மனைவியும் கூறிய நிந்தை மொழிகள்தாம் அவளை இப்படி வதைக்கின்றனவோ? அல்லது வேறு ஏதேனும் துயரச் செய்தி கிடைத்திருக்கிறதோ?— ஆகா! இந்தச் சந்தர்ப்பத்தில் அவளுக்கு ஆறுதல் கூறாவிட்டால் தான் உயிரோடிருந்து என்ன பயன்? அவள் தனக்குச் செய்திருக்கும் உதவிகளுக்கெல்லாம் வேறு எவ்விதத்தில் நன்றி செலுத்தப் போகிறோம்?

லலிதாவை எழுப்பி அழைத்துக் கொண்டு போகலாமா? — கூடவே கூடாது! அவள் சீதாவை விரோதிக்கத் தொடங்கி விட்டாள். அவளை அழைத்துக்கொண்டு போவதில் பயனில்லை. ஒருவேளை அவளாலேயேதான் இந்தத் துக்கம் சீதாவுக்கு நேர்ந்திருக்கிறதோ, என்னமோ?

பட்டாபிராமன் சத்தம் போடாமல் எழுந்து கட்டிலிலிருந்து இறங்கினான்.

அறையின் கதவைச் சத்தமில்லாமல் திறந்து வெளியேறினான். சத்தமின்றி அடிமேல் அடி வைத்து மாடிப் படி மீது ஏறத் தொடங்கினான்.

தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்த லலிதா படுக்கையிலிருந்து எழுந்தாள். திறந்திருந்த கதவு வழியாக வெளிவந்து வாசற்படிக்கருகே நின்றாள். பட்டாபிராமன் மேலே ஏறுவதைப் பார்த்துக் கொண்டு திக்பிரமை பிடித்து நின்றாள்.

இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் லலிதாவின் தாயார் திடீரென்று லலிதாவின் பின்னால் வந்து நின்றாள். லலிதா திரும்பிப் பார்த்து இன்னார் என்று தெரிந்து கொண்டாள்.

சரஸ்வதி அம்மாள் இரகசியம் பேசுகிற குரலில், "பார்த்தாயாடி, பெண்ணே! பாம்புக்குப் பாலை வார்த்தாலும் அது விஷத்தைத்தான் கக்கும் என்று நான் முட்டிக்கொள்ளவில்லையா? அந்தச் சண்டாளி என்ன செய்துவிட்டாள் பார்த்தாயா? உன் குடியைக் கெடுத்து விட்டாளே!" என்று சாபம் போட்டாள்.

லலிதா 'உஷ்!' என்று வாயில் விரலை வைத்துச் சரஸ்வதி அம்மாளை அடக்கினாள்.


பட்டாபி மச்சுப்படி ஏறும் சத்தம் நின்றது. அறையின் கதவைத் திறக்கும் 'கிறீச்' சத்தம் கேட்டது. மின்சார விளக்குப் போடும் 'கிளிக்' சத்தம் கேட்டது. பின்னர் கதவைச் சாத்தும் சத்தமும் கேட்டது.

"போடி, பெண்ணே, போ!" என்று சரஸ்வதி அம்மாள் தூண்டினாள். ஆனால் லலிதாவுக்கு அச்சமயம் தூண்டுதல் அவசியமாயிருக்கவில்லை. ஆவேசம் வந்தவளைப் போல் மச்சுப் படிகளில் வேகமாக ஏறிப் போனாள்.

மேல் மாடித் தாழ்வாரத்தின் வழியாகச் சென்று சீதாவின் அறைக் கதவை இலேசாகத் திறந்தாள். உள்ளே பார்த்த காட்சி அவள் ஒருவாறு எதிர்பார்த்ததே. ஆனாலும் அவளை ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து நிற்கும்படி செய்து விட்டது.

பட்டாபிராமன் சீதாவின் முகவாய்க் கட்டையைத் தன் கையினால் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான். சீதாவின் கண்களில் ததும்பிய கண்ணீர்த் துளிகள் மின்சார விளக்கின் மங்கலான ஒளியில் நல் முத்துக்களைப்போல் பிரகாசித்தன.

லலிதா தன் வாழ்நாளில் என்றும் அநுபவித்திராத ரௌத்ராகாரத்தை அடைந்தாள். (தொடரும்)



'தடி எடுத்தவன் தண்டல்காரன்' என்பது பழமொழியானாலும் இன்றும் நாம் காண்பது அதுதான். தன் குடி படைகளுக்கு அநீதி இழைக்கப்பட்டால், விசாரணைக் குழு நியமித்து நியாயம் வழங்கும் கண் துடைப்பு எப்படி நடைபெறுகிறது? கென்யாவின் ஜனாதிபதி ஜோமோ கென்யாட்டா அங்கதபாணியில் அழகுறக் கூறுகிறார் இக்கதையில்.

ஒரு காட்டில் ஒரு மனிதன் குடிசை அமைத்து வாழ்ந்து வந்தான். அங்கு அவனுக்கு ஒரு யானையின் நட்புக் கிட்டியது.

ஒரு நாள் பயங்கரப் புயல் வீசியது. பெரும் பெரும் ஆலங்கட்டிகள் விழலாயின. யானை உணவு தேடி வெகு தொலைவுக்குப் போயிருந்தது. ஆலங்கட்டிகளின் அடி தாளாமல் யானை வெறி பிடித்தாற்போல் ஓடியது. கடைசியில் மனிதனிடம் வந்து கெஞ்சிற்று: ''என்னை இந்தப் பயங்கரப் புயலிலிருந்தும், பனிக்கட்டியிலிருந்தும் நீதான் எப்படியாவது காப்பாற்ற வேண்டும்.''

மனிதன் அதன் மேல் அநுதாபம் கொண்டான். ''நண்பா! உனக்கு எப்படி உதவுவது என்றுதான் புரியவில்லை. இயற்கையின் இந்தச் சீற்றத்தை எதிர்க்கும் திராணி எனக்கில்லையே!'' என்றான்.

''அதிகம் வேண்டாம். என் துதிக்கையைக் காத்துக் கொள்ள உன் குடிசையில் கொஞ்சம் இடம் கொடு!'' யானை வேண்டி நின்றது.

அதன் சிரமத்தை உணர்ந்த மனிதன், அதற்கு இரங்கி, ''என் குடிசைக்குள் நாம் இருவரும் இருக்கும் அளவுக்கு இடம் இல்லை. இருந்தாலும் உன் துதிக்கையைக் காத்துக் கொள்ள உனக்கு உதவுகிறேன். ஜாக்கிரதையாக உன் துதிக்கையை மட்டும் குடிசைக்குள் நுழைத்துக்கொள்!'' என்று அநுமதி வழங்கினான்.

யானை நன்றி தெரிவிக்கும் முறையில், ''ஆபத்துக்கு உதவுபவனே உண்மை நண்பன் என்னும் கூற்று எள்ளளவும் பொய்யில்லை. நீ பேருதவி புரிந்து என்னைக் காப்பாற்ற முன் வந்ததற்கு என் நன்றி. இத்தகைய ஆபத்து உனக்கு வரவேண்டாம். வந்தால் உனக்கு உதவும் வாய்ப்பு எனக்குக் கிட்டுமாக!'' என்றது.

''நன்றி தெரிவிக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆபத்து-சம்பத்தில் உயிரினங்களுக்கு உதவுவதே பெரும் கடமை. நான் கடமையை நிறைவேற்றுகிறேனே ஒழிய, உனக்குப் பெரிதாக என்ன உதவிவிட்டேன்?'' என்றான் மனிதன்.

ஆனால் இது என்ன கொடுமை! தனக்கு உதவிய மனிதனையே தன் துதிக்கையால் தூக்கி வெளியே எறிந்து விட்டது யானை! அவன் புயலில் சிக்கித் துயருற, அது வெகு உரிமையோடு குடிசைக்குள் துதிக்கையைப் புகுத்தித் தன்னைத் தற்காத்துக் கொண்டது.

மனிதன் இந்தச் செயலைக் கண்டு செயலற்று, சிந்தனை யிழந்து நின்று விட்டான்.

யானை அவனைப் பார்த்து, ''நண்பா! உன் குடிசை மிகவும் சிறியது. ஏக காலத்தில் நம் இருவரையும் இது காக்க முடியாது. உன் தோல் வலுவானது; கடினமானது. ஆலங்கட்டியின் தாக்குதலைத் தாங்கும் ஆற்றல் உள்ளது. ஆனால் என் தோல் வலுவற்றது. மென்மையானது. குளிரையும், புயலையும் தாங்கும் ஆற்றல் கிடையாது!'' என்றது.

யானையின் இந்த இழிசெயலைக் கண்டு மனிதன் கொதித்துக் கூச்சலிட்டான். அவன் கூப்பாட்டைக் கேட்டுக் காட்டு மிருகங்கள் கூடின. அவன் கூச்சலிடும் காரணத்தைக் கேட்டன. மனிதன் நடந்ததை நடந்தபடியே சொன்னான்.

குடியிருப்புக்கு ஒரு விசாரணைக் குழு

ஜோமோ கென்யாட்டா

அதே நேரத்தில் காட்டுக்கு அரசனான சிங்கம் அங்கே வந்தது. அதிகாரக் குரலில் கர்ஜனை புரிந்து கேட்டது: ''என்ன விஷயம்? எதற்காகக் காட்டின் அமைதியைக் குலைக்க முற்பட்டிருக்கிறாய்?''

மனிதன் நியாயம் வேண்டிக் கூறினான்: ''வன அரசே! விஷயம் மிக மிகச் சிறியது. சிறு குடிசையைப் பற்றியது. இந்தக் குடிசை என்னுடையது. ஆனால் என் நண்பனான இந்த யானை தன்னுடையது என்று கூறுகிறது!''

சிங்கம் உறுமும் குரலில் கூறியது: ''குடிசை உன்னுடையதா, யானையினுடையதா என்று தீர்மானிக்க நான் ஒரு விசாரணைக் குழு நியமிக்கிறேன். அது உண்மையை ஆய்ந்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும். நீ என் ஆட்சிக்குட்பட்ட குடிமகனிடம் நட்புரிமை பாராட்டுவது கண்டு நான் மகிழ்கிறேன். ஆனால் நீ என்னுடைய குடியிடம், குறிப்பாக எனது அமைச்சர் குழுவில் இருக்கும் யானையுடன் பகைமை பாராட்டுவதை நான் ஒரு பொழுதும் விரும்ப மாட்டேன்; உன் கருத்துக்கு ஆதரவும் தர மாட்டேன். குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் வரையில் நீ பொறுமையாயிரு. உனக்குக் குழுவின் முன்னிலையில் சாட்சியம் சொல்ல வாய்ப்பு அளிக்கப்படும். குழுவின் தீர்ப்பு உனக்குத் திருப்திகரமாக அமையும் என்பதை நீ உறுதியாக நம்பலாம்!''

சிங்கம் ஒரு விசாரணைக் குழு அமைத்தது. அதில் யானை, காண்டாமிருகம், நரி, கழுதைப் புலி முதலியவை இடம் பெற்றன. மாண்புமிகு நரியார் தலைவராகவும் சிறுத்தையார் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்கள். மனிதன் இந்தக் குழு அமைப்பைப் ,பலமாக எதிர்த்தான். ''இதில் மனிதனும் ஓர் உறுப்பினனாக இடம் பெற வேண்டும். இல்லாவிட்டால் இது ஒருதலைப்பட்சக் குழுவாகத்தான் கருதப்படும்!'' என்று வாதாடினான்.

மனிதனின் இந்த ஐயத்தைப் போக்கும் வகையில் சிங்கம் கூறியது: ''நான் உனது இந்த வேண்டுகோளை ஏற்க முடியாது. ஏனென்றால் மனிதன் அறிவில் குறைந்தவன்; அநுபவத்தில் சிறியவன். அவனுக்குக் காட்டின் சட்ட திட்டங்களோ விதி முறைகளோ தெரிவதற்கு நியாயம் இல்லை. உனது ஐயம் ஆதாரமற்றது. குழுவின் அங்கத்தினர்கள் அனைவரும் நாணயத்துக்கும் நடுநிலைமைக்கும் பேர்போனவர்கள். ஆண்டவன் எங்களுக்குப் பெரும் பெரும் நகங்கள் எதற்காக அளித்திருக்கிறான்? ஆண்டவனின் படைப்பில் நகமற்றவர்களுக்கு நாங்கள் உதவ வேண்டும், அவர்களுக்கு எசமானர்களாக விளங்க வேண்டும் என்பதற்காகத்தான்! பதற்றப் படாதே! பரிசீலனையில் நடுநிலைமையும் நாணயமும் நிச்சயம் பாதுகாக்கப்படும்!''

மறுநாள் விசாரணைக் குழுவுக்கெதிரே யானை தனது வாக்குமூலத்தைத் தந்தது: ''மாண்புமிகு உறுப்பினர்களே! நான் வீணான வறட்டு வாதங்களையெல்லாம் கூறி உங்களுடைய விலைமதிக்க முடியாத நேரத்தைப் பாழாக்க விரும்பவில்லை! நீங்கள் அனைவருமே இந்த வழக்கை நன்கு அறிவீர்கள்! நண்பர்களுக்கு நல்லது செய்வதே என் பண்பு நிறைந்த பழக்கமாக இருந்து வந்திருக்கிறது. எனது மனித நண்பர் தவறான கருத்துக்கு இலக்காகி விட்டது குறித்து நான் வருந்துகிறேன். எனது ஆப்த நண்பரான இம்மனிதர், ஆலங்கட்டி மழையிலிருந்தும், பெரும் புயலிலிருந்தும் தம் குடிசையைக் காப்பாற்றித் தருமாறு என் உதவியைக் கோரினார். குடிசை காலியா யிருப்பதைக் கண்டு புயல் அதற்குள் புகுந்து ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது; குடிசையில்



தன் ஆட்சியை நிலைப்படுத்திக் கொண்டு விட்டது. நான் என் நண்பரின் நலனை உத்தேசித்துப் புயலைக் குடிசையிலிருந்து விரட்டி அடித்தேன். குடிசையை நம் உபயோகத்தில் வைத்துக் கொள்வதே சிறந்தது. அப்பொழுதுதான் ஆக்கிரமிப்புப் பிரச்னை தீரும் என்ற முடிவுக்கு வந்தேன். என் நிலையில் நீங்கள் இருந்தால், நீங்களும் இதையேதான் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன். என் கடமையை நிறைவேற்ற எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததற்கு நான் மகிழ்கிறேன்!''

யானையின் இந்த வாக்குமூலத்தைக் கேட்டுக் கழுதைப்புலி தனது ஒப்புதலை அளித்தது. அதைத் தொடர்ந்து மற்றப் பிராணிகளும் ஆடு சாய்கிறாற் போலச் சாய்ந்து ஆமோதித்தன.

அதற்குப் பின் மனிதன் தருவிக்கப்பட்டான். அவன் பேச வாயைத் திறந்ததும், குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஏக காலத்தில் குரல் கொடுத்தனர்: ''சகோதரா! நீட்டி முழக்கிச் சொற்பொழிவு நிகழ்த்தி, எங்கள் நேரத்தை வீணாக்காதே! நாங்கள் ரகசியமாக எல்லா விஷயங்களையும் விசாரித்து உண்மை நிலையை அறிந்து கொண்டு விட்டோம். நாங்கள் கேட்கும் ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு. யானை வருவதற்கு முன்னால் உன் குடிசையில் யாராவது இருந்தார்களா, இல்லையா?''

''இல்லை. ஆனால்...'' மனிதன் ஏதோ சொல்ல வாய் எடுத்தான்.

அதற்குள் குழுவின் உறுப்பினர்கள் குறுக்கிட்டு, ''சரி, சரி! நாங்கள் எல்லாவற்றையும் நன்கு விளங்கிக் கொண்டு விட்டோம். எனவே, இறுதித் தீர்ப்பை எதிர் பார்!'' என்று கூறிய கையோடு எழுந்துவிட்டனர்.

அன்று இரவு யானை, விசாரணைக் குழு உறுப்பினர்களுக்குத் தன் வீட்டில் பெரிய விருந்து அளித்தது. பழம், புஷ்பம், புலால் என்று ஏக தடபுடல்! யானையாரின் மனைவியே எல்லா ஏற்பாடுகளையும் முன்நின்று கவனித்தாள். விருந்து முடிந்தவுடன் மனிதன் மீண்டும் தருவிக்கப்பட்டான். உடனே தீர்ப்பும் வழங்கப்பட்டு விட்டது.

தீர்ப்பு வருமாறு:

''நடுநிலையான பரிசீலனைக்குப் பிறகு, இந்தச் சண்டைக்கு மூலகாரணம் மனிதனின் அறியாமையே என்று இந்தக் குழு முடிவுக்கு வருகிறது. யானை, மனிதனின் நலனைக் கருதித் தனது கடமையைச் சீரிய முறையில் நிறைவேற்றியிருக்கிறது என்பதை அறிந்து இக்குழு மகிழ்ச்சி தெரிவிக்கிறது! மனிதனின் நன்மையை உத்தேசித்தே யானை குடிசையைச் செவ்வனே உபயோகித்தது என்று தெளிவாகிறது. இது பாராட்டுக்குரிய விஷயம். மனிதன் புயலிலிருந்து குடிசையைக் காப்பாற்றும் முயற்சியில் தோல்வியே கண்டிருக்கிறான். குடிசையை விட்டு விட்டு வெளியேறவும் அவனுக்கு மனம் இல்லை. யானையை உதவிக்குக் கூப்பிட்டிருக்கிறான். எனவே, குடிசையை யானைக்கே தந்துவிடுவதுதான் நியாயம் என்ற முடிவுக்கு இக்குழு வருகிறது. மனிதன் விரும்பினால் கானகத்திலேயே ஒரு புது இடம் தேடிக் கொள்ளலாம். அங்கு தன் குடிசையையும் போட்டுக் கொள்ளலாம். அதற்கான அனுமதி வழங்க இக்குழு இசைவு தெரிவிக்கிறது. கானக ஆட்சி மனிதனுக்குச் சகலவிதமான சௌகரியங்களும் செய்து தரச் சித்தமாயிருக்கிறது. அவன் நிமிர்ந்து நின்று தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள இல் அதற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும் உறுதியளிக்கிறது. எனவே, மனிதன் தைரியமாக இக்குழுவின் கூற்றை நம்பலாம்!''

ஹிந்தியிலிருந்து தமிழாக்கம் : ரா.வீ.

பரதன் இட்ட ஆணை!

ஸ்ரீராமனைக் காட்டுக்கு அனுப்பின செய்தி யறிந்ததும் பரதன் துயரத்தில் மூழ்கித் தாயார் கௌசலையிடம் ஓடி மகா ஆவேசத்துடன் தனக்கு அந்தச் சூழ்ச்சி தெரியவே தெரியாதென்று கோரமான ஆணைகள் இட்டுக் கொண்டான்.

''ஸ்ரீராமன் காட்டுக்குப் போக நான் அனுமதித்தவனாயிருந்தால் மதுபானமும் விஷமும் விற்ற பாவத்தை நான் அடைவேனாக'' என்றும், ''கட்குடியனாவேனாக'' என்றும் சபித்துக் கொண்டான்.

பாவத்திலும் மகாபாவம் கள்ளைக் குடிப்பதும் கள்ளை விற்பதும். - நன்றி : குமரிமலர். - ராஜாஜி.



சிங்கம் கவ்விய சிறுவன் !

முப்பது வயதுள்ள மனிதர் கூண்டிற்குள் நுழைந்து சிங்கத்தின் வாயைத் தம் கைகளால் திறந்து, தம் ஒன்பது வயதுள்ள மகனை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றினார். பையன் புகிகோ ஹயாஷி ஜப்பானிலுள்ள ஒரு மிருகக்காட்சிசாலைக்குச் சென்றிருந்தபோது புகக்கூடாத இடத்தில் புகுந்து சென்று விட்டான். முதிய பெண் சிங்கம் அந்தச் சிறுவனின் முகத்தைப் பற்றி இழுத்தது. இந்தச் சமயத்தில் சிறுவனின் தந்தை தைரியத்துடன் மூன்று நிமிஷங்கள் சிங்கத்துடன் போரிட்டுச் சிறுவனைக் காப்பாற்றினார். காயமடைந்த பையன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான். உடல் தேறி வருகிறான். - ஹிதவதா

- பி. எஸ்.







மூன்று முடிச்சுக்கள்

கே.பாலசந்தர்

2

தபால் நிலையத்தை விட்டு வெளியே வந்த சீதாலட்சுமிக்கு எங்கு செல்வது, என்ன செய்வது என்று புரியாமல் ஒரு கணம் தவிக்க நேர்ந்தது.

லட்சுமியின் கண்கள் எங்கோ நிலைக் குத்தி நின்றிருந்தன. தொலைவில் பீடியைப் புகைத்துக் கொண்டு வைத்த கண் வாங்காமல் தங்களையே கவனித்துக் கொண்டிருந்த அந்த மீசைக்காரனைப் பற்றிய சிந்தனைதான் அவளுக்கு. அவன் ஏன் அப்படிப் பார்க்கிறான்? லட்சுமிக்கு எரிச்சலாக வந்தது. சுத்தக் காலிப்பயல்!

லட்சுமியின் தயக்கத்தையும் தவிப்பையும் குறிப்பால் அறிந்து, ''லட்சுமி! ஏன் தயங்கி நிற்கிறே? தபாலாபீஸிலே எதனுச்சும் மறந்துட்டியா?'' என்று கேட்டாள் சீதா.

இருவருக்கு மட்டுமே புரியக்கூடிய புரிய வைக்கக் கூடிய அந்தச் சமிக்ஞை நிறைந்த பாஷையில்தான் சீதா கேட்டிருந்தாள்.

லட்சுமியின் மௌனம் சீதாவுக்குப் புரிந்து விட்டது. அவள் முனகிக்கொண்டாள்: ''இந்த ஐந்து வருஷங்களா உலகத்தைக் காம்பவுண்டுச் சுவருக்குள்ளேயே பார்த்துத் தைரியமா வாழறோம்னு சொல்லிக் கொண்டிருந்தோம். இப்ப அந்தக் காம்பவுண்டுச் சுவரு இல்லாததுனாலே கொஞ்சம் பயமா இருக்கு!''

சீதா பிறவிக் குருடியல்லவே!

லட்சுமியின் கையைப் பிடித்துப் 'புறப்படு' என்பது போல் சமிக்ஞை செய்தாள். இருவரும் விதி விட்ட வழி என்ற நினைவுடன் நடந்தனர்.

வழியில் சீதா பேச்சுடன் கலந்த சமிக்ஞை மூலம் ஜாடை காட்டிக் கேட்டாள்.

''லட்சுமி! எல்லாப் பணத்தையுமே தபாலாபீஸ்லே கட்டிட்டியா? கைக்குன்னு எதுவும் வைச்சிக்கலையா?''

வாய் வழியே இந்தச் சொற்கள் வர வேண்டிய அவசியமில்லை. லட்சுமிக்கு என்ன கேட்கவா போகிறது? ஆனாலும் ஜாடை காட்டிச் சொல்கிறபோது லட்சுமி வேண்டுமானால் ஊமை மொழியில் 'ஆங் உங்' என்று குரல் எழுப்பலாம். ஆனால் சீதா அப்படியல்லவே! கண்ணில் இருள் இருந்ததே ஒழிய வாயில் வெளிச்சம் இருக்கிறதே! உணர்வின் காரணமாகச் சொற்கள் பிறந்தன அவளிடம்.

நன்றாக இருப்பவர்களே கண் என்று சொல்லுகிறபோது விரலால் கண்ணைக் காட்டிப் பேசுகிறார்கள். கண் என்று சொன்னால் போதாதா? மொழிக்கு முந்தியே உணர்வுகள் பிறந்து விட்டன என்பதை யல்லவோ இது எடுத்துக் காட்டுகிறது! லட்சுமியிடம்தான் பேசுகிறோம் என்பது சீதாவுக்குத் தெரிந்தாலும் தன்னிடம் — தன் உணர்வுகளுடன் பேசிக் கொள்ள வேண்டுமல்லவா? சீதா ஊமையல்லவே?

கைவசம் மூந்நூறு ரூபாய் இருக்கிறதென்பதைத் தொடு உணர்வின் மூலம் சிதாவுக்குத் தெரிவித்தாள் லட்சுமி. தரும சங்கடமான ஒரு பாஷை அவர்களுக்குமட்டுமே தெரியக்கூடிய அளவுக்குப் பரிமாற்றம் கண்டது. இந்த மூந்நூறு ரூபாயைத்தான் குறி பார்த்துக் கொண்டிருந்தானே அந்த மீசைக்காரன்! நல்ல வேளை! இப்பொழுது லட்சுமியின் கண்களில் அவன் படவில்லை!

பாதையைக் கடந்து மிக ஜாக்கிரதையாக நடந்து கொண்டேயிருந்தார்கள். அவர்கள் இருவருமாகச் சேர்ந்து வாகனங்கள் குறுக்கும் நெடுக்கும் சென்று கொண்டிருக்கும் தெருக்களைக் கடப்பதே மற்றவர்களுக்கு விசித்திரமாக இருக்கும். ஒருத்திக்கு வாகனங்களின் சத்தங்கள் மட்டும்தான் கேட்கும். இன்னொருத்திக்கு வாகனங்களின் போக்குவரத்து மட்டும்தான் தெரியும். சத்தமே கேட்காது.

ஒரு திருப்பத்தைக் கடந்து செல்கிறபோது —

வாழ்வில் திருப்பம் காத்திருப்பது போல் எதிரில் பொன்னுத்தாயி வந்து கொண்டிருந்தாள். லட்சுமியைக் கண்டதும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு பார்க்கிறாள். லட்சுமியின் தாயார் பார்வதியும் பொன்னுத்தாயும் ஒரு காலத்தில் தண்டையார்ப்பேட்டையில் பக்கத்துப் பக்கத்துக் குடிசைகளில் வாழ்ந்தவர்கள். பார்வதி இறந்து, லட்சுமி அனாதையாகிச் சென்ற பிறகு இப்போதுதான் பார்க்கிறாள் பொன்னுத்தாயி! பழைய பாசம் உந்தி அழைக்கச் செய்தது.



கண்ணிமைகள் படபடக்கப் பொன்னுத்தாயியைக் கவனித்த லட்சுமி, ''சௌக்கியமா?'' என்று கேட்டாள். அதைத் தானே அவள் கேட்க நினைத்திருக்க வேண்டும்!

பொன்னுத்தாயியும் ஜாடை காட்டியே, ''ஏழைக்கும் சௌக்கியத்துக்கும் எத்தனையோ 'மைல்'டியம்மா! ஆமா... நீ இப்ப எங்கே இருக்கிறே? இது யாரு புதுப் பொண்ணு?'' என்று கூறிக்

கொண்டே இரு முந்தானைகள் முடிப்புண்டு கிடந்ததை ஆச்சரியமாக நோக்கினுள்.

சீதா கேட்டாள்: ''அம்மா; நீங்க யாரு?''

சீதாவைக் கூர்ந்து கவனித்த பொன்னுத்தாயி, ''தெலுங்குக்காரச்சி மாதிரி தமிழு பேசகிருளே இந்தப் பொண்ணு! லட்சுமி! உன் சிநேகிதியா?'' என்று கேட்டுக் கொண்டே மீண்டும் அந்த முடிச்சுக்களை நோக்கினுள்.

லட்சுமியும் சிரித்துக் கொண்டே தலையசைத்தாள்.

''இது என்ன முடிச்சு?''

பொன்னுத்தாயியின் கேள்விக்குச் சீதாவே பதில் சொன்னுள்: ''நாங்க அந்த வருஷம் சிநேகிதமானுலும் ஆறு பிறப்பிலே ஒண்ணுப் பிறந்தவங்க. ஏழு பிறப்புன்னு சொல்லுவாங்க. இந்தப் பிறப்பிலே எப்போதும் பிரியக்கூடாதுன்னு ரெண்டு முடிச்சுப் போட்டுக் கிட்டோம்.''

''ஆச்சரியமா இருக்கே?''

''அம்மா! இது ஒரு ஆச்சரியமா? ஆண்டவன் அவளை ஊமையாகவும் செவிடியாகவும் பிறக்கச் செய்து, என்னைக் குருடியாக்கி விட்டதைவிடவா ஆச்சரியம்? நீங்க யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''எல்லாத்தையும் அப்பாலே தெரிஞ்சுக்கலாம். இப்ப எங்கே போறீங்க? எங்கே இருக்கிறீங்க?''

''இருந்த இடத்தைப் பத்திப் பின்னுல் சொல்றேம். இப்ப இருக்க ஓர் இடம் தேவை. எங்காச்சும் வாடகைக்கு ஒரு குடிசை கிடைக்குமா? இந்த உதவி செஞ்சீங்களானு ரொம்பப் புண்ணியமா இருக்கும்!''

''இதுகூடவா செய்ய மாட்டேன்? லட்சுமி என் பொண்ணு மாதிரியாச்சே! வாங்க!''

• சீதா கரம் கூப்பினுள். லட்சுமி சிரித்தாள். இருவரும் பொன்னுத்தாயியைப் பின்தொடர்ந்து நடந்தனர்.

அதுவரையில் தொலைவில் நின்று கவனித்த மீசைக்காரன் சிங்காரமும், இன்னெரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு நடக்கலானுன்.

புதுப்பேட்டை இறக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த கூவம் நதிக்கு அப்போது 'படகு யோகம்' அடிக்காத காலம். எங்கும் ஏழைகளின் சிரிப்பு குடிசைகளில் எதிரொலித்துக் கொண்டிருந்



தது. கூவம் ஆற்றங்கரையில் இருந்த குடிசையினுள் ஒன்றை வாசஸ்தலமாகக் கொண்டவர் சீதாலட்சுமி. மாதம் ஏழு ரூபாய் வாடகை. இரண்டு உருவங்கள் தாராளமாக வாழ்ந்து மடியலாம்.

லட்சுமி சோறு பொங்கிக் கொண்டிருந்தாள். சீதா கூடியவரையில் தடவித் தடவிக் கீரையை ஆய்ந்துகொண்டிருந்தாள். அவர்களிடையே நீண்டிருந்த மூங்கில் குழாய்களில் இரண்டு முடிச்சுக்கள் மேலெழுந்து ஒரு பாலம்போல் காட்சி தந்தது.

பொன்னுத்தாயி உள்ளே நுழைந்தாள். தோலும் எலும்புமாகக் காணப்பட்டாலும், ஏழைகளுக்குரிய சலனமற்ற புதிய தெம்பு அவளுடலில் ஓடிக்கொண்டிருப்பது தெரிய வந்தது.

''என்ன, லட்சுமி! இன்னும் சாப்பாடு முடியலியா?''

''இல்லே பொன்னுத்தாயி!'' என்று பதிலளித்தாள் சீதா.

''சீதா, உன்னை ஒண்ணு கேட்கலாமா?''

''கேளேன்!''

''நீ தெலுங்குக்காரி மாதிரி தமிழ் பேசறியே! நீ கொல்டியா?''

லட்சுமிக்குச் சிரிப்பு வந்தது; சீதா சிரித்து விட்டாள்.

''ஆமாம்: விசாகப்பட்டணத்துக்காரி!''

''நல்லா இருக்குடியம்மா, தெலுங்கச்சியும் தமிழச்சியும் சிநேகிதம் பிடிச்சுக்கிட்டது! அங்கங்கே தமிழச்சிங்களுக்குள்ளேயே குடித்தனம் இருக்கிற இடத்திலே சண்டைப் பிடிச்சுக்கிட்டுச்

நல்ல முடிவு



ஒரு விவசாயக் குடும்பத்துக்கு வரும் தொல்லைகள், கட்டுக்கு அடங்காத ஒரு வில்லனின் அளவுக்கு மீறிய கொடும் செயல்கள், 'டிஷ்யூம்' 'டிஷ்யூம்' சண்டைகள், காதல் காட்சிகள், கற்பழிக்கும் கொடுமைகள் எல்லாவற்றையும் சேர்த்துத் திரைக்கதையைத் தயாரித்து விட்டார்கள். திரைக் கதைக்காகச் சிந்தித்துச் சிரமப்படவேயில்லை. ஆரம்பம் நல்லபடியாக இருந்தால்தானே முடிவு நல்ல முடிவாக இருக்க முடியும் ?

பாழாய்ப் போன ஓர் அசட்டு 'சஸ்பென்ஸ்'ஸை வைத்துக் கொண்டு படம் பார்ப்பவர்களை அறு அறு என்று அறுத்து விட்டார்கள்.

ஜெமினி கணேசன் பிரமாதமாகச் சண்டை போட்டுக் குதியாய்க் குதித்திருக்கிறார். ஜெயந்தி கிராமத்துப் பெண்ணாய் வந்து கண்ணீர் விட்டு உருகிக் காதலித்துத் தவித்து நன்றாய் நடிக்கிறார். வி. நிர்மலாவின் நடிப்பில் 'நயமும், நாசூக்கும் நன்கு மிளிர்கின்றன; அதுவும் காதலித்துக் கைப்பிடித்த நாயகனிடமே அடிபட்டுக் கொடுமைப்படும் போது உருக்கமாக நடித்திருக்கிறார்.

'சோ'வும், மனோரமாவும், தேங்காய் சீனிவாசனும் நகைச்சுவைக் காட்சிகளின்

நடிப்பிலே முதற் பரிசு தட்டிக் கொண்டு போவது காளை மாடு. ஆனால் அதன் படத்தை யார் பிரசுரிப்பார்கள்? கவர்ச்சி இல்லையே!

மூலம் படத்துக்குப் புத்துயிர் அளித்திருக்கின்றனர். 'சோ' பெண் வேஷத்தில் வரும் காட்சிகளில் கொட்டகையையே அதிர வைக்கிறார் ! படம் பார்ப்பவர்களுக்கு ஓரளவு திருப்தியளிப்பது நகைச்சுவைக் காட்சிகள் தாம் !

பாடல்கள், படத்தின் வில்லனைவிடக் கொடுமைப் படுத்துகின்றன! 'இடைவேளை'க்கு முன்பே வில்லனை யாரோ தீர்த்துக் கட்டி விட்டார்கள்! நம் அதிர்ஷ்டம் ! ஆனால், ஐயகோ! பாடல்கள்....! யாரும் தீர்த்துக் கட்ட முன்வரவில்லையே !

இந்தப் படத்தில், நடிப்புக்கு முதல் பரிசு தரவேண்டுமானால், ஆரம்பம் முதல் கடைசிக் காட்சி வரையில் வந்து திரைக்கதையில் பல திருப்புமுனைகளை ஏற்படுத்தும் காளை மாட்டுக்குத்தான் தர வேண்டும். டைரக்டர் பி. என். சண்முகம் பாராட்டுக்குரியவர்.

— காந்தன்

ஹேஸ்லீன் ப்யூட்டி டால்க்

மணம் வீசிக் கமழும்
மனங் கவர் ரோஜாவும்
மலர் போன்ற புதுமை
மலர்ந்திடும் லவெண்டரும்
இரவோடு பகலாய்
எக்கணமும் உறவாடுதே
ஹேஸ்லீன்...

தேர்ந்தெடுக்க
2 வகை
நறுமணங்கள்...
ரோஸ்
மற்றும்
லவெண்டர்




Wellcome

ஹேஸ்லீன் ப்யூட்டி டால்க்—புதுமை பூரிக்கும் மணம்

OBM-0785 TM



நாம்
ஓடோனில்
உபயோகிக்கிறோம்
கண்ணு...



ஓடோனில் ஏர் ப்யூரிஃபையர், கக்கூஸ், பாத்ரூம், போலுள்ள இடங்களின் துர்நாற்றங்களை உடனடியாகப் போக்கி, தூய்மையாகவும் நன்மணத்துடனும் வைத்திருக்கிறது. பலமலர்களின் மணங்கள் உண்டு—லாவெண்டர், ஜாஸ்மின், மோக்ரா ... முதலியன—விரும்பியதை வாங்கலாம்.

பல சைசுகளிலும், வகைகளிலும் கிடைக்கிறது.

BALSARA
பல்சாரா
—சிறப்பாக வாழ
சொகுசான வசதிகள்

பல்சாரா & கம்பெனி
பிரைவேட் லிட்.,
43, மேடோஸ் ஸ்ட்ரீட், பம்பாய்-1

AIYARS-BLS. 90 TM

சண்டை போடறானுங்க! நீங்க இன்னு டான்னு... இப்படியே நல்லா வாழ னும்டியம்மா!''

''பொன்னுத்தாயி! எனக்கு நாடு தெரியாது; அவளுக்குப் பாஷை புரி யாது. அவதான் எனக்கு நாடு; நான் தான் அவளுக்குப் பாஷை! அது சரி! இன்னொரு உதவி செய்வீங்களா?''— சீதா கண்களில் நீர் துளித்தது.

''என்னடியம்மா, சீதா?''

''இப்படியே கையிலே இருக்கிற கொஞ்சம் பணத்தைச் சாப்பிட்டுத் தீர்த்துட்டா, பிறகு பிச்சை எடுக்கிற நிலை வந்துடும்! இருடறதை விடப் பிச்சை எடுக்கிறது எவ்வளவோ மேல் தான்! ஆனாலும் அந்தக் கேவலத்தை நாங்க விரும்பலே. அதனாலே ஒரு கடை கண்ணி வைச்சுப் பொழைக்கலா மான்னு யோசனை!''

பொன்னுத் தாயிக்கு ஆச்சரியம் மேலிட்டது! ஆம்பிளைங்களாலேயே கடை வைச்சுக் கட்டுப்படியாகாத காலம் இது! குருடியும் செவிடியும் கடை வைத்துப் பிழைக்கிறார்களாமே! எப் படியும் உதவி செய்தே ஆகவேண்டும்! அந்தப் புண்ணியமாவது தனக்குக் கிடைக்கட்டுமே! — பொன்னுத் தாயி நினைத்தாள்.

''ஏம்மா! கடை கண்ணி வைக்க ணும்னு ரொம்பப் பணம் தேவைப் படுமே!''

''எம்மாம் பணம் வேணும்?''

''அந்த முக்கிலே ஒரு கடை இருக்கே தெரியுமா?''

''நான் எப்படிப் பார்த்திருக்கப் போறேன்! லட்சுமிக்குத் தெரிஞ்சிருக் கலாம்!''


''அந்தக் கடையை வித்துப்புட ணும்னு அவன் சொல்லிக்கிட்டிருக்கான். அது பொல்லாத கசமாலமாச்சே! நாமா போயி கேட்டா, விலையைத் தாறுமாறு ஏத்திப்புடும்! ஆனா வியா பாரத்துக்கு ஏத்த முக்கு! ஒழுங்கா வியாவாரம் செஞ்சா நாளைக்குப் பத்து ரூவா சம்பாரிக்கலாம்!''

''என்ன விலை சொல்லுவாங்க?''

''அங்கே இன்னா இருக்கு? ரெண்டு இஸ்டாண்டு, ஒரு நாக்காலி, அஞ்சறை (ஐந்தறை)ப் பெட்டி பெரிசா இருக்கு! மத்தப்படி ரெண்டு மூணு பொட்டி. எல்லாத்துக்குமா சேர்த்து நூறு நூத் தம்பது ரூபா இருக்கும். சந்து முக்கா இருக்குதே. இடத்துக்குப் பகுதி நூறு ரூபா கேட்பான்! எல்லாமாச் சேர்த்து இருநூத்தம்பது ரூவா ஆகும்!''

''சரி, பொன்னுத்தாயி! உடனே ஏற்பாடு பண்ணுங்க. இந்தக் குடிசை யிலே தங்கிக்கிறோம். அங்கே கடை

எண்ணிப் பார்த்தால்...



எண்ணும் கணமே காவியமாம்
எண்ணத் துளியுள் ஊழிகளாம்
எண்ணப் பண்ணுள் படும்ஒளியே
மண்ணில் விண்ணைத் தொடுவழியாம்!

— தம்பி சீனிவாசன்

வைச்சுக்கிட்டு ஏதாவது வியாவாரம் செஞ்சுக்கலாம்.''

லட்சுமியிடம் ஜாடை மூலம் கருத் தைச் சொல்லிக் கேட்டாள் சீதா!

சீதாவின் உதடுகளின் அசைவின் மூலம் மொழியைப் புரிந்து கொண் டாள் லட்சுமி. இந்த ஏற்பாடு அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

அன்று மாலை கடையை விலை பேசி முடித்துத் திரும்பிக் கொண்டிருந் தார்கள். இப்படி முந்தானைகளில் முடிச்சவிட்டுக் கொண்டு செல்லும் அதிசயப் பெண்மணிகளைச் சிலர் வேடிக்கை பார்த்தனர். புதுப்பேட்டை வாராவதியைக் கடந்து சித்ரா டாக்கீஸ் புறமாகத் திரும்பும் வழியில் சென்று கொண்டிருந்தபோது—

இந்த இரட்டைப் பெண்மணிகளைக் கவனித்து விட்டனர், அவ்வழியாக வந்து கொண்டிருந்த திருப்பதியும் ஆண் டாளுவும்!

''அடி, ஆண்டாளு! கீழ்ப்பாக்கத்தில் ஒரு வெள்ளைக்காரத் துரை வீட்டுலே பணம் தண்டப் போனோமே, அங்கே பார்த்த ரெண்டு முடிச்சுப் பொண் ணுங்க இல்லே இவங்க?'' என்று திருப் பதி வியப்புடன் கேட்டான்.

''இல்லே! இன்ஸ்பெக்டர் மோகன சுந்தரம் வீட்டுலே முந்நூத்தி ஐம்பது ரூபாய் வாங்கினோமே, அந்தப் பண முடிச்சுக்குரியவங்க இவங்க!'' என்றாள் ஆண்டாளு.

''ஆண்டாளு...''

''பின்னே என்ன! யாருட்டியோ பேசறப்பிலே இல்லே, கத்தி வளைச் சுக் கேக்கறீங்க!''

விலை குறைப்பும் ஒலி பரப்பும்



மிகக் குறைந்த விலையில் டிரான்ஸிஸ்டர். அகில உலகத்தில் உள்ள எல்லா நிலையங்களும் கேட்கும் — இதற்கும் நிலையத்துக்கும் இடையில் சுமார் முப்பத் தைந்து மைல் தூரம் மட்டுமே இருந்தால்! - தேத்

''சரி, சரி! இவங்களை ஃபாலோப் பண்ணி இவங்களை வைச்சே சில காரி யங்களைச் சாதிக்கணும். நீ என்ன சொல்லறே?''

''இன்ஸ்பெக்டர் தான் ஏமாந்தாரு!''

திருப்பதி கடகடவென்று சிரித்தான்: ''அடி பைத்தியமே! இன்ஸ்பெக் டரே ஏமாந்தாருன்னு சொல்லு! மத்த வங்களைப் பத்தி....''

''கொஞ்சம் நிறுத்துங்க! ஆமாம்; இப்ப வரவர அடிபுடின்னு கூப்பிட ஆரம்பிச்சுட்டீங்க?''

''அடி என்பதற்குப் பல அர்த்தங்கள் உண்டு ஆண்டாளு! 'அடி'ங்கிறதி லேயே அடிமையாய் விடுவியா என்ன? அப்படிப் பார்த்தா பெண்டாட்டிக்குச் சரியான அர்த்தம் என்னன்னுதான் நினைக்கிறே?''

''நான் உங்க பெண்டாட்டியா?''

''அடி, ஆண்டாளு, தாலி ஒண்ணு தானே கட்டலே?''

''வாயை மூடுங்க! 'அடி' 'பிடி'ங்கிற தெல்லாம் என்கிட்ட வேணாம்! நாம புருஷன் பெண்சாதி இல்லே!''— ஆண் டாளு கடிந்து கொண்டாள்.

''தெரியுமே ஆண்டாளு! நாம வாழ்க்கை ஒப்பந்தம் பண்ணிக்கிட்ட வங்க இல்லே;. வாழறதுக்காக ஒரு ஒப் பந்தம் பண்ணிக்கிட்டவங்க!'' என்று திருப்பதி சொன்னான்.

''உங்க தில்லு முல்லுக் கெல்லாம் நானும் தாளம் போட வேண்டியதா யிருக்கு!''

''லாபத்திலே பாதி உனக்கும் கிடைக்குதே!''

''அதுக்காகத்தான் உங்களைப் பொறுத்துக்கிட்டிருக்கேன்.''

''புருஷன் பொண்சாதின்னு சொல் லிக்கிட்டுப் போறதிலேலே பல அனு கூலங்கள் இருக்கு. அந்தக் குருடியும் செவிடியும் உலகத்திலே வாழறதுக் காகத்தான் ஒரு முடிச்சைப் போட்டுக் கிட்டிருக்காங்க! நாமும் வாழறதுக் காகத்தான் புருஷன் பெண்சாதிங்கிற பொய்யான ஒரு முடிச்சைப் போட்டுக் கிட்டிருக்கிறோம்.''

''அவுங்க உழைச்சு வாழ நினைக் கிறாங்க!''

''நாம ஏமாத்தி வாழ நினைக்கிறோம். ஆண்டாளு! மனச்சாட்சியை நடுத் தெருவிலே கேள்வி கேட்க விடாதே!... புருஷன் பெண்சாதியை அடக்கி வைக் கணும்; பெண்சாதி மனச்சாட்சியை அடக்கி வைக்கணும்...''

''போதும், போதும் உங்க தத்துவப் பொன்மொழி! அடுத்தாப்பலே என்ன? அதைச் சொல்லுங்க!''

''நம்ப பிழைப்புக்கு ஏற்கனவே இந்த ரெண்டு பேரும் பிள்ளையார் சுழி போட்டாச்சு!''

''ஆமாம்! முந்நூத்தி அம்பது ரூபான்னு சும்மாவா? இப்ப என்ன செய்யப் போறீங்க?''

''இவுங்களையே இன்னும் கொஞ்சம் எக்ஸ்பிளாயிட் பண்ணணும். இவுங் களைச் சம்மதிக்க வைச்சு, ஒரு பேட்டி யைப் பத்திரிகையிலே போடப் போறேன். அதைக் காட்டியே கலெக் ஷன்! நல்ல ராசிக்காரப் பொண்ணுங்க! இல்லேன்னா எடுத்த எடுப்பில் முந் நூற்று ஐம்பது ரூபாய் கிடைத்திருக் குமா?''

''பண முடிச்சுக்குப் பணம் கேட்க இன்னிக்கு சினிமா நட்சத்திரம் ஜெயா வீட்டுக்குப் போறதா இல்லே புறப்பட் டோம்?''

''எந்த ஜெயா? ஓ....அந்த ஜெயாவா? ஒரே கன்ஃப்யூஷன்! ஒரே ஜய ஜய ஜய மயமா இருக்கவே புரியல்லே. அதுக் கின்னு....? இப்ப இவங்க எங்கே போறாங்க? இந்த இடத்துக்கு ஏன் வந்தாங்கன்னு தெரிஞ்சுக் கிட்டா நாளைக்கு வந்து கவனிச்சு....''

திருப்பதி இப்படிச் சொல்லி முடிப்ப தற்குள் எதிரே பூதாகாரமாக ஒரு லாரி தடதடவென்று விரைந்து வந்தது. பாதையைக் கடக்கக் குறுக்கே நடந்து வந்த சீதாலட்சுமி, அருகே நெருங்கி வந்துவிட்ட லாரியைக் கண்டு அரண்டு மருண்டு அலறிவிட்டனர்.

இந்தக் காட்சியைக் கண்டு திணறிப் போன திருப்பதி, ''ஆண்டாளு! கையிலே கிடைச்ச லாபம் வாய்க்கு எட் டாமப் போயிடும் போல இருக்கே'' என்று கூவிக் கொண்டே பாய்ந்தான்!

(தொடரும்)



ரேடியோவின் சிறந்த கட்டங்களுக்கு எஸ்ட்ரெலா வின் சிறந்த ரேடியோ பாட்டரிகள்

ரேடியோ நாடகங்களின் நவரச நயங்களை நிறைவுடன் கவர்ந்திடும் கனி-ரென்ற தெளிவுள்ள ஒலியின்பம்—கூடுதலான சக்திசெறிந்த எஸ்ட்ரெலா பேட்டரிகளை உபயோகிக்கும் நல்விளைவே. காகித, பிளாஸ்டிக், உலோக கவச உறைகளிட்ட பேட்டரி வகைகள் உள்ளன நீங்கள் தேர்ந்தெடுக்க. கசியாத் தன்மை உடையவை அவை. நெடுங்காலம் உழைப்பவை. டார்ச்சு-களுக்கும் இவையே சிறந்தவை, ஓங்கிய ஒளியையும் நம்பிக்கையான உழைப்பையையும் தருபவை.




எஸ்ட்ரெலா
பேட்டரிகள்

அதிக சக்தி அதிக உபயோகம்

எஸ்ட்ரெலா பேட்டரீஸ்
லிமிடெட், பம்பாய்-19.

FOCUS J 10 (G) TH


ஜாங்கோ ஜக்கு
கதை: குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: ராஜு
25
அழுக்கனார் வீட்டுக்கு வந்த அனந்தாச்சாரி, அங்கு ஏற்கெனவே மஸ்தான் வந்து உள்ளே இருப்பதை அறியாமல் வாசலிலேயே சற்றுத் தயங்கினார். அதற்குள்....
கப்பண்ணா! உன்னை ஒரு கை பார்க்கறேன்!
வேண்டாம்டா! உருப்படியா இருப்பதே ஒரு கை தானே!
இது மட்டும் ஒழுங்கா இருப்பானா? அரை- குறையாக்கு கிறேன்!
பாழாக்குவது என்ன அர்த்தமா! ஹி... ஹி... நல்ல ஜோக்!
ஐயோ! போச்சு, போச்சு! ஆ! ஊ! ஆபத்பாந்தவா! அநாதரட்சகா!
கூடச்சகரும் கனபாருமம் வெளியே இருந்து அனந்தாச்சாரியை உள்ளே இழுத்தனர்.
என்னைக் கூப்பிட்டாயா, கப்பண்ணா?.... அடேய்! விடுடா அவனை, தூவிட்டேன்!
அனந்தாச்சாரி அழுக்கனாரையும் மஸ்தானையும் இரண்டு கை பார்த்துப் பின்னர் விலகிவிட்டார். அவர்களுக்குத் தண்டனை பெற்றுத் தரப் போதிய சாட்சியங்கள் அழுக்கனார் வீட்டைச் சோதனையிட்ட போது கிடைத்தன.
நீண்ட நேரம் கழித்து....
யாரு கப்பண்ணாவா? என்ன இது? இரண்டு கைகளுமே தூளியில் தொங்குது?
ஏதோ, விலங்கை மாட்டாமே துணியை மாட்டியதோடு விட்டாங்களே; அதைச் சொல்லு!
இன்னொரு கையும் ஒடிஞ்சதே எனக்குப் போதிய தண்டனைன்னு சொல்லி அனுப்பிச் சுட்டான் அனந்தாச்சாரி!
எனக்குக் கூட, பொன்மொழி உயிராயத்தான் ஜெயிலில் இருந்த போது அவனைப் பிரிஞ்சு துன்பப் பட்டதே போதிய தண்டனைன்னு சொல்லிட்டான்!
என்னைக் கேட்டா, இனி யோக்கியர்களாகவே இருந்திடலாம்.



சில நாட்களுக்குப் பின் ....
பொன் மொழி! ஹனிமூன் முடிஞ்சுது; லீவும் முடிஞ்சுது. இனி நான் ஆபீஸுக்குப் போய்த் தொலையத் தான் வேண்டும்!
ஆபீஸும் வேணாம், மண்ணும் வேணாம். வாசலறையிலே ஒரு புரொட்யூஸரும் டைரக்டரும் காத்திருக்காங்க!
என்னாது!
அப்பா எடுத்த அரை குறைப் படத்தைப் பார்த்தாங்களாம். அபாரமாம்! அதையும் விலைக்கு வாங்கி உங்களையும் 'புக்' பண்ண வந்திருக்காங்க!
ஐயோ! வேண்டவே வேண்டாம்! நான் இப்படி கொஞ்சப் பக்குவமாகவே ஆபீஸ் நீட்டறேன் கும்பிடு!
காரியாலயத்தில் ....
பராங்குசம் ஸார்! சினிமாவுக்கு ஒரு முழுக்குப் போட்டுட்டேன். இந்தக் குமாஸ்தா வேலையை ஒழுங்காய்ப் பார்த்தால் போதும்னு முடிவு பண்ணிட்டேன்.
ஏன் அவுட் டோர் போன இடத்திலே போதிமரம் ஏதாச்சும் இருந்துச்சோ?
கிடக்குது, சரி சரிப்பா வேலையைக் கவனி! முன் போல நாயை யெல்லாம் ஆபீஸுக்குக் கொண்டு வரக் கூடாது; புரிஞ்சுதா?
எஸ், ஸார்!
அதென்ன கூடையில்? மதிய உணவா? இல்லையா டிபனா?
லொள்! லொள்!
ஒன்றுக்கு இரண்டாகவா...?

முற்றும் ?

பார்வை பொல்லாதது! அந்தப் பார்வை பட்ட தோஷமோ அந்தக் குடும்பத்தை அல்லல்படுத்துகிறது... பிரபல சிறுகதை ஆசிரியர் சங்கரராம் பார்வையை வைத்துச் சிறுகதையே பின்னி விடுகிறார்! ❋

மூத்தூர் மாளிகை, நகரில் ஓர் அமைதியான வட்டாரத்தைச் சேர்ந்தது. எல்லா வசதிகளோடும் கூடிய இந்த வீடு சதுரமாகக் கட்டப்பட்டிருந்தது. மாடியில் ஒரு பக்கத்தில் இரண்டு குடும்பங்களும் எதிரில் மற்றொரு பக்கத்தில் இரண்டு குடும்பங்களும் வாடகை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கீழே இருந்த இடம் முழுவதையும் வீட்டுக்காரர்களே வைத்துக் கொண்டிருந்தார்கள். மாடியின் கீழ்ப்புறத்தில் சுந்தரமூர்த்தி தன் மனைவியுடன் வசித்தான். அவனிடத்தை ஒட்டினாற் போலிருந்த பகுதியில், அவனுடைய நண்பன் சுப்பிரமணியனும் அவனுடைய தாயார் மீனாட்சி அம்மாளும் இருந்தார்கள்.



சுந்தரமூர்த்திக்குத் திருமணமாகி மூன்று மாதங்கள்தாம் இருக்கும். அவன் மனைவி கோகிலத்துக்குத் தன் கணவன் அலுவலகத்திலிருந்து திரும்பி வரும் வரையில் அமைதியே இருக்காது. பக்கத்தில் மீனாட்சி 'அத்தை' இருந்திராவிட்டால்.. அவள் என்ன பாடு பட்டிருப்பாளோ! அவளுடைய துன்பத்துக்கு முக்கிய காரணம் எதிரே இருந்த லலிதாதான். இரண்டு குடும்பத்தாருக்கும் இடையே முப்பதடி தூரம் இருந்தது. ஆயினும் லலிதாவின் கண்ணோட்டம் எப்பொழுதும் கோகிலத்தின் அறைப் பக்கமாகவே இருக்கும். அவளும் கோகிலத்துக்குச் சம வயசானவள்தான்; ஆனால் திருமணமாகவில்லை. போதும் போதாததற்கு, முன்னே புடைத்துக் கொண்டிருந்த அவளுடைய விழிகள் கோகிலத்தின் அருவருப்பை மேலும் அதிகரித்தன.

சுந்தரமூர்த்தி அலுவலகத்திலிருந்து மாலையில் திரும்பி வரும்பொழுது, தன் அருமை மனைவிக்கு ஏதாவது ஒன்றை வாங்கி வராமல் இருக்கமாட்டான். இருவரும் ஆனந்தமாகக் குலாவுவதைக் காண லலிதாவுக்கு ஓர் ஆத்திரம் — பொறாமை. அதே இடத்தில், சுந்தரமூர்த்தி தன் தாயாருடன் நான்கு வருஷங்கள் வசித்தான். அவனுடைய தாயாரை வசப்படுத்திக் கொண்ட லலிதாவின் பெற்றோர்கள், அவளை அவனுக்குக் கட்டிக் கொடுத்துவிட எவ்வளவோ முயற்சிகள் செய்தார்கள். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. எனவே, தான் வாழ்க்கைப்பட விருந்த சுந்தரமூர்த்தியைக் கோகிலம் அபகரித்துவிட்டது போன்ற எண்ணம் லலிதாவுக்கு வந்துவிட்டது.

ஒரு நாள் மாலை சுந்தரமூர்த்தி வீட்டுக்கு வந்தபொழுது கோகிலம் விரலில் ஒரு துணி சுற்றியிருப்பதைக் கண்டான். ''என்ன செய்து கொண்டாய்?'' என்றான் அவன் பரிவோடு.

''ஒன்றுமில்லை. அரிவாள்மனையில் விரலுக்குச் சிறிது காயம் ஏற்பட்டது. அந்தக் கண்கொத்திப் பாம்பு பார்த்தால், ஏதாவது கஷ்டம் வரத்தான் வரும்.''

''அது ஓர் அசடு. நீ ஏன் அவளைச் சட்டை செய்கிறாய்?''

''அப்பா! அவளுடையது என்ன பிறப்போ! காய்கறிக்காரர்களிடத்தில் சண்டை, பழம் விற்பவர்களிடத்தில் சண்டை. எல்லோரும் ஒரு வீசைச் சாமானை எட்டணாவுக்குக் கேட்டால், இவள் நாலணாவுக்குத்தான் கேட்பாள். அப்பொழுதும் தானாகக் கூடையிலிருந்து கொஞ்சம் எடுத்துப் போட்டுக் கொள்வாள்.''

''அவர்களிடமிருந்து வசவையும் வாங்கிக் கொள்வாள்!'' என்றான் சுந்தரமூர்த்தி.

''அது இல்லாமலா? இரக்கமே கிடையாது. பிச்சைக்கு யார் வந்தாலும் அடித்துத் துரத்த வேண்டியதுதான்.''

"நீதான் இருக்கிறாயே, அள்ளிக் கொடுப்பதற்கு? நேற்று யாருக்கோ ஒரு ரூபாயும் அரிசியும் கொடுத்தாயாமே!"

"யார் சொன்னது? மீனாட்சி அத்தையாக இருக்கும். பாவம், அந்த லட்சுமிப் பாட்டியின் பேரன்களுக்கு இரண்டு நாட்களாய்ச் சாப்பாடு இல்லையாம். கேட்பதற்குக்கூட அந்தப் பாட்டி எவ்வளவு தயங்கினாள், தெரியுமா? கஷ்டப்படுகிறவர்களுக்கு உபகாரம் செய்யாமல் எப்படி இருக்கிறது? எங்கள் அம்மா வழக்கம் எனக்கு — அதோ பாருங்கள் அந்தக் கண்கொத்திப் பாம்பை!" என்று கோகிலம் ஜன்னல் கதவைப் 'படார்' என்று பலமாகச் சாத்தி மூடினாள்.

"வீட்டுக்கார அம்மாள் சண்டைக்கு வந்து விடப் போகிறாள்!" என்று கூறிச் சுந்தரமூர்த்தி சிரித்தான்.

"ரிப்பேர் செய்து கொடுத்துவிட்டால் போகிறது. இந்த இடத்தில் இருப்பது நமக்கு நல்லதில்லை. அதுதான் எனக்குத் தெரியும். சட்டுப்புட்டென்று இதைக் காலி செய்து விடவேண்டும்" என்றாள் கோகிலம்.

"இரண்டு வாரங்கள் பொறு. அதற்குமேல் ஆகும் போலிருந்தால் உன் அம்மா வீட்டில் ஒரு மாதம் இருந்து வாயேன்."

"ஊம், நான் போக மாட்டேன்" என்று கோகிலம் தலையைப் பலமாக அசைத்தாள்.

மறு நாள் சுந்தரமூர்த்தி அலுவலகத்துக்குச் சென்று அரை மணி இருக்கும். அப்பொழுது ஒரு பிச்சைக்காரி, எலும்பும் தோலுமாக இருந்த இரண்டு குழந்தைகளை அழைத்துக் கொண்டு, மெல்ல மாடிக்கு வந்தாள். அவளுடைய விழிகள் பட்டினியால் புதைந்து கிடந்தன. அவள் உடுத்தியிருந்த கந்தல் உடலைச் சரிவர மூடக் கூடப் போதவில்லை.

"இதைக் கட்டிக் கொண்டு, நீ எப்படி வெளியே திரிகிறாய்? வெட்கமில்லை?" என்று கோகிலம் அவள் மீது எரிந்து விழுந்தாள்.

அந்தப் பிச்சைக்காரியின் துக்கம் எந்த நொடியில் அணையை உடைத்துக் கொண்டு வர வேண்டும் என்று இருந்தது போலும். "ஓ" என்று கதறிக் கொண்டு கீழே உட்கார்ந்து விட்டாள். கண்ணீர் அருவியாய் வழிந்தது.



'' நான் என்ன செய்வேன், அம்மா! இரண்டு குழந்தைகளையும் என்னையும் விட்டுட்டு ஓடிட்டானே!''

கோகிலம் பேசாமல் உள்ளே சென்று, சிறிதும் கிழியாமலிருந்த ஒரு பழைய புடவையைக் கொண்டு வந்து அவள் முன்னால் போட்டாள். பிறகு, ''சாதத்தை எதிலே போடுகிறது?'' என்று கேட்டாள்.

பிச்சைக்காரி விழித்தாள். ''இந்தக் குவளையிலே போடு தாயே!''

''அது பிடிக்காதே!'' என்று கோகிலம் மறுபடியும் உள்ளே சென்று, சோற்றோடு குழம்பையும் ஓர் இலையில் கலந்து, அதை ஒரு துண்டுத் துணியில் கட்டி, அவள் முன் வைத்தாள். இப்பொழுது, யாரோ ஒருவன் மாடிப் படிகள் ஏறி வந்து கொண்டிருந்தான். அவன் சட்டையும் கால்சட்டையும் வெண்மையாக இருந்தன. ஆனால் அவனுடைய தலைப்பாகை மட்டும் சிவப்பாக இருந்தது.

'' அம்மா, பி. சுந்தரமூர்த்தி வசிப்பது இந்த இடந்தானா?''

'ஆம்' என்பது போல் கோகிலம் தலையை அசைத்தாள்.

'' இந்தச் சிறு குறிப்புப் புத்தகம் அவருடையதுதானே?'' என்று கையகலத்துக்கு இருந்த நோட்டுப் புத்தகத்தைக் காட்டினான்.

''ஆமாம், சங்கதியைச் சொல்லுங்கள்'' என்று கோகிலம் பதைத்தாள்.

''ரோட்டைத் தாண்டும்போது, ஒரு மோட்டார் வண்டி அவரைத் தள்ளி விட்டது. அவரிடம் இருந்த இந்த நோட்டுப் புத்தகத்திலிருந்து..........''

கோகிலம் கீழே விழுந்துவிட்டாள். ''மோட்டார் வண்டி தள்ளிவிட்டது'' என்ற சொற்களைத் தவிர வேறொன்றும் அவள் காதில் விழவில்லை; துடிதுடித்தாள்; நாவில் பேச்சு எழவில்லை; ''அத்—தை!— அத்—தை!'' என்று நெஞ்சு உடைய விம்மினாள். ஒரு கணத்தில் மீனாட்சி அம்மாள் ஓடி வந்தாள். ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வந்த சேவகன் விஷயங்களைத் தெரிவித்தான். மீனாட்சி 'அத்தை' கோகிலத்தை வாரி மார்போடு அணைத்துக் கொண்டாள்.

'' என் கண்ணே! பகவான் காப்பாற்றி விடுவார். பயப்படாதே, தெய்வம் இருக்கு'' என்னும்போது மீனாட்சி அம்மாளுக்கு அழுகை வந்துவிட்டது. பிறகு, ஆஸ்பத்திரிச் சேவகனையே ஒரு டாக்ஸியை அழைத்து வரும்படி கேட்டுக் கொண்டாள்.

இந்தக் கலவரத்தில் பிச்சைக்காரியின் ஓலமும் கலந்து கொண்டது. அவளுடைய துயரம் கோகிலத்தையும் மீறிவிட்டதுபோல் தோன்றியது.

''தாயே! ஆண்டவன் காப்பாற்றுவான். தருமம் தலை காக்கும், அம்மா பயப்படாதே. நான் ஏழைதான். ஆனால் ஏழை வாயாலே தான் ஆண்டவன் பேசுவான். பிழைச்சிடுவார், பிழைச்சிடுவார், எனக்கு நல்லாத் தெரியுது.''

பிச்சைக்காரியின் பேச்சு யாருக்கு வேண்டும்?

சில நிமிடங்களுக்குள் டாக்ஸி வந்தது. அவசரம் அவசரமாக மீனாட்சி அத்தை வீட்டைப் பூட்டி, கோகிலத்துடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றாள்.

ஆஸ்பத்திரியில் வழி காட்டிக் கொண்டு போன சேவகனுக்கு ஓர் அடி முன்னதாகவே கோகிலம் நடந்தாள். சுந்தரமூர்த்தி படுக்க வைக்கப்பட்ட வார்டும் வந்துவிட்டது. எட்டாவது கட்டிலண்டை வந்ததும் கோகிலம் பிரமித்து, ''இது யாரோ! அவர் இல்லை!'' என்று கூறும்போதே, அவள் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை வந்து விட்டது. தன் கணவனின் அலுவலகத்தின் டெலிபோன் எண் அவளுக்குத் தெரியும். உடனே போன் இருக்கும் இடத்துக்குச் சென்று சுந்தரமூர்த்தியை அழைத்தாள். கோகிலம் அழைக்கிறாள் என்றதும், சுந்தரமூர்த்திக்கும் சிறிது அச்சம் உண்டாயிற்று. கோகிலம் நிகழ்ந்ததையெல்லாம் சொல்ல, சுந்தரமூர்த்திக்கு விஷயம் விளங்கிவிட்டது.

'' சங்கதி இதுதான் கோகிலம்! நான் பஸ்ஸைவிட்டு இறங்கும்போது, ஒரே நெருக்கடி. அப்பொழுது ஒரு ஜேபியடிக்கிறவன் என்னுடைய பணப் பையை எடுத்துக் கொண்டுவிட்டான். இதை நான் ஆபீஸில் நுழையும்போதுதான் கவனித்தேன். இதற்குள், அந்தப் பாவி மோட்டார் வண்டியின் கீழ் விழவே, என் பணப் பையில் இருந்த குறிப்பு நோட்டிலிருந்து, விழுந்தவன் நான்தான் என்று நினைத்துவிட்டார்கள்'' என்றான் சுந்தரமூர்த்தி.

'' சரி, உடனே லீவு எடுத்துக் கொண்டு இங்கே வாருங்கள். எல்லோரும் சேர்ந்து வீட்டுக்குப் போகலாம். ஆமாம், அத்தை என் பக்கத்தில்தான் நிற்கிறாள். இருந்தாலும் நீங்கள் வந்துதான் ஆகவேண்டும். இன்றைக்கு என்னால் தனியாய் இருக்க முடியாது'' என்று தழுதழுத்த குரலில் கூறினாள்.

''இதோ வருகிறேன்'' என்று சுந்தரமூர்த்தி போனைக் கீழே வைத்துவிட்டு, ஒரு நண்பனிடம் ஐந்து ரூபாயைக் கேட்டு வாங்கிக் கொண்டு, ஆஸ்பத்திரிக்குக் கால் மணி நேரத்துக்குள் வந்துவிட்டான்.

அவனைக் கண்டதும், கோகிலத்துக்குத் தன்னை அறியாமல் அழுகை வந்துவிட்டது. தனக்குச் சாட்சி கொடுக்க அவசியம் ஏற்படும் என்பதை உணர்ந்த சுந்தரமூர்த்தி, தன் அலுவலகத்தின் விலாசத்தைப் போலீஸ்காரர்களுக்குக் கொடுத்தான்.

பிறகு, கோகிலத்தையும் மீனாட்சி அத்தையையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்து ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டு, மூவரும் வீட்டை நோக்கிச் சென்றனர்.

கோகிலம் அழுகையும் சிரிப்புமாக இருந்தாள்.

'' நல்ல வேடிக்கை இது!'' என்றான் சுந்தரமூர்த்தி.

'' வேடிக்கை இல்லை அப்பா. அந்தப் பாழும் திருஷ்டியின் கோளாறுக்கும்!'' என்றாள் மீனாட்சி அத்தை.

உலகிலேயே சிறந்த உங்கள் குழந்தைக்காகவே பிறந்தது



CMGBT-2-202 TM


குடும்பங்களின் பேராதரவு பெற்றது
லிப்டன்
ஹிமாலயன்
கோல்டன்
டஸ்ட் டீ
நல்லதோர் தேயிலையிடம்
நீங்கள் கோரும்
அனைத்தையும் அளிக்கிறது
LIPTON'S
GOLDEN DUST TEA
பாக்கிங் செய்த தேயிலை மட்டுமே
புதிதாகவும், மணத்துடனும் திகழ்கிறது
LHGC-12-72 TAM



சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

முப்பத்தெட்டாவது அத்தியாயம்

பாண்டியன் முதலியவர்கள் துணை வேந்தரைச் சந்தித்துப் பேசிய இரவுக்குப் பின் எதிர்பார்த்த மாறுதல் ஏற்பட்டது. ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த அண்ணாச்சி, மணவாளன், தேசியத் தோட்டத் தொழிற் சங்கத்தின் செயலாளர் ஆகிய மூவரையும் போலீஸ் நிபந்தனையின்றி விடுதலை செய்து விட்டது. அவர்களை விடுவிப்பார்களோ மாட்டார்களோ என்ற சந்தேகத்தோடு பார்த்துப் பேசவாவது அனுமதி பெறலாம் என்று சிறைச்சாலைக்குச் சென்ற பாண்டியன், கண்ணுக்கினியாள், மாணவ நண்பர்கள் எல்லாருக்கும் இந்த நற்செய்தி எதிர்பாராத வியப்பை அளித்தது. உடனே ஒரு மாணவன் சைக்கிளில் விரைந்து பூக்கடைக்குச் சென்று மாலைகள் வாங்கிக் கொண்டு வந்தான். சிறை வாயிலில் விடுதலையான மூவருக்கும் பாண்டியனும் கண்ணுக்கினியாளும், கூடியிருந்த மற்ற மாணவர்களும் மாலையிட்டு வரவேற்றார்கள்.

'' அண்ணன் நேற்றுத்தானே ஊரிலிருந்து வந்தீர்கள்? உங்களை ஏன் கைது செய்தார்கள்?'' என்று மணவாளனைப் பாண்டியன் கேட்டபோது ''இந்த ஆட்சியில் காரணம் பார்த்தா மனிதர்களைக் கைது செய்கிறார்கள்? வேண்டாதவர்களுக்கும், அரசியல் எதிரிகளுக்கும் எப்படியாவது தொல்லை கொடுத்து அவர்களை அலைக்கழிக்க வேண்டும். அதற்காகவே பலரைக் கைது செய்கிறார்கள். அதற்காகவே பலர் மேல் பொய் வழக்குப் போடுகிறார்கள்'' என்று மறுமொழி கூறினார் மணவாளன்.

''சுதந்திரம் என்பது பொறுப்புக்களிலிருந்து விடுபடுவது என்று புரிந்து கொண்டு விட்டவர்கள் நிறையவுள்ள நாடு இது. பொறுப்புக்களோடு அதிகம் இணைவதே உண்மையான சுதந்திரம் என்று எல்லோருக்கும் புரிய வைக்கிற வரை இந்த நாடு சீர்படாது. அடிமைத் தனத்திலிருந்து விடுபடலாம். ஆனால் அதே சமயம் பொறுப்புக்களோடு நம்மை அதிகமாகப் பிணைத்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பிணைத்துக் கொள்ளாததால்தான் இவ்வளவு வினையும் வந்திருக்கிறது'' என்றார் தொழிற்சங்கச் செயலாளர்.

''எல்லா வகையிலும் பொறுப்பில்லாத மக்களுக்குப் பொறுப்பில்லாத ஆள்பவர்கள்தான் கிடைப்பார்கள். விசுவாசமில்லாத பலர் கூடி ஒரு விசுவாசமுள்ள ஆட்சியை ஏற்படுத்திக் கொள்ள முடியாது. 'ஏனோ தானோ' மனப்பான்மை என்பதே சராசரி இந்தியனின் பொதுக் குணமாக இருக்கிற வரை எப்படிப்பட்ட ஆட்சியையும் அவர்கள் பொறுத்துக் கொள்வார்கள்'' என்றார் விடுதலையானவர்களைப் பார்க்க வந்திருந்த மற்றொருவர்.

சிறை வாசலில் கூடிவிட்ட மாணவர்களும், கூட்டத்தினரும் விடுதலையானவர்களை அண்ணாச்சி கடை வாசல்வரை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். செல்லும் வழியிலும் அங்கங்கே கூட்டமாக மக்கள் சேர்ந்து கொண்டதால் ஊர்வலம் பெரிதாகி வளர்ந்திருந்தது. அண்ணாச்சி என்கிற மனிதரை மல்லிகைப் பந்தலில் சிறு குழந்தைகளுக்குக் கூடத் தெரியும். மாணவர்களில் எல்லாப் பிரிவுப் படிப்பில் படிக்கும் சகல மாணவர்களும் அவர் மேல் மூத்த தமையனின் மரியாதையைச் செலுத்தி வந்தார்கள். அவருடைய பொது நலப் பணிகளும், பரோபகார சிந்தையும் ஊரறிந்தவை. தோட்டத் தொழிலாளர்களும், ஏழை எளியவர்களும் அண்ணாச்சியின் சைக்கிள் கடையைக் 'காந்திக்காரரர் கடை' என்றுதான் குறிப்பிட்டுப் பேசுவார்கள். அந்த அளவுக்கு அண்ணாச்சியின்மேல் மதிப்பு வைத்திருந்தார்கள் நகர மக்கள். ஒழுக்க

மும், வாக்கு நாணயமும், எங்கே யாருக்குச் சிரமம் என்றாலும் தானே உடன் ஓடிச் சென்று உதவுகிற குணமும், எந்த நிலையிலும் பொறுமை இழக்காத மனோதிடமும் அண்ணாச்சியை எல்லோருமே மரியாதை செய்யும் தகுதிக்கு உரியவராக்கி இருந்தன. மேடைகளில் ஏறிக் கண் கூசும் வெளிச்சத்தில் நிற்கவும், சுவரொட்டிகளில் பெரிதாகப் பேர் அச்சிடவும் ஆசைப்படாமல் தொண்டு செய்யவும், உழைக்கவுமே ஆசைப்படும் அண்ணாச்சியின் தனித் தன்மை காரணமாகவே அவர் பிறரால் தொழத்தக்கவர் ஆகியிருந்தார். அப்படிப்பட்டவரைப் போலீஸார் கைது செய்ததே நகரில் பெரும் பரபரப்பை உண்டாக்கியிருந்தது. இன்று அவர் விடுதலை ஆகி விட்டார் என்பதும் அவருக்குப் பின் கைது செய்யப்பட்டவர்களும் அவரும் விடுதலையாகிச் சிறை வாசலிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார்கள் என்பதும் வீதியில் பெருங் கூட்டத்தைக் கூட்டிவிட்டது. ஒவ்வொரு வார்டிலும் அங்கங்கே அமைந்திருந்த ஒவ்வொரு தேசியப் படிப்பகத்திலும் ஊர்வலத்தை நிறுத்தி அண்ணாச்சிக்கும், மணவாளனுக்கும், தொழிற் சங்கச் செயலாளருக்கும் மாலைகள் சூட்டி வரவேற்றார்கள். ஊர்வலம் கடையை அடைய வெகு நேரம் ஆயிற்று. ஊர்வலம் கடை வாயிலை அடைந்ததும் கூட்டத்தினரை அமைதியாகக் கலைந்து செல்லுமாறு அன்போடு வேண்டினார்கள் மணவாளனும், பாண்டியனும். அண்ணாச்சி எல்லோரையும் நோக்கி மலர்ந்த முகத்தில் புன்முறுவலோடு கைகூப்பினார். எந்தக் களங்கமும் இல்லாத அவருடைய அந்த முகமலர்ச்சியும், புன்முறுவலும், ஒரு குழந்தை சிரிப்பதைப் போலிருந்தன. சிறையிலிருந்து விடுதலையாகி வந்த அலுப்போ, களைப்போ, சோர்வோ சிறிதும் இன்றிக் கடை முகப்பில் வரிசையாக அடுக்கியிருந்த சாக்லெட் பாட்டில்களில் இருந்து இரு கையும் நிறைய மிட்டாய்களை அள்ளிக் கூட்டத்திலும் கடை முன்புறமும் இருந்தவர்களில் சிறுவர், சிறுமிகளைத் தேடிச் சென்று 'இந்தா, மிட்டாய் சாப்பிடு' என்று அவர்களுக்கு மிட்டாய் வழங்கத் தொடங்கி விட்டார் அண்ணாச்சி. மணவாளனும், பாண்டியனும், கண்ணுக்கினியாளும், தொழிற் சங்கச் செயலாளரும் மற்றுமுள்ள மாணவர் பிரதிநிதிகளும் கடையின் பின்புறமுள்ள அறைக்குச் சென்றனர். பாண்டியன் தான் மல்லிகைப் பந்தலுக்கு வந்தவுடன் பூதலிங்கத்தைச் சந்தித்ததையும், அவர் யோசனையின்படியே துணைவேந்தர் தாயுமானவனாரைச் சந்தித்ததையும், தாயுமானவர் தன்னையும் எதிரே வைத்துக் கொண்டே ஆர். டி. ஓ. வுக்கு ஃபோன் செய்ததையும் மணவாளனிடம் விவரித்தான்.

''அண்ணன் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது! அண்ணாச்சியும் நீங்களும், நம்ம தொழிற் சங்கச் செயலாளர் அன்வைனும் விடுதலையாகணும்கிற ஒரே ஆசைக்காக நான் வி.சி. யிடம் பொய் சொல்லி நடிக்கும்படி நேர்ந்து விட்டது.''

''நடந்ததைப் பற்றி என்ன? இனி நடக்க வேண்டியதைப்பற்றிக் கவனிப்போம். இங்கே நியாயங்களை நிலைநாட்ட இன்று தந்திரமும் வேண்டியதாகத்தான் இருக்கிறது. சிங்க வேட்டைக்குத் துணிவு மட்டுமே போதும். நரி வேட்டைக்குத் தந்திரமும் வேண்டும். இன்றுள்ள



ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்து நாம் போராடுவது நரி வேட்டையைப் போன்றது பாண்டியன்! இந்த ஆட்சியில் துணைவேந்தர்கள் பல்கலைக் கழகத்தில் ஆளும் கட்சியின் பல்கலைக் கழகக் கிளைக்குத் தலைவர்கள் போல் செயல்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் நாம் இருக்கிறோம். பட்டமளிப்பு விழாவின் போது நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது இரகசியமாகவே இருக்க வேண்டியது அவசியம். எந்தப் போராட்டத்துக்கும் நாம் முயல மாட்டோம் என்று வி. சி. நினைக்கும்படி நீ சொல்லி விட்டு வந்திருப்பது அப்படியே இருக்கட்டும், பாண்டியன்! ஆனால் உண்மையில் முன்பு திட்டமிட்டதை விடப் பெரிதாக நாம் இந்தப் போராட்டத்தை நடத்தப் போகிறோம். இப்போதே அதற்கான ஏற்பாடுகளைத் தொடங்க வேண்டும். இந்தப் பல்கலைக் கழக மாணவர்களைத் தவிர மாநிலம் முழுவதும் பிரதிநிதிகளை அனுப்பி ஒரு கல்லூரிக்கு நூறு பேர் விதம் திரட்டி மல்லிகைப் பந்தலுக்குப் படை திரண்டு வரச் செய்ய வேண்டும். எல்லோருமே போராட்டத்துக்கு வருவது போல் வரக் கூடாது. தனி பஸ் ஏற்பாடு செய்து, கொண்டு மல்லிகைப் பந்தலுக்கு உல்லாசப் பயணம் வருவது போல் தற்செயலாகத் தோன்றும்படி வெளியூர் மாணவர்களை வரச் செய்ய வேண்டும். நமது பல்கலைக் கழக மாணவர்கள் பல்கலைக் கழகக் காம்பஸிற்கு உள்ளேயும், மற்ற மாணவர்கள், நகரின் தொழிலாளர்கள், பொதுமக்கள், பிறர் எல்லாம் பல்கலைக் கழக எல்லைக்கு வெளியேயும் போராட



வேண்டும். ஆனால் எந்தப் போராட்டமுமே நடைபெறாது என்பது போல், வி. சி.யும், ஆர். டி. ஓ.வும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நம்பி ஏமாறும்படி பட்டமளிப்புவிழா நாளுக்கு முதல் நாள் இரவு வரையில் நாம் தந்திரமாக நடந்து கொள்ள வேண்டும். அது முக்கியம்!'' என்று மணி

வாளன் கூறியதும் ஒரு மாணவன் கேட்டான்:

''அவர்களாகவே நம்மேல் சந்தேகப்பட்டுக் கட்சி ஆட்களாகிய குண்டர்களையும், போலீஸ்காரர்களையும் இங்கே ஏராளமாகக் கொண்டு வந்து குவித்தால் என்ன செய்வது? அண்ணை நினைப்பது போல் அவர்கள் ஏமாறவோ, சும்மா இருக்கவோ மாட்டார்கள். மல்லை இராவணசாமி கொள்கைகளை நம்பி அரசியல் நடத்திப் பழகாதவர். அடியாட்களை நம்பியே அரசியல் நடத்துகிறவர். மானம், மரியாதை, மதிப்பு என்று அவருடைய கட்சி அடிக்கடி கூறும் வார்த்தைகளை அவர்களே காப்பாற்றியதும் கிடையாது. பிறருக்கு அளித்ததும் இல்லை! குண்டர்களை எப்படி எதிர்ப்பது?''


''எதிர்க்க வேண்டிய அவசியமே இல்லை. நம்முடைய கூட்டம் ஒரு வெள்ளமாகப் பெருகினால், நமது சத்திய ஆவேசமும், தார்மீகக் கோபமும் ஒரு பிரளயமாகத் திரண்டால் அதில் எல்லா எதிரிகளுமே தாமாக மூழ்கிப் போய் விடுவார்கள்'' என்று கூறிய மணவாளன், கண்ணுக்கினியாளின் பக்கம் திரும்பினார். ''சகோதரி! பெண்கள் படையைத் திரட்டும் பொறுப்பு உன்னுடையது. ஆண்கள் படையைத் திரட்டும் எங்கள் பாண்டியனைக் கவனித்துக் கொள்ள வேண்டியதும் உன் பொறுப்புத்தான்; லஞ்சமும் ஊழலும், எதேச்சாதிகாரமும் சுயநலமும் கொடுமைகளும் மலிந்து விட்ட ஓர் ஆட்சியை எதிர்த்துத் தொடங்கும் இளைய தலைமுறையின் இணையற்ற பெரும் போர் இது. இன்று இந்தப் போரின் தலைவன் நாளை உன் சொந்த வாழ்வுக்கும் தலைவனாக வேண்டியவன் என்று பேசிக் கொள்கிறார்கள். ஆகவே அவனையும் நீ பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறாய். அவனும் உன்னைப் பாதுகாக்கக் கடன்பட்டிருக்கிறான்'' என்று மேலும் சொல்லி விட்டுப் பாண்டியனையும் அவளையும் மாறி மாறி நோக்கிப் புன்னகை பூத்தார் மணவாளன். இதைக் கேட்டு அங்கு கூடியிருந்த எல்லோருமே சிரித்து விட்டார்கள். வெளியூர் மாணவர்களைக் கண்டு பேசி விளக்க உடனே பிரதிநிதிகள் பெயர்களைக் குறித்து அவர்கள் அங்கே போய் என்ன செய்ய வேண்டும் என்பதும் விளக்கப்பட்டது. இதற்குள் அண்ணாச்சி நீராடி உடை மாற்றிக் கொண்டு திருநீறு குங்குமம் பளிச்சிடும் நெற்றியுடனும் தும்பைப் பூப் போல் வெளேரென்ற கதர் ஆடையுடனும் வந்து தோன்றினார். கூட்டத்தில் மின்னல் வந்து நிற்பது போல் நின்றார் அவர்.

''ரெண்டு நாளா அண்ணாச்சியை உள்ளே தள்ளிக் கடை வியாபாரம் எல்லாத்தையும் கெடுத்துப்பிட்டாங்க, பாவம்'' என்றார் ஓர் ஊழியர்.

''அப்பிடிச் சொல்லாதீங்க தம்பீ! இந்தக் கடை வியாபாரம் இதெல்லாமே எனக்குப் பெரிசு இல்லே. நான் செய்ய ஆசைப்படற தொண்டுக்கு இது ஒரு விலாசம். இது ஒரு சாக்கு. இதைச் சாக்கா வைச்சுக்கிட்டு நான் பொதுக் காரியத்துக்கு அலையறேன். இதுக்கு முதலாளியாவோ, உரிமைக்காரனாவோ நான் என்னை நெனைச்சுப் பார்த்ததே இல்லே. நான் இதுக்குத் தர்மகர்த்தா. அவ்வளவுதான். எத்தினியோ மாணவர்கள் இங்கே என் கையாலே சிலம்பம் பழகினாங்க. ஆனா நான் சிலம்பம் ஆடி ஒரு நல்லவனைக் கெடுத்தது கிடையாது. 'நான் ஒரு தொண்டன். தொண்டு செய்கிறதற்குத் தடையாகிற அளவுக்குப் பெருமையும் உயரமும் எனக்கு வந்துவிடக் கூடாதே என்பது மட்டும்தான் நான் படுகிற ஒரே கவலை'' என்று பதிலளித்தார் அவர். ''தொண்டனாகவே வாழ்ந்து தொண்டனாகவே இறப்பதுதான் என் ஆசை.''

''அண்ணாச்சி! போகறதையும் சாகறதையும் பத்தி இப்ப என்ன பேச்சு?'' என்றார் மணவாளன்.

''எனக்கு மட்டும் போக ஆசையா என்ன? போகணும்னு வந்தாப் பத்து நல்லவங்களைக் காப்பாத்தறத்துக்காகத் தான் நான் போவேன்! எதிரிங்க என் உயிருக்குக் குறிவைச்சுக் கட்டிக்கிட்டு அலையறாங்க. ஆனா என்னைக் காப்பாத்திக்கணும்னு போராடி அதுக்காக நான் சாக மாட்டேன். என்னைத் தவிர மத்தவங்களைக் காப்பாத்த நான் சாகவும் தயாராயிருப்பேன். அப்படிப்பட்ட



சத்திய வெள்ளம்


நாட்டின் சுதந்திரம் என்பது பொறுப்புக்களிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதன்று. பொறுப்புக்களோடு தன்னை அதிகமாகப் பிணைத்துக் கொள்வதே தேச பக்தியுள்ளவனின் உண்மையான சுதந்திரமாகும்.

அற்புத அநுமானுக்கு இலட்சார்ச்சனை

முக்கண்ணராகப் பத்துக் கரங்களுடன் ஓர் ஆஞ்சநேயர் இருக்கிறார் என்றால் அது விசேஷமன்றோ? பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலிய தேவர்களுக்கு உரிய ஆயுதங்களையும் கரத்தில் தரித்துத் திரிநேத்ர தசபுஜ ஆஞ்சநேயராகத் திகழும் அநுமானைத் தஞ்சை மாவட்டம் பொறையாருக்கு அருகே உள்ள அனந்தமங்கலத்தில் தரிசிக்கலாம். இப்பெருமானுக்கு வருகிற ஏப்ரல் முதல் தேதியன்று ஒரே தினத்தில் லக்ஷார்ச்சனை செய்யப்படுகிறது. ஏப்ரல் முதல் தேதியை 'முட்டாள் தினம்' என்று ஆங்கிலத்தில் சொல்வர். அன்றைய தினம் 'புத்திமத்தாம் வரிஷ்டம்' — 'அறிவாளிகளில் தலைசிறந்தவர்' - எனப்படும் மாருதிக்கு நடக்கும் லக்ஷார்ச்சனையில் பங்கு பெறுவது பாக்கியமாகும். நவக்கிரக தோஷம், சங்கா தோஷக்காரர்கள் அவசியம் பங்கு பெற வேண்டும். அன்பர்கள் அர்ச்சனைக் கட்டணம் ரூபாய் பதினொன்றும், தங்கள் பெயர் விலாசமும் அனுப்ப வேண்டிய முகவரி: J. ராஜகோபாலன், அனந்தமங்கலம், காளியப்பநல்லூர் அஞ்சல், பொறையார் வழி, தஞ்சை மாவட்டம்.







நெஞ்சுறுதியை அந்தக் காந்தி மகான் எனக்குத் தந்திருக்காரு...''

''அந்தக் காந்தி மகான் மேலே ஆணையாக இனிமே நீங்க இப்படியெல்லாம் பேசமாட்டேன்னு முதல்லே சொல்லுங்க. இல்லாட்டி எங்களுக்கெல்லாம் கோபம் வரும். நாங்களெல்லாம் இருக்கறப்ப உங்களை எவன் நெருங்க முடியும்? நீங்க வெறும் அண்ணாச்சி மட்டும் இல்லை! இங்கே நீங்க ஒரு தத்துவம். யூ ஆர் த ஒன்லி பெர்ஃபெக்ட் எம்பாடிமெண்ட் ஆஃப் சோஷல் செர்வீஸ்.. இங்கே பெருக்கெடுத்திருக்கும் சத்திய வெள்ளத்தின் ஊற்றுக் கண் நீங்கள்தான் என்பது உங்களுக்கு ஒரு வேளை தெரியாமலிருக்கலாம். ஆனால் எங்களுக்கு அது நன்றாகத் தெரியும். நீங்கள் இல்லாத மல்லிகைப்பந்தலை நாங்கள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இதோ இந்தக் கடைக்குப் பக்கத்தில் பல ஏக்கர் நிலத்தில் பிரம்மாண்டமான கட்டிடங்களில் இருக்கிறதே அது அல்ல எங்கள் பல்கலைக் கழகம். இந்தக் கையகலக் கடைதான் உண்மையில் எங்கள் பல்கலைக் கழகம். அந்தக் கட்டிடங்களும், புத்தகங்களும், ஆசிரியர்களும் படித்த கோழைகளிடம் உள்ளன. ஆனால் இந்தக் கையகலக் கடையோ படிக்காத மேதையிடம் இருக்கிறது. இங்கே இருக்கிற மன விசாலம் அங்கேயுள்ள பெரிய ஹால்களில் கூட இல்லை. படித்த கோழைகள் சிலர் ஆண்டுதோறும் மேலும் பல படித்த கோழைகளை உருவாக்கி அனுப்பும் அந்தக் கூடங்களை மதிப்பதை விட இந்தக் குடிசையை நாங்கள் அதிகம் மதிக்கிறோம். அந்தக் கூடங்களில் கற்பதை விட இங்கே நாங்கள் கற்பதும் உணர்வதும் அதிகமானவை என்பதை நீங்கள் அறிவீர்களா?'' என்று கண்ணுக்கினியாள் சற்றே கோபமான குரலில் அவரை மடக்கிக் கேட்டபோது,

''என்னை அதிகமாகப் புகழாதே தங்கச்சி! எனக்குப் புகழைப் புரிஞ்சுக்கக் கூடத் தெரியாது. நான் எதுவும் அறியாதவன். பாமரன்'' என்று தலை குனிந்தார் அண்ணாச்சி.

மணவாளன் நாத் தழுதழுக்கச் சொன்னார்:

''இங்கே உள்ள ஐந்தரைக் கோடி மக்களுமே உங்களைப் போன்ற அறியாதவர்களாகப் பாமரர்களாக இருந்தால் இந்த நாடு இவ்வளவு சீரழிந்திருக்காது அண்ணாச்சி!'' அப்போது உள்ளே வந்த மாணவர் ஒருவர், ''பூதலிங்கம் சார் கொடுத்து அனுப்பினாரு'' என்று ஒரு கடிதத்தைப் பாண்டியனிடம் கொடுத்தார். பாண்டியன் கடிதத்தைப் பிரித்துப் படித்துவிட்டு அதை அப்படியே மணவாளனிடம் கொடுத்தான். மணவாளன் படித்து முடித்ததும் அதை அண்ணாச்சியிடம் கொடுத்தார். அண்ணாச்சி படிக்கும்போதே அவர் அருகே அமர்ந்திருந்த கண்ணுக்கினியாளும் அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டாள்.

மாணவர் போராட்டம், கிளர்ச்சிகளில் சம்பந்தப்பட்டுத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டியும், எச்சரித்தும் தமக்குப் பல்கலைக் கழக நிர்வாகம் 'மெமோ' அனுப்பியிருப்பதாகவும், அதனால் தாம் ஓரளவு கவனமாக ஒதுங்கி இருக்க வேண்டியிருப்பதாகவும் அதற்காகத் தம்மைத் தவறாக எண்ணக் கூடாது என்றும் பொருளாதாரப் பேராசிரியர் அக்கடிதத்தில் வேண்டியிருந்தார். பட்டமளிப்பு விழாவை முன்பு தீர்மானித்திருந்த நாளுக்கும் முன்னதாகவே நடத்தி விடுவதற்கு அமைச்சரும், பல்கலைக் கழக நிர்வாகமும் ஏற்பாடு செய்து வருவதாகவும் மாணவர்கள் ஏதாவது கிளர்ச்சி செய்தால் ஒடுக்குவதற்கு மல்லிகைப்பந்தலில் பல ஊர்களிலிருந்து போலீஸ்காரர்களை வரவழைத்துக் குவிப்பதற்கு அரசாங்கமும், லாரி லாரியாகக் கட்சி அடியாட்களை வரவழைத்துக் குவிப்பதற்கு மல்லை இராவணசாமியும் முயன்று வருவதாகவும் பூதலிங்கம் அந்தக் கடிதத்தில் மேலும் விவரித்திருந்தார். பல்கலைக் கழக எல்லையிலும் நகரிலும் ஏராளமான இரகசியப் போலீஸார் அலைந்து திரிந்து கொண்டிருப்பதையும் கூறி எச்சரித்திருந்தது பேராசிரியரின் கடிதம்.

பட்டமளிப்பு விழாவுக்கு நாட்கள் மிகவும் குறைவாகவே இருப்பதை உணர்ந்த மணவாளன் விரைந்து செயல்பட வேண்டும் என்பதை எல்லாரிடமும் வற்புறுத்தினார். வெளியூர் மாண

சலுகை !

புகை பிடிக்காதவர்களைக் காட்டிலும் புகை பிடிப்பவர்கள் மாரடைப்பு, புற்று நோய் முதலிய நோய்களுக்கு உள்ளாவது சகஜம். அது மட்டுமல்ல, அமெரிக்காவில் லாஸ் ஏஞ்செல்ஸிலுள்ள இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியின் துணைத் தலைவர், ''புகை பிடிப்பதால் கவனம் திசை திரும்புகிறது. விபத்துக்களும் நேர்ந்து விடுகின்றன'' என்கிறார். எனவே இந்த இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி புகை பிடிக்கும் பழக்கத்தைக் கைவிடுவோருக்கும் பிரீமியத் தொகையில் 25 சதவிதச் சலுகை தர முன்வந்துள்ளது. -நியூ டைம்ஸ்



வர்களை ஒன்று திரட்டுவதற்கு அனுப்ப வேண்டிய மாணவர் பிரதிநிதிகளுக்கு தொழிலாளர் யூனியன் செயலாளர் மூலம் ஒரு ஜீப் ஏற்பாடு செய்து கொடுத்து அன்று மாலையிலேயே அனுப்பி வைத்தார். வேறு ஏற்பாடுகளும் இரகசியமாகவே நடைபெறலாயின.

அடுத்த நாள் பல்கலைக் கழகம் திறந்தது. வகுப்புக்கள் அமைதியாக நடந்தன. எல்லா மாணவர்களும் பாண்டியன், கண்ணுக்கினியாள் உட்படத் தங்கள் தங்கள் வகுப்புக்களுக்குப் போனார்கள். துணைவேந்தரே நிலைமையை நோட்டம் விட்டு அறிகிறவர் போல் எல்லாப் பிரிவுகளையும் சுற்றிப் பார்த்தார். அப்படி அவர் சுற்றிப் பார்க்கும்போது அவரோடு பல்கலைக் கழகச் சிண்டிகேட் உறுப்பினர் ஆனந்த வேலுவும் பதிவாளரும் இராவண சாமியும், தமிழ்த் துறைத் தலைவர் பொழில் வளவனாரும் உடன் வந்தனர். எல்லாப் பிரிவிலும் வகுப்புக்கள் பரீட்சை நெருங்குகிறதே என்ற கவலையுடனும், படிப்பில் உள்ள அக்கறையுடனும் மிகவும் 'ஸீரியஸ்ஸாக' நடப்பது போல் தோன்றின. அன்று பிற்பகலில் பாண்டியனையும் மோகன் தாஸையும் ஏனைய மாணவர் பிரதிநிதிகளையும் துணைவேந்தரே தமது அறைக்குக் கூப்பிட்டுப் பாராட்டி நன்றி தெரிவித்தார். பட்டமளிப்பு விழா ஏற்பாடுகளைப் பற்றிச் சொன்னார்:

''பட்டமளிப்பு விழாவுக்கு இன்னும் மூன்றே நாட்கள்தான் இருக்கின்றன. கவர்னரும் அமைச்சர் கரியமாணிக்கமும் வருகிறார்கள். கல்வி அமைச்சர் தவிர வேறு சில அமைச்சர்களும் சிறப்பு விருந்தினர்களாக வந்தாலும் வரலாம். முதலில் பட்டம் பெறுகிற மாணவர்களுக்கும், பி. ஜி. மாணவர்களுக்கும் மட்டுமே கான்வகேஷன் ஹாலில் உட்கார அனுமதி யளிப்பது என்று முடிவு செய்திருந்தேன். நீங்கள் எல்லோரும் அமைதியாக இருந்து, ஒத்துழைப்பீர்கள் என்று தோன்றுவதால் இப்போது இங்கே படிக்கிற எல்லாப் பிரிவு மாணவ மாணவிகளுக்குமே கான்வகேஷன் ஹாலுக்குள் வருவதற்குப் பாஸ் தரலாம் என்று ரிஜிஸ்திராரிடம் சொல்லி விட்டேன். காலை பத்து மணிக்குத் தொடங்குகிற பட்டமளிப்பு விழா அநேகமாக ஒரு மணிக்குள் முடிந்து விடும். பிற்பகலில் இந்தப் பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர் சங்கமும் யூனிவர்ஸிடி ஸ்டாஃப் கவுன்சிலும் சேர்ந்து ஏற்பாடு செய்துள்ள விருந்தில் அமைச்சரும் கவர்னரும் கலந்து கொள்ளப் போகிறார்கள். அமைச்சர் சிறப்புரை ஆற்றப் போகிறார். அதற்கும் நீங்கள் எல்லோரும் பெருந் திரளாக வரவேண்டும். நாளைக் காலைப் பத்திரிகைகளிலேயே பட்டமளிப்பு விழா அறிவிப்பும், விளம்பரமும் வந்து விடும்.''

''எங்கள் மேல் நீங்கள் காட்டுகிற அன்புக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை சார்!'' என்று பாண்டியனை ஓரக் கண்ணால் பார்த்தபடி சிரித்துக் கொண்டே துணைவேந்தருக்கு நன்றி சொன்னான் மோகன்தாஸ்.

''பை நேச்சர் நீங்கள் எல்லாம் ரொம்ப நல்லவர்கள் என்பது எனக்குத் தெரியும் பாண்டியன்! அந்தச் சைக்கிள் கடைக்காரனும் உள்ளூர் பாலிடீஷியன்களும்தான் அடிக்கடி உங்களைத் தூண்டி விட்டுக் கெடுத்துடறாங்க... இல்லியா?''

துணைவேந்தரின் இந்தக் கேள்விக்கு மாணவர்கள் ஒரு பதிலும் சொல்லவில்லை. மௌனமாகத் தங்களுக்குள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். தங்கள் தந்திரத்தை அவர் புரிந்து கொள்ளாமல் முழுமையாக நம்பிவிட்டதைப் பார்த்து அவர்மேல் உள்ளூறப் பரிதாபப் பட்டார்கள்.

''எங்களைப் பற்றிக் கவலைப் படாதீர்கள் சார்! நாங்கள் நியாயமாக நடந்து கொள்வோம். நியாயமும் நேர்மையும்தான் எங்களுக்குப் பெரிது. நீங்களே விரும்பா விட்டால் கூட நம்முடைய யூனிவர்ஸிடியின் நற்பெயரைக் காப்பாற்ற எதைச் செய்ய வேண்டுமோ அதை நாங்கள் செய்வோம்'' என்று கூறிவிட்டு மேலும் அவரோடு பேசிக் கொண்டிருக்க விருப்பமின்றி விடை பெற்றான் பாண்டியன். மற்ற மாணவர்களும் அவனோடு துணை வேந்தர் அறையிலிருந்து வெளியேறினார்கள்.

வெளியே வந்ததும் ஒரு மாணவன் பாண்டியனின் காதருகே, ''அதென்னப்பா வி. சி.யிடம் அப்படி உறுதி மொழி கொடுத்தே? 'நீங்களே விரும்பா விட்டாலும் நியாயத்தைக் காப்பாத்துவோம், யூனிவர்ஸிடியின் நற்பெயரைக் காப்பாற்றுவோம்'னு என்ன அர்த்தம்?'' என்று கேட்டான். அதற்குப் பாண்டியன்,

''அர்த்தம் எல்லாம் சரியாத்தான் இருக்கு பிரதர்! வி. சி. ஏமாந்தமாதிரி நீயும் ஏமாறாதே! என் வார்த்தைகளை நமது நோக்கில் சிந்தித்துப் பார்! அர்த்தம் புரியும். நான் எதிலும் 'காம்ப்ரமைஸ்' செய்து கொள்ளவில்லை என்பதும் புரியும்'' என்று சிரித்தபடி பதில் கூறிய பின்பே அந்த மாணவனின் சந்தேகம் தீர்ந்தது. (தொடரும்)

ஆயத்தமாக இருங்கள்!




ஃபாஷனுடன் கைகோத்து நிற்கிறது வலிமை!

இப்போது ஃபாஷனோடு கூடிய மிதியடிகளில் வலிமை இணைந்துள்ளது. உதாரணமாக ஸி.எஸ்.ஸி.யின் ஸ்னீக்கர். இது பார்வைக்கு ஒயிலானது, அணிவதற்கு மென்மையும் இதமும் மிகுந்தது, எனினும் வலிமையும் நீண்டகால உழைப்பாற்றலும் பெற்றது!

இன்றே அருகமைந்த ஸி.எஸ்.ஸி. விற்பனையாளரிடம் ஸி.எஸ்.ஸி.யின் புதிய தினுசுகளிலிருந்து உங்களுக்குப் பிடித்தவற்றைத் தேர்ந்தெடுங்கள்!

மிகுந்த சிக்கனம், தகுந்த இதம்—
அதுவே ஃபாஷனோடு இணைந்த சுகம்!



ஸ்னீக்கர்

C.S.C. FOOTWEAR

தயாரிப்பாளர்கள்:
கரோனா ஸாஹூ கோ. லிட்.
பதிவு அலுவலகம்:
221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு,
பம்பாய்-1

AIYARS-CSC.272 TM







- சக்தி சர்க்கரை ஆலையில் பல ரகச் சர்க்கரை மைகளில் நிரம்புகின்றது.
- லாரி லாரியாக வரும் கரும்பைக், 'கிரேன்'கள் அரைவைக்கு அனுப்புகின்றன.
- திரு நாச்சிமுத்து கவுண்டர்.

ஐம்பது வயதுக்குரிய விழா; நூறு வயதுக்குரிய சாதனை!

கி. ராஜேந்திரன்

ஒரு தேநீர் விருந்தின்போது மத்திய அமைச்சர்கள் சிலரை அருகில் வைத்துக் கொண்டே சொன்னார் திரு என். மகாலிங்கம்:

''எதை எதையோ தேசிய உடைமையாக்கு கிறீர்களே; நமது டி. எஸ். சந்தானத்தை யும், கே. ஈசுவரனையும் தேசிய உடைமை யாக்கக் கூடாதா?''

'மனிதர்களையாவது தேசிய உடைமை யாக்குவதாவது?' என்று தோன்றும், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது. ஆனால் திரு மகாலிங்கம் கூறியதில் ஆழ்ந்த பொருள் உண்டு. திரு சந்தானத்துக்குச் சாலைப் போக்குவரத்துத் துறையில் தெரியாத அம்சம் கிடையாது. திரு ஈசுவரனும் அவ வாறே கனரக மின் உபகரணங்கள் விஷயத் தில் அசுர சாதனைகளைப் புரிகிறவர். ஒரு தேசம் தனிமனிதர்களின் திறமையையும் அறிவாற்றலையும் அனுபவத்தையும் நாட்டு முன்னேற்றத்துக்கான அடிப்படைக் கொள்கைகளை வகுப்பதில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்திக் கொள்கிறதோ, அந்த அளவுக்கு வேகமாக முன்னேறும். இதற்குக் கட்சிப் பூசல்கள், அரசியல் சித்தாந்தங்கள், சொந்த விருப்பு வெறுப்புக்கள், அதிகார ஆணவம் முதலிய வற்றை ஒதுக்கி வைத்துவிட்டுத் தேர்தலில் வெற்றிபெற்ற தலைவர்கள் பரந்த மனப் பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் இது விஷயத்தில் நாம் துரதிர்ஷ்ட சாலிகள் ஆகிவிட்டோம். ஆக, பிற நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தில் நம்மை வெகுதூரம் பின்தங்க வைத்துவிட்டதில் வியப்பில்லை. ஸ்ரீ பால்கிவாலா சுட்டிக்காட்டி யது போல் வளர்ச்சி விகிதம் குறைவதிலும் முன்னேற்றப் பட்டியலில் கீழேயிருந்து எண் ணிப் பார்த்தால் இந்தியா ஆறாவது நாடாக விளங்குவதிலும் அதிசயமில்லை.

மேலே குறிப்பிட்ட தேநீர் விருந்தின் போதோ அல்லது பின்னும் பொள்ளாச்சியில் திரு மகாலிங்கத்தை நான் சந்தித்துப் பேசிக்

கொண்டிருந்த போதோ அவர் அடக்கம் காரணமாகத் தம் பெயரைச் சேர்த்துச் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால் நமக்குத் தெரியும், அவர் ஐம்பதாண்டுகள் நிறைவு எய்துவதற்குள் நூறு ஆண்டுகளுக்கான சாதனைகளைப் புரிந்திருக்கிறார் என்று. இந்தத் துரித முன்னேற்றத்தின் ரகசியம் என்ன? திறமையாளர்களாகத் தேடிப் பிடித்து அவர்களிடம் ஒவ்வொரு ஸ்தாபனத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைப்பது; அவர்களைச் சுதந்திரமாக இயங்க விடுவது; ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் மட்டும் நேரில் போய்ப் பார்த்து விடுவிப்பது; அவரவர்களுக்குத் தரப்படும் சுதந்திரம் துஷ்பிரயோகம் ஆகாமல் இருக்கிறதா, எங்கேயாவது திறமையின்மை வெளிப்படுகிறதா என்று எட்ட இருந்தபடியே சதா கண்காணித்து வந்து தேவையான சமயத்தில் தட்டிக் கேட்டுத் தக்க நடவடிக்கை எடுப்பது.


ஒரு மாத குடும்ப பட்ஜெட்டைச் சரிக்கட்ட முடியாமல் பாயைப் பிராண்டுகிற கட்டத்துக்கு நாம் வந்துவிடுகிற இக்காலத்தில் மகாலிங்கம் ஒரு தொழில் வர்த்தக சாம்ராஜ்யத்துக்கே தலைவராக இருந்தும் சற்றும் பரபரப்பு அடையாமல் அமைதி காத்து வருவதற்கு இந்த நடைமுறையே காரணம். 'மாடர்ன் மானேஜ்மெண்ட் டெக்னிக்' போதிப்பதும் இதுவே. ஆனால் இந்த நவீன நிர்வாக நுணுக்கத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாகவே அல்லவா, வள்ளுவர் பெருமான் புரிந்துகொண்டு சொல்லியிருக்கிறார் !

இதனை இதனால் இவன் முடிக்கு மென்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்


திரு மகாலிங்கத்தின் தொழில் வர்த்தக சாம்ராஜ்யத்தை முழுமையாகப் பார்க்க வேண்டுமானால் ரயில் பயணம் தவிர மணிக்கு நூறு கிலோமீட்டர் வேகத்தில் 'பறக்க'க் கூடிய கார் பயணமும் மேற்கொண்டு ஒரு வார காலம் சுற்றி வர வேண்டும். முழுமையாகப் புரிந்து கொள்ள மூன்று மடங்கு அவகாசம் வேண்டும். ஆக மூன்று நாள் பயணத்தில் நான் ஓரளவு பார்த்துச் சிறிதளவு தெரிந்து கொண்டேன். அதுவே என்னைப் பிரமிக்க வைத்துவிட்டது !

இத்தனைக்கும் திரு மகாலிங்கம் மிக எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்தாம். தந்தை

- பொள்ளாச்சி, நாச்சிமுத்து பாலி டெக்னிக் எதிரே அஷ்ட லக்ஷ்மி ஸ்தூபம்.
- ஆனைமலை ரீடிரெட்டிங் கம்பெனியில் டயர் புதுப்பிக்கப்படுகிறது.
- சக்தி சர்க்கரை ஆலையில் உட்புறத் தோற்றம்.







நாச்சிமுத்து கவுண்டர் பொள்ளாச்சியிலிருந்து ஆனைமலைக்கு மாட்டு வண்டியில் சாமான்கள் ஏற்றிச் சென்று வியாபாரம் செய்து வாழ்க்கையைத் தொடங்கினார். சிறிது காலம் சென்றபின் சொந்தமாக டாக்சி ஓட்டினார். அப்புறம் பஸ் விடத் தொடங்கினார். இதில் பலத்த போட்டா போட்டி காரணமாக அனைவருக்குமே நஷ்டம் ஏற்பட்டு வந்தது. தீர்க்க தரிசனத்துடன் செயல்பட்டார் திரு நாச்சிமுத்து. பஸ் சொந்தக்காரர்களைப் போய்ப் பார்த்து, 'எல்லாரும் ஒருங்கிணைந்து ஒரு லிமிடெட் கம்பெனி உருவாக்குவோம்; புதிய ரூட்களில் நமது பஸ்களைவிட்டு நஷ்டத்தைத் தவிர்ப்போம்' என்றார். யோசனை ஏற்கப்பட்டு ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட் நிறுவனம் உருவாயிற்று.

நாச்சிமுத்து கவுண்டரின் ஒரே மகன் மகாலிங்கம் லயோலா கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றபின் கிண்டி பொறி இயல் கல்லூரியில் டிப்ளோமாவும்* பெற்று ஊருக்கு வந்து சேர்ந்தார். சாதனைகளின் சகாப்தம் ஆரம்பமாயிற்று.

ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட் (இப்போது சேரன் போக்குவரத்து) விரிவடைந்தது தவிர, ஏ.பி.டி. பார்சல் சர்வீஸ், ஏ.ஆர்.சி. டயர்கள் புதுப்பிக்கும் நிலையம், சக்தி நூற்பு ஆலை, சக்தி சர்க்கரை ஆலை, ஸிந்தடிக் ஜெம் தொழிலகம், சக்தி பைப்ஸ் என்பன போன்ற தொழிலகங்களும் மோட்டார் கார்கள், பஸ்கள், லாரிகள் ஆகியவற்றுக்கான பராமரிப்புக் கூடங்களும் பழுது பார்க்கும் நிலையங்களும் தோன்றின. வர்த்தகத் துறையிலும், இதேபோதில் பிரமிக்கத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. பலப்பல நிறுவனங்களின் தயாரிப்புக்களான டிராக்டர்கள், மோட்டார் சைக்கிள்கள், ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், ரேடியோக்கள், ரிகார்ட் ப்ளேயர்கள், மூன்று சக்கர வண்டிகள், லாரிகள், பஸ்கள், வாயு அடுப்புக்கள் போன்ற பலவற்றுக்கு விநியோக உரிமை பெற்று வியாபாரம் செழிக்கச் செய்தார். இந்த நிறுவனங்கள், பொள்ளாச்சி, கோவை, பெங்களூர், திருச்சி, சென்னை, ஈரோடு முதலிய பல ஊர்களிலும் பரந்து விரிந்து கிடக்கின்றன.

மகாலிங்கத்தின் வளர்ச்சியை ஏதோ ஒரு தனிமனிதரின் வளர்ச்சி எனக் கருதுவது நவீன பொருளாதார உத்திகளை அறியாதவர்களின் கூற்று. ஈட்டுகிற செல்வம் மீண்டும் மீண்டும் புதுப் புதுத் தொழில் துறைகளில் ஈடுபடுத்தப்படுகிறபோது பொருளாதார முன்னேற்றம் காரணமாய் அது நாட்டின் வளர்ச்சியாகவும் வேலைவாய்ப்புக்கள் பெருகுவது காரணமாய் அது மக்களின் வளர்ச்சியாகவும் மாறுகிறது. ஆனால் திரு மகாலிங்கமோ இதற்கும் ஒரு படி மேலே போய் ஈட்டுகிற செல்வத்தால் சமூகப் பணிகள் பலவும் ஆற்றுகிறார். வள்ளுவர் வாசகப்படி ஊருணி நீராகச் சமூகத்துக்குப் பயன்படுகிறது இந்தப் பேரறிவாளன் திரு.

அமரர் கு. அழகிரிசாமி குடும்ப நிவாரண நிதியா? மகாலிங்கம் உதவத் தயார்; அரசியல் தலைவர் ஒருவரின் பொன்விழா ஆண்டு சேவையைப் பாராட்ட வேண்டுமா? மகாலிங்கம் முன் நின்று நடத்துவார்; வள்ளலார் பாடல்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகப் பெரு நூலாக* வெளியிட வேண்டுமா? மகாலிங்கம் செலவை ஏற்பார் என்று இப்படி பக்கம் பக்கமாக நீண்ட பட்டியல் போடலாம், நல்ல காரியங்களுக்கு இவர் உதவியிருப்பது பற்றி. ஆனால் இவையெல்லாம் பொருளாதார ரீதியில் பார்க்கும்போது மகாலிங்கத்துக்குச் சின்ன விஷயங்கள். பெரிய காரியங்களைக் கவனிப்போம்: பொள்ளாச்சியில் காந்தி மண்டபம் எழும்பக் காரண புருஷராக இருந்திருக்கிறார். அற்புதமான இந்தக் கட்டடம் கல்யாணக்கூடமாகவும் கலை விருந்தளிக்கும் இடமாகவும் வள்ளலார் வழிபாட்டுக்கு ஒரு ஸ்தலமாகவும் திகழ்கிறது. பொள்ளாச்சி, அம்மன் கோயில் திருப்பணிக்கு இவர் தகப்பனார் உதவினார் என்றால் இவர், வெள்ளி ரதம் உருவாக ஒரு லட்சம் நன்கொடை தந்தார். தகப்பனார் நாச்சிமுத்து கவுண்டர் பெயரால் ஒரு பாலிடெக்னிக்கும், வள்ளல் நல்லமுத்து கவுண்டர் பெயரால் ஒரு கல்லூரியும் உருவாகக் காரணமாயிருந்திருக்கிறார். தவணை முறையில் பணம் செலுத்தி வீட்டின் உரிமை பெறும் மகாலிங்கபுரம் என்ற குடியிருப்புப் பகுதி தோன்றச் செய்தார். இன்னும் ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், பயணியர் விடுதி, இத்தியாதி, இத்யாதி. எல்லாம் சேர்ந்து, முப்பதாயிரம் ஜனத் தொகை கொண்ட சிற்றூராக இருந்த பொள்ளாச்சியை ஒரு லட்சத்துக்கு மேல் ஜனத்தொகை கொண்ட ஒரு முக்கிய வியாபாரக் கேந்திரமாக்கிவிட்டது.

சரி, பொள்ளாச்சியைவிட்டு வெளியே போய் ஆப்பக் கூடலில் சர்க்கரை ஆலை ஆரம்பித்தாரே அங்கேயாவது சும்மா இருந்தாரா? ஈரோட்டில் வேளாளர் மகளிர் கல்லூரி, அங்கேயே தமது தாயார் பெயரால் மகளிர் விடுதி ஆகியன தோன்ற மூலபுருஷராய் இருந்தார். பவானி திரிவேணி சங்கமத்தில் எழுந்தருளியுள்ள சங்கமேசுவரர் கோயில் திருப்பணிக்கு லட்சம் ரூபாய் நன்கொடை தரப்பட்டிருக்கிறது. வேலை நடந்து கொண்டிருக்கிறது. முடியுமுன்னர் இன்னும் எவ்வளவு தருவாரோ, சங்கமேசுவரருக்குத்தான் தெரியும்! ஆப்பக்கூடல் அருகேயே ஓர் ஆஸ்பத்திரி ஆரம்பிக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒரு தொழிலகம் ஆரம்பித்துத் திறம்பட இயங்கினால் அதில் பணியாற்றுவோர் மட்டுமின்றிச் சுற்றுவட்டாரத்தில் உள்ள பல மக்களும் நன்மைகள் அடைய

* பின்னால் பொறி இயல் துறையில் இவரது அபார சாதனைகளின் விளைவாக MIE (Member of the Institution of Engineers) என்ற கௌரவம் தன்னால் வந்து சேர்ந்தது.

* திருஅருட்பா - வரலாற்று முறை முழுப் பதிப்பு. பதிப்பாசிரியர் ஊரன் அடிகள். மகாலிங்கத்தின் அருள் சிந்தையால் வெளியான பல அரிய நூல்களுள் ஒன்று. வள்ளலாரின் கையெழுத்தையே அட்டைப் படமாகக் கொண்டு 1212 பக்கங்களில் அருட்பாக்களை ஏந்தி உருவாகியிருக்கிறது. கிடைக்குமிடம்: சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர் அஞ்சல், தென் ஆர்க்காடு மாவட்டம், விலை ரூ. 25.

முடியும் என்று நிதரிசனமாகக் காட்டிவருகிறார் மகாலிங்கம்.

இவ்வாறு அற நிலையங்களை ஏற்படுத்துவதில் மகாலிங்கத்திடம் குறிப்பிடத்தக்க ஒரு விசேஷம் உண்டு. அந்த அற நிலையம் பல்லாண்டுகளுக்குப் பணத் தட்டுப்பாடின்றி நன்கு நடப்பதற்கான தேவைகளையும் கூடவே கவனிப்பார். உதாரணமாக வருவாய் அதிகமில்லாத ஒரு கோயிலுக்கு யானைக் குட்டி ஒன்று வாங்கிச் சமர்ப்பித்தால் அந்த யானை பெரிதாக வளர்ந்த பிறகும் அதற்குத் தேவைப்படக்கூடிய ஆகாராதிகளைக் கணக்கிட்டு அவை குறைவற அதற்குக் கிடைப்பதற்கான ஒரு நிரந்தர வருவாய்க்கு ஏற்பாடு செய்து விடுவார்!

அறப் பணிகளில் இவருக்கு உள்ள ஆர்வம் பற்றி அறிந்திராத ஒரு டாக்டர் சக்தி சர்க்கரை ஆலைக்கு உத்தியோக நியமனம் பெற்று வந்து சேர்ந்தார். இவர் சொன்ன 'கதை' ரொம்ப வேடிக்கையாகவும் மகாலிங்கத்தின் குண இயல்பை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாகவும் இருந்தது.

அறிமுகமானதுமே இவரைப் பார்த்து மகாலிங்கம் சொன்னாராம்: "சுற்றுவட்டாரத்தில் தொழு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள் என அறிகிறேன். உரியவர்களுக்கு எழுதி ஆவன செய்யுங்கள்."

அவர் கட்டளையை உடனே நிறைவேற்றி வைத்தார் டாக்டர். அரசாங்கத்தின் சுகாதார இலாக்காவுக்கு விரிவாகக் கடிதம் எழுதினார், இது பற்றிக் கவனிக்குமாறு. சில வாரங்களுக்குப் பிறகு மகாலிங்கம் இவரை மீண்டும் சந்தித்தபோது வினவினார்: "நான் சொன்னேனே? என்ன ஆச்சு?"

"ஓ! உரியவர்களுக்கு உடனே எழுதிவிட்டேனே!" என்றார் டாக்டர். "ஆனால் அவர்கள் ஒன்றும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை."

இந்தப் பதிலைக் கேட்ட பின்னர் மகாலிங்கம் அந்த டாக்டருடன் பேசவதே கிடையாது! நாட்கள், வாரங்கள், மாதங்கள் சென்றன. மகாலிங்கம் பல சந்தர்ப்பங்களில் தம்மைப் பார்த்தும் பாராததுபோல் நடந்து கொள்வதைக் கண்டதும் டாக்டருக்குச் சுருக்கென்று தைத்தது. 'உரியவர்களுக்கு எழுதி ஆவன செய்யுங்கள்' என்றல்லவா சொன்னார்? 'உரியவர்களுக்கு எழுதியும் அவர்கள் கவனிக்கவில்லையானால் நீங்களே ஆவன செய்யுங்கள்' என்றல்லவா அதற்கு அர்த்தம்? எனப் புரிந்து கொண்டார். ஆப்பக்கூடலைச் சுற்றியுள்ள பல கிராமங்களுக்குத் தாமே நேரில் போய்த் தொழு நோய் கண்டவர்களுக்கு வைத்தியம் புரியும் பெருபகாரச் செயலை மேற்கொண்டார். மகாலிங்கத்துக்கு ஒரே மகிழ்ச்சி. டாக்டரைத் தலை மேல் தூக்கி வைத்துக் கொள்ளாத குறையாகக் கொண்டாடினார்!

இவற்றையெல்லாம் பார்க்கும் போது இம்மாதம் 21ந் தேதி ஐம்பதாண்டுகள் நிரம்பப் பெறும் திரு மகாலிங்கம்,* ஆக்க பூர்வமான பணிகளை ஊக்கத்துடன் மேற்கொள்வதில் இருபத்தைந்து வயது இளைஞராகவும் அதே சமயம் எண்பதாண்டுகளுக்குரிய மன முதிர்ச்சியைப் பெற்றவராகவும் விளங்குகிறார் என்று சொல்லலாம். இன்னின்னதற்கு இன்னின்னவர் பொறுப்பு என்று ஒப்படைத்துவிட்டு ஒதுங்கிக் கொள்ளவே பற்றற்ற மனம் வேண்டும். தவிர இவர் சம்பந்தப்பட்ட எல்லா கம்பெனிகளிலும் இவருக்கு செக் பவர் (காசோலையில் கையெழுத்திடும் உரிமை) உண்டு. ஆனால் அந்த இவர் பயன்படுத்துவதேயில்லை! இவ்வாறான ஒரு தாமரை இலை நீர் போன்ற மனப் போக்கை இவர் பெற்று நிம்மதியாக வாழ உறுதுணையாக இருப்பது அருட்பா. புத்தர் ஆட்டுக் குட்டியைத் தோள் மேல் போட்டுக் கொண்டு யாக சாலைக்குச் சென்று பலியிடுதலை நிறுத்திய கதையைச் சிறுவனாக இருந்தபோது படித்ததிலிருந்தே இவருக்கு இறையுணர்ச்சி மிகுந்து அகிம்சையில் பற்றும் ஏற்பட்டது. அதன்பின் சன்மார்க்க சங்கத்தில் ஈடுபாடும் அருட்பாக்களில் கவர்ச்சியும் உண்டாயின. உணவு விஷயத்திலும் மகாலிங்கம் சுத்த சைவராக மாறினார். இது இவரது குடும்பத்தில் பரம்பரைப் பழக்கம் அல்ல. திரு ஓ. பி. ராமசாமி ரெட்டியார் வடலூரில் நிறுவிய சுத்த சன்மார்க்க நிலையத்தையும் அதையொட்டிய இதர நிறுவனங்களையும் அவருக்குப் பின்னால் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்; மகாலிங்கம். ராமலிங்க அடிகளார் கட்டுவித்த சத்திய தருமச் சாலையின் திருப்பணியையும் மேற் கொண்டுள்ளார். வள்ளலார் கொள்கைகளைப் பரப்ப வென்றே இரண்டாண்டுகளுக்கு முன்னர் இலங்கைப் பயணம் மேற்கொண்டார்.

அருட்பா மட்டுமல்ல, நோபல் பரிசு பெற்ற ருஷ்ய ஆசிரியர் ஸோல்ழெனிட்ஸினின் எழுதிய நா.ல் முதல் ஆகம முறைகளை விளக்

---

* விழா ஜூன் - ஜூலையில் நடக்கிறது என்றாலும் பிறந்த தினத்தை யொட்டியே கல்கி மேலட்டையில் திரு மகாலிங்கத்தின் புகைப்படத்தைப் பெருமையுடன் பிரசுரிக்கிறோம்.

மோஷே! பேஷே!

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் மோஷே தயானின் இயற் பெயர் ஷுமுயல் டாயன். சிறுவனாக இருந்தபோது உடல் நலம் சரியில்லாத இவருக்கு மருந்து வாங்கப் போன மோஷே பார்லி என்ற இளைஞன் அரேபியர்களால் கட்டுக் கொல்லப்பட்டான். அந்த இளைஞன் நினைவாகத் தம் பெயரை மோஷே தயான் என்று மாற்றிக் கொண்டார்.

இல்லஸ்டிரேடட் வீக்லி - பாலி



கும் சம்ஸ்கிருத சுலோகங்கள் வரை பல தரப்பட்ட உயர்தரமான நூல்களைப் படிக்கிறார் மகாலிங்கம். தொழிலகங்களை மேற்பார்வையிடக் காரில் ஊருக்கு ஊர் செல்வதைப் படிப்பதற்கு நேரம் கிடைக்கிறது என்பதற்காகவே வரவேற்கிறார். படிப்பதில் பகாசுரப் பசி சிறு வயது முதலே ஏற்பட்டுவிட்டது. ''பள்ளி செல்லும்போது என் தாத்தா எனக்குத் தினம் இரண்டணா சாப்பாட்டுச் செலவுக்குத் தருவார். அதில் ஓரணாவுக்கு வாங்கிச் சாப்பிட்டு விட்டு ஓரணாவைப் புத்தகம் வாங்க என்று சேமித்து வைப்பேன்'' என்று பேச்சினிடையே குறிப்பிட்டார் மகாலிங்கம். பண்டிதர் என்ற அளவில் இல்லாவிட்டாலும் பள்ளியில் படிக்கும்போதே நன்கு சம்ஸ்கிருதம் கற்ற இவருக்கு இயல்பாகவே நமது தொன்மையான பண்பாடுகளில் ஈடுபாடு உண்டாகி விட்டது. சிற்பக் கலையில் இவருக்குள்ள ஆர்வத்தைக் கோயில் திருப்பணிகளுக்கு இவர் தரும் நன்கொடைகள் மட்டுமின்றி நாச்சிமுத்து பாலிடெக்னிக் வாசலில் நிற்கும் அற்புதமான அஷ்டலக்ஷ்மி ஸ்தூபமும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறது.

தேசிய, சமூக நோக்கு வளர உதவியவர் இவருடைய தாத்தா. காங்கிரஸ் இயக்கங்கள் பலவற்றில் ஈடுபட்டவர்; கள்ளுக்கடை மறியல் நடத்தியவர். மகாலிங்கத்தின் மனம் இவரால் பண்படுத்தப்பட்ட போது 1930ம் ஆண்டுகளிலேயே — சிறுவனாக இருந்த போதே — அயல்நாட்டுத் துணியைப் பகிஷ்கரித்துக் கதரை ஏற்க முடிவு செய்தார். ''குழந்தைக்கு என்னடா அரசியல்?'' என்று கேட்ட பலர் வற்புறுத்திப் பட்டுச் சொக்காய் அணிவித்த போதிலும் கல்லூரியில் படிக்கும் போது மீண்டும் கதரை ஏற்று இன்றுவரை அதனிடமும் காந்தியத்திடமும் விசுவாசம் மாறாது இருந்து வருகிறார்.

பொள்ளாச்சிக்கு நான் போயிருந்த சமயம் இவரது தகப்பனாருக்குத் திதி. குரு பூஜை மிகச் சிறப்பாக நடத்தி, லிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சமாதியில் பக்தி சிரத்தையுடன் வணங்கிவிட்டு, அழைப்பை ஏற்றுப் பூஜைக்கு வந்திருந்த ஏராளமான ஊர்ப் பிரமுகர்களுடன் விருந்துண்டார். தவிர நூற்றுக்கணக்கான ஏழைகளும் சாரி சாரியாக வந்து பந்தி பந்தியாக விருந்துண்டு சென்றனர்.

மகாலிங்கத்தின் வீட்டில், சென்னையிலானாலும் சரி, பொள்ளாச்சியிலானாலும் சரி, காவி உடை தரித்த சாமியார்கள் யாராவது ஓரிருவர் சதா தரிசனம் கொடுத்துக் கொண்டே யிருப்பார்கள். இவர்களில் மகான்களை வணங்கி, அறிஞர்களைப் போற்றி, சாதுக்களுக்குச் சகாயம் புரிவார் மகாலிங்கம்.

சிந்தனை, செயல், வெற்றி எல்லாமே பெரிய அளவில் அமையும் திரு மகாலிங்கத்தினிடம் மத்திய அரசு பல பொறுப்பான பதவிகளை ஒப்படைத்ததில் வியப்பில்லை. சென்னை ரசாயன உரத் தொழிலகத்தின் தலைவராகவும், கொச்சி கப்பல் கட்டும் நிறுவனம், வீடு-நகர்ப்புற அபிவிருத்தி கார்ப்பொரேஷன், தேசிய தொழில் வளர்ச்சி கார்ப்பொரேஷன் ஆகியவற்றின் டைரக்டர்களுள் ஒருவராகவும் ராஷ்டிரபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறார். தமிழக அரசு மாநில திட்டக் கமிஷனில் ஓர் அங்கத்தினராகப் பணியாற்றக் கோரியிருக்கிறது. மேலும் இவர் சென்னை சர்வகலாசாலை செனட்டின் நிரந்தர அங்கத்தினர். சிண்டிகேட்டில் இரு தவணைகளாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

திரு மகாலிங்கத்தினிடம், '' நமது நாட்டின் பொருளாதார நிலைமை படுமோசமாக இருக்கிறதே (ரூபாயின் மதிப்பு முப்பத்தொன்பது பைசாதான் என்று சமீபத்தில் மத்திய நிதி அமைச்சரே திருவாய் மலர்ந்தருளிவிட்டார் அல்லவா?) ஏன் இந்த நிலைக்கு வந்து விட்டோம்?'' என்று கேட்டேன்.

'' நமது மந்திரி சபையில் இருப்பவர்கள் அந்தந்தத் துறையில் நிபுணர்கள் அல்ல. எல்லோரும் அரசியல்வாதிகளே. நிபுணர்களின் பேச்சையும் இவர்கள் கேட்பதில்லை. அரசியல் சித்தாந்தங்களே இவர்களை ஆட்டிப் படைக்கின்றன. குறைந்தபட்சம் நிதிமந்திரி ஒருவராவது மத்திய அமைச்சர் அவையில் அரசியலுக்கு அப்பாற்பட்டுப் பொருளாதார நிபுணராக இருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஜான் மத்தாய், ஸி.டி. தேஷ்முக், ஆர்.கே. ஷண்முகம் செட்டி ஆகியோரைத் தவிர மற்ற நிதி மந்திரிகள் அரசியல்வாதிகளாகவே இருந்திருக்கிறார்கள்.'' பளிச்சென்று தயங்காமல் பதில் கூறினார் மகாலிங்கம்.

''மின்சாரப் பற்றாக்குறை தமிழ்நாட்டில் மிக அதிகமாகவும் பிற மாநிலங்களில் கணிசமாகவும் ஏற்பட்டிருக்கிறதே ?''

'' அசோக்மேத்தா ஒருவர்தான் நமக்கு மூன்று துறைகளில் பற்றாக்குறை ஏற்படும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். அமெரிக்கா சென்ற போது விசேஷ உலோகக் கலவைகள் கொண்ட எஃகு (Alloy Steel), ரசாயன உரம், மின்சாரம் ஆகியவற்றில் பற்றாக்குறை ஏற்படும் என்றும் அதற்கு உதவ வேண்டும் என்றும் கோரினார். அமெரிக்க அரசும் வாக்களித்தது. இப்படித் தீர்க்க தரிசனத்துடன் செயல்பட்டவர் நீண்ட நாட்கள் மந்திரி சபையில் நீடிக்கவில்லை ! போதாக் குறைக்கு அமெரிக்காவோடு மனஸ்தாபங்கள், கருத்து வேற்றுமைகள் எல்லாம் ஏற்பட்டு விட்டன.''

''நாடு முன்னேற வழி என்ன?''

''மேற்கொள்ள வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. முக்கியமாக அயல்நாட்டினர் இங்கு வந்து முதலீடு செய்வது குறித்துப் பயப்படக் கூடாது. இப்போது தேவையில்லாத பல இனங்களில்— டூத்பேஸ்ட் தயாரிப்பு, விளம்பரத் துறை, ஹோட்டல்கள் நடத்துவது போன்றவற்றில் அயல்நாட்டு முதலீடுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். நாமே திறம்படச் செய்யக்கூடிய இவை போன்றவற்றுக்கு அனுமதி மறுத்து விட்டு உண்மையில் நாட்டின் தொழில் வளத்தை அதிகரித்து வேலை வாய்ப்பைப் பெருக்கக்கூடிய அயல்நாட்டு முதலீடுகளை வரவேற்க வேண்டும்.''

''வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவென்றே மத்திய அரசு சமீபத்தில் கோடிக் கணக்கில் பணம் ஒதுக்கியிருக்கிறதே ?''

''அதனால் ஒரு லாபமும் விளையாது. வெள்ளைச் சட்டை போட்டு உடல் அலுங்காமல் வேலை பார்ப்பவர்களின் எண்ணிக்கையைத்தான் அது அதிகரிக்கும். இவர்கள் தொழில்வளப் பெருக்கத்துக்கோ பொருளாதார முன்னேற்றத்துக்கோ உதவமாட்டார்கள். உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வேலை வாய்ப்புக்களைத் தக்க தொழிலகங்களை ஆரம்பிப்பதன் மூலம் ஏற்படுத்த வேண்டும்.''

மகாலிங்கம் இவ்வாறு கூறியதன் முழுப் பொருளையும் நான் அவரது ஸிந்தடிக் ஜெம் தொழிலகத்தையும், சக்தி சர்க்கரை ஆலையையும் பார்வையிட்டபோது நன்றாகப் புரிந்து கொண்டேன். ஸிந்தடிக் ஜெம் ஃபாக்டரிக்கு நான் சென்றிருந்தபோது அங்கே மிக அதிகமான தொழிலாளர்களை நான் கண்டுவிட்டதாகச் சொல்ல முடியாது. ஆனால் ஸ்விட்ஸர்லாந்து நாட்டினரின் ஒத்துழைப்புடன் உருவான இந்தத் தொழிலகத்தில் தயாராகும் செயற்கைக் கற்களைப் பட்டை தீட்டி ஒளிரச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள சுமார் நாற்பதாயிரம் குடும்பங்களுக்கு இது வாழ்வளிக்கிறது. இந்தச் செயற்கை வைரங்கள், ரத்தினங்கள், கோமேதகங்கள் ஆகியவை விலை குறைவான நகைகள் செய்ய மட்டுமின்றித் தொழில் ரீதியிலும் (கடிகார ஜுவல் போன்றவை) பயன்படுகின்றன. ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களும் உள்ளன.

சக்தி சர்க்கரை ஆலையால் பதினையாயிரத்துக்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்களின் வாழ்வு வளம் பெறுகிறது. பயனற்றிருந்த ஏராளமான புதிய நிலங்கள் கரும்பு சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இவர்களிடமிருந்து சர்க்கரை ஆலைக்குக் கரும்பு வாங்கிக் கொள்வதுடன் மகாலிங்கம் நின்றுவிடவில்லை. சர்க்கரை ஆலையில் இந்த விவசாயிகள் பங்குதாரர்கள். சென்ற ஆண்டு நல்ல லாபம் கிடைத்தபோது இவர்களுக்கு டிவிடெண்டு தவிர ''போனஸ் ஷேர்''களும் தரப்பட்டன. சக்தி சர்க்கரை ஆலையின் வருடாந்தரப் பங்குதாரர்கள் பொதுக் கூட்டம் ஒரு கோலாகல விழாவாக — விவசாயிகளுக்கு மகாலிங்கத்தைப் பாராட்டக் கிடைத்த ஒரு வாய்ப்பாக — மாறிவிடுகிறது! அடுத்துப் பெங்களூரில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க ஏராளமான மூலதனம் உதவிப் பங்குதாரர்களாக முன்வரும் அளவுக்கு இந்தச் சுற்றுவட்டாரத்து விவசாயிகளின் பொருளாதார நிலை சிறந்திருக்கிறது.

வேறு பல சர்க்கரை ஆலைகளைப் போல்தான் சக்தி சர்க்கரை ஆலையும் சர்க்கரை தவிர, அதன் உப உற்பத்திப் பொருளாகப் பல தொழிலகங்களுக்குத் தேவைப்படும் ஆல்கஹாலும் தயாரிக்கிறது. ஆனால் ஒரு வித்தியாசம்: 'அளவில் இதைவிடப் பெரிய ஆலைகள் இந்தியாவில் உண்டு. ஆனால் உற்பத்தியின் அளவிலும் தரத்திலும் இதைவிடச் சிறந்த ஆலை கிடையாது' என்ற நற்பெயர் வாங்கியிருக்கிறது. ஏன், 'ஆசியாவிலேயே மிகச் சிறந்தது' என்றுகூட விஷயமறிந்த சிலர் அடித்துச் சொல்கிறார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலே போய், புதிதாக இதுவரை வேறு யாரும் செய்தறியாதனவற்றைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் கொண்டு அதற்குத் தமக்குக் கீழுள்ள விவசாய விஞ்ஞானிகள், பொறி இயலாளர்கள் ஆகியோருக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகிறார் மகாலிங்கம்.

சர்க்கரை ஆலையில் கழிவுப் பொருளாக உஷ்ணமான அமில நீர் வெளிப்படும். வேறு பல சர்க்கரை ஆலைகள் இதை அப்படியே பொட்டல் வெளியில் பாயவிட்டுவிடுகின்றன. நாளடைவில் இதன் நாற்றம் சுற்றுவட்டாரத்தில் நீண்ட தூரத்துக்குக் குடலைப் புரட்டுவதாக ஆகிவிடும். ஆனால் சக்தி சர்க்கரை ஆலையில் இப்படி நடப்பதில்லை. அந்த அமில நீர் பல தொட்டிகளில் அடுத்தடுத்துப் பாய்ந்து குளிர்கிறது. பின்னர் ஆற்று நீரை இதில் பாய்ச்சி அமிலத் தன்மையைக் குறைக்கிறார்கள். பிறகு இது குழாய்கள் மூலமாக இரண்டு மைல் தூரம் கொண்டு செல்லப்படுகிறது. அங்கே கரும்பு சாகுபடியாகும் வயல் வெளிகளில் பாய்கிறது. இந்நீர் பாய்ந்து வளரும் கரும்பு, மற்ற வயல்களில் உள்ளவற்றைக் காட்டிலும் செழித்து வளரக் காரணம் உண்டு. கலப்பு ரசாயன உரத்தில் உள்ள அத்தனை சத்துக்களும் — நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷியம் (N P K) ஆகியன- இந்நீரில் இருப்பதால் இதைக் கொண்டு சாகுபடியாகும் நிலத்துக்கு உரமிட வேண்டிய இல்லை. விவசாயிகளுக்கு உரச் செலவு மிச்சம்! மேலும் இந்த நீருக்காக விவசாயிகளிடம் சக்தி சர்க்கரை ஆலை பணம் வாங்குவதில்லை.

விவசாயிகளுடன், சர்க்கரை ஆலையைச் சேர்ந்த விவசாயத் துறைப் பட்டதாரிகள் அவ்வப்போது நேரடித் தொடர்பு கொண்டு யோசனைகள் கூறி வருவது தவிர, ஓர் அவசரம் என்றால் உடனுக்குடன் தொடர்பு கொள்ள வசதியாக ஆங்காங்கே ரேடியோ டெலிஃபோன்கள் இருக்கின்றன. இதனால் பல நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் கரும்புச் சாகுபடி திட்டமிட்டபடி எவ்விதத் தடங்கலும் இன்றி நடக்கிறது. இந்த ரேடியோ டெலிஃபோன்கள் இதற்கு மட்டுமின்றி அண்மையில் பெருவெள்ளம் ஏற்பட்டபோது செய்தித் தொடர்புக்கு அரசாங்க அதிகாரிகளுக்கும் பேருதவியாக விளங்கி, வெள்ள நிவாரணப் பணிக்குக் கைகொடுத்தது.

சர்க்கரை ஆலை என்றதும் சர்க்கரைத் தட்டுப்பாடும் விலை உயர்வும் நம் நினைவுக்கு வராமல் போகாது. மகாலிங்கத்தை இது பற்றிக் கேட்டேன்.

''தட்டுப்பாடும் விலை உயர்வும் செயற்கையானவை. கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டாலே விலை குறையும். உத்தரப் பிரதேசத்திலும், பீகாரிலும் உள்ள சில சர்க்கரை ஆலைகள் நம்மோடு போட்டி போட முடியாமல் திணறுகின்றன. நவீன சிந்தனைகள், முன்னேற்றங்களை அவை ஏற்காததே கோளாறு. சர்க்கரைத் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதை விடுத்துக் கட்டுப்பாடுகளைக் கொணர்வதால் யாருக்கு லாபமோ, மக்களுக்கு நஷ்டம்தான். இத்துறையில் மட்டுமின்றி வேறு எந்தத் துறையானாலும் லாபகரமாக இயங்காத தொழிலகங்களை அரசாங்கம் காக்க முன்வருவது, அவற்றை ஏற்று நடத்து


வது என்பதெல்லாம் அபத்தம். இந்த மனப் போக்கு அடியோடு மாற வேண்டும்'' என்றார்.

''நிலக்கரிச் சுரங்கங்களைக்கூட....'' என்று நான் ஆரம்பிக்கு முன்னரே, ''அவற்றைச் சர்க்கார் ஏற்றது ரொம்ப சரி. தேசிய நோக்கில் அதற்கு வலுவான காரணங்கள் உள்ளன. சற்றுமுன் நான் சொன்னதற்கும் இதற்கும் முடிச்சுப்போடக்கூடாது'' என்றார்.

இவ்வாறு கண்டிக்க வேண்டியவற்றைத் தயங்காது கண்டித்தும் பாராட்ட வேண்டியதைத் தாராளமாகப் பாராட்டியும் பேசும் மகாலிங்கம், சாந்தமான முகப் பொலிவும் எளிய தோற்றமும் எல்லோருடனும் இனிமையாகப் பழகும் சுபாவமும் உடையவர். எம்.எல்.ஏ.ஆக இருந்தபோது இவர் பொள்ளாச்சிக்கு அருகே ஆழியார் நீர்த் தேக்கம் உருவாகப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார். இதன் ஆரம்ப கட்டத்தில் யானை மிதேறிக் கானகங்களுக்குள் புகுந்து சென்று திட்டத்தின் சாத்தியக்கூறுகளை ஆராயவும் இவர் தயங்கவில்லை. இப்படி எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதில் தீவிரப் பற்றுக் கொண்டு ஆத்மார்த்தமான ஈடுபாட்டுடன் வெற்றி காண விழைவதால்தான் மலேஷியாவில் சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமா? — மகாலிங்கத்துக்கு அழைப்பு அனுப்பலாம் என்றும்; சென்னையில் பாரதி அரங்கு எழும்ப வேண்டுமா ? — மகாலிங்கத்தின் தலைமையைக் கோரலாம் என்றும்; கோல்ட் ஸ்பாட் பானத் தயாரிப்பையும் விற்பனையையும் ஏற்கப் புதியதொரு நபர் தமிழகத்தில் வேண்டுமா? — மகாலிங்கம்தான் அதற்குத் தகுதியானவர் என்றும் எல்லோரும் இவரை நாடி வருகிறார்கள். தொழில் வர்த்தகத் துறைகளில் இவரது வளர்ச்சியுடன் போட்டி போட்டுக் கொண்டு இவரது இறை பணி, சமயப் பணி, இலக்கியப் பணி, சமூகப் பணி முதலியனவும் சிறக்கின்றன.

அருட் செல்வம், பொருட் செல்வம் ஆகியவற்றுடன் மக்கட் செல்வமும் குறைவரப் பெற்றுள்ள திரு மகாலிங்கத்திடம், ''நீங்கள் படிக்கிற கனமான நூல்களைப் பார்க்கும்போது புத்தகம் படிப்பதைக்கூட நீங்கள் ஒரு பொழுதுபோக்காகக் கருதவில்லை என்று தெரிகிறது. பொழுதுபோக்கு என்ற முறையில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? குழந்தைகளோடு விளையாடுவதுண்டா ?'' என்று நான் கேட்டபோது கிடைத்த பதில்:

''ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் 'செஸ்' ஆடுவேன். ஆனால் அதையும் அலட்சியப் படுத்த மாட்டேன். 'சீரியஸ்'ஸாகத்தான் எடுத்துக் கொள்வேன் !''



விக்டோரியா நம்பர் — 203

'இந்த வைரங்களை யாரும் திருட முடியாது. அவ்வளவு பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது' என்று பாதுகாப்பு அதிகாரி ஜம்பம் பேசவில்லையென்றால், வெளியுலகத்துக்கு லேட் தூர்க்காதாஸாக வளைய வரும் கடத்தல் கூட்டத் தலைவனுக்கு அவற்றை அபகரிக்க வேண்டும் என்ற ஆர்வம் பொங்கியிராது ! விக்டோரியா என்று கூறப்படும் ஜட்கா வண்டியில் ஒளித்து வைக்கப்பட்டுள்ள மூன்று கோடி ரூபாய் பெறுமானம் உள்ள வைரங்களுக்காகக் கதை வளர்ந்து, திரைப் படமும் வளர்ந்து, இந்த விமரிசனமும் எழுத நேரிட்டிராது.



கவைடு தட்டிப் போன குற்றக் கதையானாலும், படத்தைக் கொண்டு போயிருக்கும் முறை அபாரம், கனகச்சிதம் !

உடலைச் சில்லிட வைக்கும் பயங்கரக் கொடுமைகளையும் உரோமம் சிலிர்க்க வைக்கும் இன்பக் காட்சிகளையும் கண்டு களிக்க முடிகிறது. ராஜா — ராணுவாகத் தோன்றி நகைச்சுவையை முதலீடாக்கி நவ கவைகளையும் நிறைத்து அசோக்குமார், பிரான் இருவரும் இணைந்து நடித்து நடிப்புக்கு மெருகூட்டி உயிர் கொடுத்திருக்கிறார்கள்! இதற்காகவாவது விக்டோரியா 203 பாராட்டைப் பெறக்கூடிய படமாகிறது. 'தோ பேசாரே பிஜு ஸஹாரே தேகோ பூச் பூச்கர் ஹாரே' என்ற பாட்டு அற்புதம்.



ஸ்பானியக்கதை

ரோடில்லெரோ கிராமத்து மீனவர்கள்

அது ஸ்பெயின்.
இது இந்தியா.
ஆயின் மீனவர்களைப்
பொறுத்தவரை
வாழ்க்கைப் பிரச்னைகள்
உலகெங்கும்
ஒரே மாதிரிதான்
இருக்கும் போலும்!

மிக மோசமாக இருந்த சீதோஷ்ண நிலை யிட்டம் மீனவர்கள் ரொம்பவும் அவநம்பிக்கை கொண்ட காரணத்தால் தலைவர்கள் ஒன்று கூடி ஒரு முடிவுக்கு வந்தார்கள். தங்களில் மூவர் ஒவ்வொரு இரவும் காவல் இருக்க வேண்டும் என்றும், கடல், ஆகாயம் இவற்றின் நிலையை மிக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்றும் அந்தக் கணிப்புக்கு ஏற்ப மீனவர்களைக் கடலுக்கு அனுப்புவதா வேண்டாமா என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டும் என்றும் முடிவாகியது. மேலும் விடிவு முன்னரே அவர்கள் கிளம்புவது வழக்கமாதலால் முதலில் கிளம்புகிற அல்லது எல்லோருக்கும் முன்னதாகச் செல்லுகிற படகு, மேலே செல்வது ஆபத்து என்று தோன்றும் பட்சத்தில் முன்புறம் ஒரு விளக்கேற்றி வைத்து விட்டுத் திரும்பிவிட வேண்டும் என்றும் இது மற்றப் படகுகளுக்குத் துறைமுகத்துக்குத் திரும்ப ஒரு சமிக்ஞையாக இருந்து உதவும் என்றும் ஒப்புக் கொண்டார்கள்.

நாம் எந்த இரவைப் பற்றிப் பேசப் போகிறோமோ, அதற்கு இரண்டு இரவுகளுக்கு முன்னால் தன் சகாக்கள் இருவருடன் கடலைக் கண்காணிக்கும் பொறுப்பு ஜோஸுடையதாயிற்று. மோசமான சூழல் நிலவுமென வானம் - உத்தரவாதம் அளிப்பதை அவர்கள் கண்டார்கள். ஆகவே தங்கள் நண்பர்களை அழைக்க அவர்கள் விரும்பவில்லை. ஆனால் அவர்கள் மீன் பிடிக்கச் சென்று இப்போது பல நாட்கள் ஆகிவிட்டிருந்தன. பசியின் கொடுமை எல்லோரும் உணரத் தொடங்கியிருந்தார்கள் கிராமத்தில். பயணியர் விடுதியில் கூட இவர்களுடைய முடிவு குறித்து ஓரளவு முணுமுணுப்பு இருந்தது.

பகல் போதில் சீதோஷ்ண நிலையில் கொஞ்சம் அபிவிருத்தி ஏற்பட்டது. அதிகமாக இல்லை. அன்று இரவு வேறு மூன்று படகுத் தலைவர்கள் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் பையனிடம் படகுக் குழுக்களை அழைக்குமாறு உத்தரவிடு முன்னர் நீண்ட நேரம் தயங்கினார்கள். ஏனெனில், இதைவிட அவநம்பிக்கை கொள்ளக் கூடிய சூழல் அபூர்வமாகவே அமையும். ஆனாலும் மக்களின் துன்பத்தை எண்ணியோ முணுமுணுப்பாளர்களுக்குப் பயந்தோ கடைசியில் அவர்கள் அந்த உத்தரவைக் கொடுக்கவே செய்தார்கள்.

கரையை முதலில் அடைந்தவர்களுள் ஜோஸும் ஒருவன். "ஆவே மரியா!" என்று அவன் மேரி அன்னையைப் போற்றிவிட்டு வானைப் பார்த்தவாறே கவினான்: "என்ன பயங்கரம்! இந்த இரவிலா கடல் மேலே போவது?" புத்திசாலியானதால் தன் சகாக்களிடம் கலவரத்தைப் பரப்பவில்லை அவன். வீரனானதால் கிளம்ப மறுக்கவும் இல்லை. மௌனம் காத்து, சகாக்கள் உதவப் படகை நீரில் இழுத்து விட்டான். நீருக்கு அருகில் இருந்தது அதுதான். ஆதலால் முதலில் தயாராகி மிதந்ததும் அதுவே. படகில் ஏறியதும் குழுவினர் உடனே துடுப்பு வலிக்க ஆரம்பித்தனர். ஜோஸின் படகில் பதினாறு பேர்கள் இருந்தனர்.

கடலிலிருந்து ஒரு மைல் தூரம் சென்ற பிறகு ஜோஸ் பாய் விரிக்கச் சொன்னான். 'அஸ்துரிய'ப் படகுகள் ஐந்து பாய்களைச் சுமந்து செல்லும். அவற்றுக்கு, அவற்றின் பல்வேறு அளவுகளுக்குத் தக்கபடி பெயர்கள் உண்டு. 'அன்ஷியன்' என்பதுதான் மிகச் சிறியது. படகை இழந்து விடுகிற நிலைக்கு வந்து விட்டோம் என்று உணர்ந்ததும்தான் அதை விரிப்பார்கள். அதனால் அதற்கு இந்தப் பயங்கரப் பெயர்* வந்தது.

கரிய இரவுதான். ஆனால் ஊடுருவிச் செல்ல முடியாதது அல்ல. இங்குமங்கும் வானம் நிர்மலமாகத் தெரிந்தது. பெரிய கரிய மேகங்கள் விரைவாக மிதந்து சென்றன. இது, உயரத்தில் காற்று வெகு வேகமாக வீசியது என்பதைத் தெளிவாக்கியது. ஆனால் கீழே இவர்கள் அதைச் சிறிதும் உணர முடியவில்லை. வானில் கண்களைப் பதித்திருந்த ஜோஸ் இதனால் யோசனையில் ஆழ்ந்தவனாகவும், சஞ்சலமுற்றவனாகவும் ஆகிவிட்டான். குழுவினரும் மௌனமாகி என்ன நேருமோ என்று எண்ணத் தொடங்கி விட்டனர். குளிர் அவர்கள் கரங்களை உறையச் செய்தது என்றால் அவர்களால் மறைத்துக் கொள்ள முடியாத பயம் நாவை உறையச் செய்தது. அவர்கள் அடிக்கடி மேலே பார்த்தார்கள். ஒவ்வொரு தடவையும் மேகங்கள் முன்னிலும் கோபத்தோடு விரைவதைக் கண்டார்கள். கடல் எண்ணெய்ப் பிசுக்குக் கொண்டது போல் கொடூரமாகக் காட்சி தந்தது.

கால் மணி நேரம் சென்றது. ஜோஸ் மௌனத்தைச் சிதறச் செய்து கூச்சலிட்டான்: "சே! படுமோசமான இரவு. நாய் கூட வெளியே கிளம்பாது!"

---

* அன்ஷியன் : அங்குல உயரமே உடைய.

அர்மாண்டோ பாலாஸியோ வால்டெஸ்



''நீ சொல்வது ரொம்ப சரி!'' என்று குழுவினரில் மூன்று நான்கு பேர் அவசரம் அவசரமாகச் சொன்னார்கள். ''அசிங்கம் பிடித்த இந்த இரவு பன்றிகளுக்குத்தான் லாயக்கு; கிறிஸ்தவர்களுக்கு அல்ல.''

''ஜோஸ்! எங்களை முன்னிட்டு நீ மேலே போக வேண்டாம். உனக்கு விருப்பமானால் திரும்பிவிட உத்தரவிடு!''

ஜோஸ் பதில் கூறவில்லை. சில நிமிஷங்கள் அவன் மௌனமாக இருந்தான். பிறகு திடீரென்று எழுந்து ஒரு முடிவுக்கு வந்தவனாகக் கூறினான்:

''பையா! அந்த லாந்தரை ஏற்று! படகைத் திருப்புங்கள்!''

தன் மனம் நிம்மதியுற்றதை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டே பையன் லாந்தரை ஏற்றிப் படகின் முன் பக்கம் பொருத்தினான். குழுவினரும் அதே அளவு மன நிம்மதி பெற்றுக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனர்.

படகு திரும்பி ரோடில்லெரோ நோக்கிச் சென்றது. தொலைவில் பல படகுகளின் லாந்தர் விளக்குகள் ஏற்றப்படுவதை அவர்கள் பார்த்தார்கள். இவர்கள் காட்டிய சமிக்ஞையைக் கண்டு கொண்டதற்கான அடையாளம் அது. எல்லோரும் துறைமுகத்துக்குத் திரும்புகிறார்கள் என்று அர்த்தம்.

எல்லோருடைய நாக்குகளும் கட்டவிழ்த்து விடப்பட்டனவாக இயங்க, பேசிக்கொண்டே அவர்கள் வீடு திரும்புகையில் ஜோஸ், தன் படகுக்கு அருகிலேயே மற்றொரு படகு முன்புறம் விளக்கு ஏதும் இல்லாமல் எதிர்த் திசையில் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தான்.

ஜோஸ் எழுந்து நின்றான். வாய்க்கு அருகே கரங்களைக் குவித்துக் கத்தினான்: ''ஆஹாய்! யார் அங்கே!''

''என்ன வேண்டும் ஜோஸ்?'' மற்றொரு படகின் தலைவன் ஜோஸின் குரலை இனம் கண்டுகொண்டு பதிலுக்குக் கேட்டான்.

''எங்கே போய்க் கொண்டிருக்கிறாய், ஹெர்மானிகில்டோ?'' என்று ஜோஸும் மற்றவனைக் குரலால் அடையாளம் புரிந்து கொண்டு கேட்டான்.

''மீன் பிடிக்கும் பிரதேசத்துக்குத்தான்.'' —எவ்வளவு கிட்டத்தில் வர முடியுமோ வந்து, மற்றவன் பதில் கூறினான்.

''நான் லாந்தரை ஏற்றியபோது நீ ஏன் ஏற்றவில்லை?''

''எனக்கு நம் மக்களை நன்றாகத் தெரியுமாதலால்தான்! அவர்கள் உனக்கு விளக்கொளியைக் காட்டுவார்களே ஒழிய உன் சொற்படி கேட்க மாட்டார்கள். விடிகிற சமயத்தில் பார்த்தால் எல்லாப் படகுகளும் மீன் பிடிக்கும் கடல் பிரதேசத்தில்தான் இருக்கும்! என்ன பந்தயம் கட்டுகிறாய்?''

'அவன் துணிச்சல் நாசமாய்ப் போக' என்று ஜோஸ் முணுமுணுத்தான். தன் குழுவைத் திரும்பிப் பார்த்து, ''படகைத் திருப்புங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அவர்கள் தங்கள் அதிருப்தியைக் காட்டிக் கொண்டு கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

''ஜோஸ்! நம்மவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று உனக்கு நான் பல தடவைகளில் சொல்லியிருக்கிறேன்'' என ஆரம்பித்துத் தொடர்ந்தான் பெர்னர்டோ: ''பக்கத்து வீட்டுக்காரன் இரண்டு கண்களை இழப்பானென்றால் நான் ஒரு கண்ணை இழக்கத் தாராளமாய் முன்வருபவர்கள் இவர்கள்.''

தலைவன் பதில் கூறவில்லை.

இன்னொருவன் சொன்னான்:

''எல்லோரும் அதிகாலையில் ஒன்றாகச் சேர்ந்து சந்திக்கும்போது குட்டு உடைந்து விடும்.''

''ஏதாவது நடக்கக் கூடாதது நடந்து விட்டால், அப்போது தெரியும்'' என்றான் ஜோஸ். ''பழி சுமத்துவதற்கு ஓர் ஆசாமியைச் சீக்கிரமே கண்டுபிடிப்பார்கள்.''

இதன் பிறகு படகில் நிசப்தம் நிலவியது. குழுவினர் தொடு வானத்தை நோட்டம் விட்டனர். தலைவன் ஜோஸ் சீதோஷ்ண நிலையில் ஏற்படும் மாறுதல்களை மேலும், மேலும் மனச் சஞ்சலத்துடன் உன்னிக் கவனித்து வந்தான்.

வழக்கத்தை விடச் சாம்பல் நிறம் கூடுதலாகி, வருத்தம் மிக்கதான தோற்றம் அளித்து, பொழுது புலர்ந்தது. கரை கட்டினாற்போல் மூன்று அடுக்குகளில் அமைந்திருந்த மேகங்களினூடே வெளிச்சம் மிகவும் பிரயாசைப் பட்டு வடிகட்டினாற்போல் வெளிவந்தது.

மீன் பிடிக்கும் பிரதேசத்தை இவர்கள் அடைந்தபோது ரோடில்லெரோ படகுகளில் அநேகமாக அனைத்தையுமே அங்கு கண்டார்கள். அவர்கள் ஏற்கனவே வலை வீசியும் இருந்தார்கள். ஒரு படகுக்கும் மற்றொரு படகுக்கும் இடையே அதிக இடைவெளியின்றி மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இவர்களும் பாயைச் சுருட்டிக் கட்டியதும் அவர்களில் ஒருவரானார்கள். இரண்டு மணி நேரத்தில் பிரீம் எனப்படும் வகை மீன்கள் கொஞ்சம் பிடித்திருந்தார்கள்; ரொம்ப இல்லை. பத்து மணிக்கு வானம் இருண்டது; மழை கொட்டியது. கூடவே கொஞ்சம் காற்றும் வீசியது. அரை மணி கழித்து இன்னொரு மழை; காற்று பலத்தது. இதன் பிறகு படகுகளில் சில, வலைகளை உள்ளுக்கிழுத்துக் கொண்டு பாய் விரித்து, நிலத்தை நாடிச் சென்றன. ஒன்றன் பின் ஒன்றாக மற்றவையும் பின்தொடர்ந்தன.

அவர்கள் கரையிலிருந்து சுமார் முப்பத்தைந்து மைல் தள்ளியிருந்தார்கள். இரண்டு மைல் தூரம் கடப்பதற்குள் மேற்கே வானம் பயமுறுத்துகிற விதமாய் இருள்வதைக் கண்டார்கள். குழுவினர் ஒருவரை யொருவர் மன சஞ்சலத்துடன் பார்த்துக் கொள்ளும் அளவுக்கு அது கறுத்துக் காணப்பட்டது.

''என்ன வந்து கொண்டிருக்கிறது பார்த்தாயா?'' என்றான் ஒருவன்.

ஜோஸ் மேற்குத் திசையில் வைத்த கண் வாங்காது நோக்கினான். அந்தக் கருமை விரைவாக நெருங்கிவந்து கொண்டிருந்தது. திமர்ப் புயலின் முன்னறிவிப்பாகத் தன் கன்னங்களில் குளிர்ச்சியை உணர்ந்தபோது அவன் துள்ளி எழுந்து நின்று கத்தினான்: ''எல்லாப் பாய்களையும் கயிறுகளையும் அவிழ்த்து விடுங்கள்!''

எவ்வளவு பெரிய அபாயம் என்பதை உணராது போனாலும் கூட அம்மனிதர்கள் துரிதமாக உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தார்கள். துடுப்பு வலிப்பவர்கள் அமரும் ஆசனங்கள் மீது கனமான பாய்கள் விழுந்தன. கண நேரம் தாமதமாகியிருந்தாலும் நிலைமை விபரீதமாகி விட்டிருக்கும் என்பது உடனே தெரிந்தது. பாய்மரங்களினூடே மிகுந்த ஆவேசத்தோடு காற்று ஊதிக் கொண்டு சென்று படகை முன்னுக்குத் தள்ளியது. குழுவினர் ஜோஸை நன்றியோடு பார்த்தார்கள்.

''நாசமாய்ப் போகிற அந்த ஆவேசக் காற்றை எப்படி மோப்பம் பிடித்தாய்?'' என்று ஒருவன் கேட்டான்.

பிறகு அவர்கள் கடலை நோக்கிப் பார்வையைத் திருப்பியபோது படகுகளுள் ஒன்று நீர் நிரம்பி முழுகிக் கொண்டிருப்பதைக் கண்டனர். மீண்டும் ஜோஸை அவர்கள் நோக்கிய சமயம் அவர்கள் முகங்கள் மரணக் களையுடன் வெளிறிக் கிடந்தன.

''பார்த்தாயா ஜோஸ்?'' என்று ஒருவன் கரகரத்த நடுங்கும் குரலில் கேட்டான்.

தலைவன், பார்த்ததற்கு அடையாளமாகக் கண்களை மூடினான். படகில் முன்புறமிருந்த பையனெ நடத்தைப்பார்த்துவிட்டு, உரக்கக் கூக்குரலிடத் தொடங்கினான்:

''கன்னித் தாயே! எங்கள் கதி என்ன?'' புனிதத் தாயே எங்கள் கதி என்ன?''

ஜோஸ் கோபத்தில் அனல் பறக்கும் கண்களால் அவனைப் பார்த்தான். ''மூட்டை கட்டுடா புலம்பலை, குட்டிச் சைத்தானே! இல்லாவிட்டால் உன்னைக் கடலில் தூக்கி எறிந்து விடுவேன்!''


சிறுவன் பீதி யடைந்தவனாய் மௌனமானான்.

''முன்புற மேல் பாயையும் 'அன்ஜிய'லை யும் மட்டும் விரியுங்கள்'' என்று ஜோஸ் உத்தரவிட்டான்.

சீக்கிரமே இது செய்து முடிக்கப்பட்டது. படகு மிக வேகமாகச் சென்றது. காற்று



கண்ணாடியின்றி கண் பார்வை பெறலாம்!



உங்களுக்கு இதைவிட மட்டற்ற மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியும் வேறு உண்டோ!

'காண்டாக்ட் லென்ஸ்'களை உபயோகியுங்கள்.

இந்த 'காண்டாக்ட் லென்ஸ்'கள் கிட்டப்பார்வை, தூரப்பார்வை மற்றும் அஃபாகிக் (காடராக்ட் ஆப்ரேஷனுக்குப்பின்) கெராடோ கோனஸ், அனிஸோமெட்ரோபியா, அனிஸிகோனியா, பாலிபோபியா, போன்ற பார்வை குறைபாடு உடையவர்களுக்கு மிகவும் சிறந்தது.

'காண்டாக்ட்லென்ஸ்'களை வெகுசுலபமாக நீங்களே உங்கள் கருவிழிகளில் பொருத்திக்கொள்ளலாம். . . கழற்றியும் விடலாம்—சில நாட்கள் பழகிய பின்! உங்கள் விழிகளில் பொருத்தப்பட்ட இச்சிறு 'காண்டாக்ட்லென்ஸ்'கள் மற்றவர்கண்களுக்கு தெரியாது. ஆகவே உங்கள் எழில் மிகு முகத் தோற்றத்தில் எவ்வித மாறுதலும் இல்லை!

உங்கள் கண் வைத்தியரை ஆலோசனைக்கு அணுகுங்கள்

adsindia

மற்ற விபரங்களுக்கு: **ஆசியா காண்டாக்ட் லென்ஸ் லாபரெட்டரி**
லாபரெட்டரி : 13, கில்கிரிஸ்ட் அவென்யூ, ஹேரிங்டன் ரோடு, சென்னை - 31
அலுவலகம் : 5-G, வீரபத்ர அய்யர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34

போன்கள் :
662600 82722 82595



தலைவலி • ஃப்ளூ • பல்வலி • உடல்வலி முதலியவற்றை உடனடியாகக் குணப்படுத்த

ஸலோஃபென்

வலி நிவாரண மாத்திரை

அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு

ஏனெனில் ஸலோஃபென் மாத்திரைகள் டாக்டர்கள் சிபாரிசு செய்யும் மருத்துவ முறைப்படித் தயாரிக்கப்பட்டவை.

ஸலோஃபென்
இருக்குமிடத்தில்
வலி இருக்காது!



FDSAS-1808 TM

தேயிலை உயர்தரம்,

கொள்கலமோ நிரந்தரம்!

உங்களுக்கு மிகவும் பிடித்தமான

ஸ்பென்ஸரின்

ரெட் பாண்ட் அல்லது கிரீன் லேபல் தேயிலை

இப்போது வண்ணம் நிறைந்த, காற்றுப் புகாத,
உறுதியான, பலவிதப் பயன்கள் கொண்ட

பாலிஎதலீன் டப்பாக்களில்

கிடைக்கிறது. முந்துங்கள். ஸ்டாக் தீர்வதற்குமுன்
விரைந்து சென்று வாங்குங்கள். தென்னிந்தியாவிலுள்ள
பெரு நகரங்களில் மட்டுமே இந்தச் சலுகை.

ஸ்பென்ஸர் அண்ட் கோ. லிமிடெட்
சென்னை மற்றும் கிளைகள்



பயங்கரமாக வீசியதால். வினாடிக்கு வினாடி அதன் சக்தி அதிகரித்துக் கொண்டிருந்தது. சில நிமிஷங்களே ஆகியிருக்கும்—

மற்றப் படகுகள் எந்தத் திசையில் செல்கின்றன என்பதை அவர்களால் இனி பார்க்க முடியாது என்ற அளவுக்குக் கனத்த அலைகள் கடலில் உயர்ந்து எழுந்தன. விட்டு விட்டுப் பலமாக மழை பெய்தது. படகில் நீர் ஏராளமாக நிரம்பியது. அந்நீரை இறைப்பதிலேயே குழுவினரில் பலர் ஈடுபட வேண்டியதாயிற்று. ஆனால் ஜோஸ் நீரைவிடக் காற்றைக் கணிப்பதிலேயே கண்ணாயிருந்தான். அது திடீர் திடீரென்று துரோகம் பண்ணும் விதமாகப் பலமாக வீசியது. அவன் சற்று அயர்ந்தால் போதும், படகு கவிழ்ந்து விடும். அதைத் தடுக்க அவன் மேலும் இரண்டு தடவைகளில் பாயை அவசரமாக அவிழ்த்து விடச் சொல்ல வேண்டியிருந்தது. கடைசியில் அவன் இனி இரண்டு பாய்களைக் கூட விரித்து வைக்க முடியாது எனக் கண்டவனாக, 'அன்ஷியன்' ஒன்றை மட்டுமே விரித்து வைக்குமாறு உத்தரவிட்டான். குழுவினர் அவனை வியப்புக் கலந்த பீதியுடன் பார்த்தார்கள். அக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்தபோது பலரது கரங்கள் நடுங்கின.

''காற்றோடு படகைச் செலுத்த வேண்டியதுதான் நாம்'' என்றான் ஜோஸ். கத்திக் கத்தி அவன் தொண்டை ஏற்கனவே கட்டிப் போயிருந்தது. ''ரோடில்லெரோவுக்கு நாம் போக முடியாது. லாரியோவில் கரை சேரலாம்.''

''லாரியோவுக்குக்கூட நம்மால் போய்ச் சேர முடியாது போல்தான் தோன்றுகிறது'' என்றான் ஒரு கிழவன் அடங்கிய குரலில்.

''மனச் சோர்வு அடையாதீர்கள், தோழர்களே! தைரியமாயிருங்கள்! இது என்ன பிரமாத புயல்?'' என்று தலைவன் ஊக்கத்தோடு பதிலளித்தான்.

ஆனால் கடல் அபாய அறிவிப்புச் செய்தது. அது மலைகளைக் கொண்ட கடலாக மாறியது. பயங்கரமாகவும் பயபக்தி ஏற்படுத்துவதாகவும் இருந்தது. வினாடிக்கு வினாடி அலைகளின் உயரம் அதிகரித்தது. அந்த அலைகளின் கீழ் படகு அடிக்கடி மறைந்தது. அப்புறம் ஏதோ ஒரு தெய்வாதீனமான அற்புதம் நிகழ்ந்தது போல் மீண்டும் மேலே உயர்ந்தது. படகைத் திசை திருப்பப் பயன்படும் உபகரணத்தை ஓர் அலை அடித்துக் கொண்டு போய்விட்டது. மாற்று உறுப்பாக வைத்திருந்ததை ஜோஸ் பற்றி, இழந்ததன் இடத்தில் வைத்துப் பொருத்துவதற்குள் அதையும் இன்னொரு பலத்த அடி கொடுத்து அவன் கரத்திலிருந்து பிடுங்கிக் கொண்டு போய் விட்டது ஓர் அலை. படகு தடுமாறியது.

திசை திருப்பும் கருவிக்குப் பதில் ஜோஸ் ஒரு துடுப்பைப் படகின் பின் பகுதியில் தாற்காலிக ஏற்பாடாகப் பொருத்தினான்.

ஓர் அலை பெர்னார்டோவின் தொப்பியை அடித்துக் கொண்டு போயிற்று. ''நடக்கட்டும்; நடக்கட்டும்!'' என்று அவன் ஆத்திரத்தோடு கத்தினான். ''அடுத்தாற்போல் என் தலை போகும்!''

ஜோஸ், அவர்கள் சீக்கிரமே தெம்பிழந்து போவார்கள் எனக் கண்டான். அவன் சொன்னான்: ''தோழர்களே! நாம் ஓர் இக்கட்டான நிலையில்தான் இருக்கிறோம். ரோடில்லெரோவின் புனித ஏகனை அழைத்து நம்மைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொள்ள விரும்புகிறீர்களா?''

''ஆமாம் ஜோஸ்!'' என்று எல்லோரும் நம்பிக்கையை அடியோடு இழந்ததால் ஏற்பட்ட ஓர் அவசரத்தோடு கூறினர்.

''அப்படியானால் சரி, உங்களுக்கு விருப்பமானால் நாம் எல்லோரும் வெறுங் கால்களுடன் வழிபாட்டுக்குச் சென்று பாதிரியின் உரையைக் கேட்பதாக, பிரார்த்தித்துக்கொள்வோம். ஆனால் இது நமக்குத் தைரியத்தை அளிக்க வேண்டும். கோழைத்தனம் கூடாது. தைரியமாய் இருங்கள் தோழர்களே! நீரை இறையுங்கள்! நீரை இறையுங்கள்!''



''பத்தும் பாத்திரங்களைத் தேய்க்கச் சாம்பல் இல்லையே, எப்படித் தேய்ப்பதாம்?''

''இதோ இப்பவே சிமெண்ட் ஒரு மூட்டை வரவழைத்து விடுறேன், இரு.''

இதற்கிடையில் ரோடில்லெரோவில் என்ன நடந்து கொண்டிருந்தது?

ஜோஸ்-உடைய சமிக்ஞைக்குக் கீழ்ப்படிந்த சில படகுகள் விடியுமுன்னர் துறைமுகம் திரும்பி விட்டன. அவற்றின் குழுவினர், பரிதாபத்துக்குரிய விதத்தில் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாகக் கண்டபோதும், குறிப்பாக அவரவர் வீட்டுப் பெண்மணிகள் இடித்துக் காட்ட ஆரம்பித்தபோதும் வெட்கமும் மனச் சோர்வும் அடைந்தார்கள்.

விடிந்த பிறகு அவர்கள் அபிப்பிராயம் சற்று மாறியது. சீதோஷ்ண நிலை படுமோசமாக இருந்ததால் சோம்பி உட்கார்ந்திருந்ததானது அவர்கள் நெஞ்சில் குறுகுறுப்பை ஏற்படுத்தவில்லை. மழையால் சூழப்பட்டு வடகிழக்குக் காற்று வீசியதை முதன் முதலாகக் கிராமம் உணர்ந்தபோது அந்த மனிதர்களில் சிலர் தங்கள் மனைவியரிடம் சென்று ''இப்போது என்ன நினைக்கிறாய்? நான் கடலில் இப்போது இருப்பதை விரும்புவாயா?'' என்று புன்னகையோடு கேட்டனர். இப்போது வாயடைத்துப் போவது பெண்களுடைய முறையாயிற்று. காற்றின் வேகமான இரண்டாவது வீச்சு முன்னதை விடக் கொடூரமானதாக விளங்கிச் சுற்றுவட்டாரம் முழுவதையும் பரபரப்பில் ஆழ்த்தியது. ஆண்களும் பெண்களும் கடற்கரைக்கு அவசரம் அவசரமாகச் சென்று கொட்டு கொட்டென்று கொட்டிய மழையைப் பொருட்படுத்தாமல், அங்கிருந்து ஸான் எஸ்டிபான் குன்றின் மீது ஏறினார்கள். அவர்கள் எதிர்பார்த்ததை விடச் சீக்கிரமாகவே புயல் திடீரென்று பயங்கரமாக வீசத் தொடங்கியது. ஒரு வினாடியில் கடல் அலைகள் குலை நடுக்கம்

ஏற்படுத்துகிற மாதிரி உயர்ந்தன. ஸான் எஸ்டிபான் குன்றின் உச்சியில் நின்றபடி கூட்டம் புயலின் முன்னேற்றத்தைக் கிலியுடன் கவனித்தது. பெண்களில் சிலர் அழ ஆரம்பித்தனர்.

ஸான் எஸ்டிபான் குன்றில் உள்ள கிறிஸ்துவக் கோயில் சமீபம் ஒரு குடிசை. அதில் ஒரு குடியானவன் வசித்து வந்தான். கடற்கரையைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அவனுக்கு. இரவோ பகலோ, ஆபத்து மிகுந்த சமயங்களில் தீமூட்டிச் சமிக்ஞை காட்டும் வேலைக்காக வருஷா வருஷம் அவனுக்குச் சொற்ப ஊதியம் தரப்பட்டு வந்தது. அந்தக் குடியானவன் கடல்மீது சில தடவைகள் தான் சென்றிருக்கிறான் என்றாலும், ஒரு மாலுமியைப் போலவே அதனை அவன் நன்றாக அறிந்திருந்தான். கடலைச் சிறிது நேரம் உன்னி நோக்கிவிட்டு அவன் தயங்கித் தயங்கிக் குடிசைக்குள்ளிருந்து வெட்டிக் காய வைத்த புதர்களை ஒரு சுமை கொண்டு வந்தான். உள்ளதற்குள் உயரமான இடமாகப் பார்த்து அதனை வைத்துத் தீமூட்டினான். அது மீனவர்களுக்கு முதல் சமிக்ஞை.

கூட்டத்தினிடையில் இருந்த எலேனா நெருப்பைப் பார்த்ததும் தன் இருதயம் சுருங்குவதை உணர்ந்தாள்.

தொடு வானத்தில் ஒரு பாயைக் கூடக் காண முடியவில்லை. எலேனாவின் நெற்றி, வியர்வையால் நனைந்து குளிர்ந்து கிடந்தது.

மானுவெல் வெளிறிய முகத்துடன் மௌனமாகச் சென்று இன்னொரு புதர்ச் சுமையைத் தேடிக் கொணர்ந்தான். ஏற்கனவே எரிந்து கொண்டிருந்த இரு சுமைகளுக்குப் பக்கத்தில் இதையும் வைத்துத் தீமூட்டினான். மழை நின்றிருந்தது. இக்கலங்கரை விளக்குகளின் தீப்பிழம்புகள் காற்றால் விசிறப் பட்டுச் சுழித்தெழுந்தன.

எலேனா நடுங்கினாள். தவிர்க்க முடியாத உந்துதலால் ஆட்கொள்ளப்பட்டு அவள் ஓடினாள். பைன் மரங்களினூடே பாதையில் இறங்கிச் சென்று, வெறிச்சோடிக் கிடந்த கிராமத்தைக் கடந்து, குன்றின் மறுபுறம் ஏகபிரான் கோயிலுக்கு அழைத்துச் செல்லும் பாதையை அடைந்தாள். இரு புறமும் வரிசையாக மரங்களைக் கொண்ட அப் பாதையில் மேலேறிச் சென்று வாசலருகே களைத்துப் போய், இரைக்க, இரைக்க வந்து சேர்ந்தாள். மூச்சு இழுத்துக் கொள்வதற்காக ஒரு விநாடி தாமதித்தாள். பிறகு சிலுவைக் குறியிட்டபடியே மண்டியிட்டு விழுந்தாள். முழங்கால்களாலேயே நடந்து, பக்தர்கள் தங்கள் காணிக்கையை இறைவனுக்குச் செலுத்தும் உயர்ந்த பீடத்துக்கு வந்தாள். ஆனால் அவள் அங்கேயும் நிற்கவில்லை. வலது பக்கம் திரும்பி, வளைந்து சுழன்று செல்லும் படிக்கட்டுகள் மீது வலியைப் பொருட்படுத்தாமல் ஏறினாள். மேலே கிறிஸ்து பெருமானின் திருவுருவம் கோயிலுக்குள் ஒரு கோயிலாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. தவறு இழைத்தவர்கள் தங்களுக்குத் தாங்களே தண்டனை விதித்துக் கொண்டு திருந்தப் பயன்படுத்தும் படிக்கட்டு அது. பக்தி சிரத்தையோடு அதில் ஏறியவர்களின் முழங்கால்களால் அது தேய்மானம் கண்டிருந்தது. அதன் உச்சியை அடைந்த போது எலேனாவின் முழங்கால்கள் ரத்தம் சிந்திக் கொண்டிருந்தன.

இந்தக் குட்டிக் கோயில் காற்றோட்டமில்லாதது. சுவர்கள், பல சிலைகளாலும் பக்தர்களின் காணிக்கைகளாலும் நிரம்பியிருந்தன. கீழே பிரதான வாயிலில் நுழைந்து வரும் பக்தர்கள், இதன் முன்புறமிருந்த ஜன்னல் வழியாக வணக்கத்துக்குரிய ஏசுவின் உருவத்தைப் பார்க்கலாம். பிரார்த்தனைக்குக் கூடும் நாட்களில் பக்தர்களுக்கு இத்தரிசனம் கிடைக்கும். புனித கிறிஸ்துபெருமான் இப்போதும் இங்கேதான் இருந்தார். வழக்கம்போல் வெல்வெட்டுத் திரையால் மூடப்பட்டிருந்தார். நடுங்கும் கரத்தால் எலேனா திரையை விலக்கினாள். எண்சாண்கிடையாகத் தரையில் விழுந்தாள். சற்று நேரத்துக்குப் பிறகு வேறு பல பெண்மணிகளும் உள்ளே வந்து மௌனமாக மண்டியிட்டார்கள். அவ்வப்போது அந்தக் கம்பீரமான, மர்மமான சூழலின் அமைதியை, அடக்க முடியாமல் கிளம்பிய ஒரு விம்மல் ஒலி குலைத்தது.

மதியத்துக்கு மேல் கடல் அமைதியுற்றது. ரொம்பவும் ஆபத்துக்குள்ளானபோதிலும் படகுகள் பல, ரோடில்லெரோவுக்குத் திரும்பி விட்டன. கொஞ்ச நேரம் கழித்து வேறு சிலரும் வந்தனர். ஆயின் இருள் கவிந்த போது இன்னும் ஐந்து படகுகளைக் காணவில்லை. அவற்றுள் ஒன்று ஜோஸ"டையது. திரும்பி வந்தவர்களுக்கு அவற்றின் கதி என்ன என்பது தெரியும். ஏனெனில் அவர்கள் ஒரு படகு மூழ்குவதைப் பார்த்திருந்தார்கள். ஆனாலும் ஒரு வார்த்தைகூட 'அவர்கள் பேசவில்லை. கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பட்டும் படாமலும் பதிலளித்தனர். இரவு நீண்டநேரம் வரையில் கடற்கரையில் கூட்டம் நிரம்பியிருந்தது. நேரம் ஆக ஆக மீளாத் துயரம் அதிகரித்தது. கொஞ்சம் கொஞ்சமாக மணல் பரப்பு வெறிச்சோடத் தொடங்கியது. இன்னும் திரும்பி வராதவர்களின் குடும்பங்கள் மட்டுமே அங்கு எஞ்சியிருந்தன. கடைசியில் இவர்களும் நம்பிக்கை இழந்து கரையைத் துறந்து கிராமத்துக்கு இதயம் ஒடியத் திரும்பினார்கள்.

என்ன பயங்கரமான இரவு அது! தகப்பனுக்காக அழும் குழந்தைகள் எழுப்பும் கூக்குரலும் துயரத்தில் ஆழ்ந்த மனைவியார்களின் இதயத்தைப் பிளக்கும் விம்மல் சத்தமும் இன்னமும்கூட என் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன. பயணியர் விடுதியில் ஆண்பிள்ளைகள் கூடி, பலமான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டு இந்த விபரீதத்துக்கு ஒருவரை யொருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தனர். பொழுது விடிந்தபோது கிராமத்தில் யாருமே உயிரோடு இல்லையோ என்று தோன்றியது. பாதிரி, கோயில் மணிகளை ஒலிக்கச் செய்து எல்லோரையும் தருவித்தார். இறந்துவிட்டவர்களின் ஆன்ம சாந்திக்காக மறுநாள் விசேஷப் பிரார்த்தனைகள் நடக்கும் என அறிவித்தார்.

ஆனால் நண்பகல் வேளையில் ஒரு வதந்தி பரவியது. அந்தச் செய்தியைக் கொண்டு வந்தது யார் என ஒருவருக்கும் தெரியவில்லை.

ஒவ்வொருவரின் மேனிக்கும் பாதுகாப்பு தேவை



வியர்வை துர்நாற்றத்திலிருந்தும், அதனால் நுண்ணிய கிருமிகளிடமிருந்தும் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்படும் சங்கடத்திலிருந்தும் பாதுகாப் பளிக்கிறது.

ஜி-11 கலந்து **சிந்தால் டாய்லெட் பவுடர்** இந்தப் பாதுகாப்பைத் தருகிறது. அதோடு...அன்றலர்ந்த மலரின் நறுமணத்தையும் தருகிறது.

சிந்தால் துர்நாற்றத்தை அறவே போக்கிப் பாதுகாப்பளிக்கும் டாய்லெட் பவுடர்.

Interpub/GSP-6/72R Tam



"இ. எக்ஸ். ஐ. டி. என்றால் என்னடி அர்த்தம்?"

"சரிதான்! எந்த தியேட்டரில் என்ன சினிமா பார்த்தேள்? கதை சொல்லுங்கோ மாமி!"

ரோடில்லெரோ படகுகளில் சில, சுமார் இருபத்தொரு மைல்களுக்கு அப்பால் பான்லோனெஸ் துறைமுகத்தில் கரை சேர்ந்தனவாம். செத்துப்போன நம்பிக்கை ஒவ்வொரு இதயத்திலும் புத்துயிர் பெற்றது. பரபரப்பும் சத்தமும் வீதிகளில் நிரம்பின. தூதுவர்கள் அனுப்பப்பட்டனர். பல விதமான அபிப்பிராயங்களும் ஹேஷ்யங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

அன்றைய பகலும் இரவும் கடுந் துயரிலும் பரிதாபகரமான கவலையிலும் கழிந்தன. வெளிறிய முகத்துடன் அழுது கொண்டே பெண்மணிகள் இங்குமங்கும் ஓடி, ஆண்களின் பேச்சில் தங்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விவரம் ஏதாவது அகப்படாதா என்று ஏங்கினார்கள்.

கடைசியில் மறு நாள் பகல் பன்னிரண்டு மணிக்குச் செய்தி கிடைத்தது. பான்லோனெஸில் கரை சேர்ந்த படகுகள் இரண்டே இரண்டுதாம். ஆனால் எவை? அது பற்றித் தூதுவர்களுக்குத் தெரியவில்லையா? அல்லது அதை வெளியிட அவர்கள் விரும்பவில்லையா? இருந்தாலும் சற்று நேரத்தில் ரகசியச் செய்தி எல்லோருக்கும் பரவியது! ஒரு படகு ஜோஸுடையது. மற்றொன்று டொரிபியோவுடையது.

பிற்பகலில் ஒரு சிறுவன் மூச்சிரைக்க வியர்வையில் குளித்தபடி ஓடிவந்தான். "வந்து விட்டார்கள்! வந்து விட்டார்கள்!"

அந்தக் காட்சி பார்க்க மிகவும் சந்தோஷமானது. அதே சமயம் மிகவும் பயங்கரமானது. பெரிய கும்பலும் சிறிய கூட்டமும் ஒன்றுகலந்தபோது மகிழ்ச்சி ஆரவாரமும், சோகக் கூக்குரலும் ஒரே சமயத்தில் எழுந்தன!

கூட்டத்தில் ஒருத்தியாக இருந்த எலேனா ஜோஸைக் கண்டதும் தொண்டையை ஏதோ வந்து அடைப்பது போல் உணர்ந்தாள். அதன் விளைவாக மூச்சு முட்டி இறந்தே விடுவோமோ என்றுகூடத் தோன்றியது அவளுக்கு. முகத்தைக் கரங்களால் மூடிக் கொள்ள விம்மல்கள் வெடித்தெழுந்தன.

தன் தாயாரின் கரங்களால் மூச்சுத் திணறிப் போகும் விதமாகக் கட்டி அணைக்கப்பட்ட ஜோஸ், அவன் தோளுக்கு மேலாக ஆர்வத்துடன் தன் மனைவியாவதற்கு இருந்த எலேனாவைத் தேடினான். எலேனா தன் வதனத்தை அவன் முகத்தருகே உயர்த்தினாள். ஒருவர் கண்களை ஒருவர் ஊடுருவிப் பார்த்தவாறே இருக்க, இதழ்கள் இணைந்தன.

கடவுளுக்கு நன்றி செலுத்த மறுநாள் புனிதத் தன்மையோடு விழா கொண்டாட வேண்டும் என்று அன்று பிற்பகலே முடிவாயிற்று. கிறிஸ்து பெருமானின் சந்நிதியில் வெறுங் கால்களோடு சென்று வழிபட்டு, பாதிரியின் நல்லுரைகளைக் கேட்பது என்று காப்பாற்றப்பட்ட மீனவர்கள் எல்லோருமே பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். இப்படி ஆபத்துச் சமயத்தில் பிரார்த்தித்துக் கொள்வது ரோடில்லெரோவில் சர்வ சாதாரணம்; பரம்பரைப் பழக்கம்.

ஆகவே மறுநாள் காலை அவர்கள் அலை வரும் கடற்கரையில் ஒன்று கூடிக் குழுக் குழுவாக, அதனதன் தலைவன் முன்னின்று நடத்திச் செல்ல, ஏகபிரானின் கோயிலை நோக்கி மெல்ல நடந்தார்கள். யாருமே தொப்பியோ, காலணியோ தரித்திருக்கவில்லை. மௌனமாக உணர்ச்சியற்ற முகத்துடன் அவர்கள் சென்றார்கள். இந்த வாழ்க்கையில் துயரங்களைத் தவிர வேறு எதையும் அதிகம் அறிந்திராதவர்களுக்கே உரித்தான எளிய, ஆழ்ந்த சமய நம்பிக்கையை அவர்களது அமைதியான கண்கள் புலப்படுத்தின. அவர்களுக்குப் பின்னால் பெண்மணிகளும் குழந்தைகளும் கிராமத்தில் இருக்கும் ஒருசில கனவான்களும் வந்தனர். அவர்களும், இவ்வளவு பலசாலிகளான, முரட்டுத்தனமான மனிதர்கள் இப்படிக் குழந்தைகள்போல அடங்கி ஒடுங்கி நடப்பதைக் கண்டு உணர்ச்சி வசப்பட்டவர்களாய் மௌனமாய் இருந்தார்கள். விதவைகளும், அநாதைகளாக விடப்பட்ட குழந்தைகளும் இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதற்காகச் சென்றனர். அந்த விநாடியில் எந்த ஒரு கறுப்புத் துணி கிடைத்ததோ அதை — ஒரு கைக்குட்டை, ஒரு சால்வை, ஒரு மேலங்கி இப்படி ஏதேனும் ஒன்றை — அவர்கள் அணிந்திருந்தார்கள்.

ரோடில்லெரோவின் சிறிய கோயிலில் அற்புதங்களைப் புரியும் கிறிஸ்து பெருமான், அவர்களுக்காகச் சிலுவையில் தொங்கியபடி கரம் விரித்துக் காத்திருந்தார். அவரும் கப்பல் சேதம் அடைந்ததால் அவதிக்குள்ளானவர்தாம். பக்திமான்களான சில மீனவர்களால் கடலிலிருந்து காப்பாற்றப் பட்டவர்தாம். அவரும் சமுத்திரப் பயணத்தின் துயரத்தையும், தனிமையையும் கடல் அலைகளின் கசப்புத்தன்மையையும் அனுபவித்தவர்தாம்.

பிரார்த்தனையும் பாதிரியாரின் அறிவுரைச் சொற்பொழிவுகளும் முடிந்ததும் எலேனாவும் ஜோஸும் கோயில் வாசலில் சந்தித்து, மிருதுவான புன்னகையை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர். காதலுக்கே உரித்தான, மன்னித்துவிடக் கூடியதான, குற்றமற்ற கர்வம் அவர்களை ஆட்கொள்ள, அவர்கள் சுற்றுப்புறத்தில் நிலவிய துயரங்களையெல்லாம் விநாடி நேரத்தில் மறந்தார்கள். ஒருவர் பக்கத்தில் ஒருவராக, ஆர்வத்தோடு குதூகலமாகப் பேசியபடியே கிராமத்தின் தெருவோடு நீள நடந்தார்கள். வீட்டை அடையுமுன்னர் தங்கள் திருமணத்துக்கான நாளை நிச்சயித்து விட்டார்கள்.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் :

கி. ராஜேந்திரன்



ஏழையின் மகளும் நீதிபதியும்



முன்னொரு காலத்தில் பரம ஏழையான ஒரு விவசாயி இருந்தான். அவனிடம் ஓர் எருது மட்டும் இருந்தது. ஒவ்வோர் ஆண்டிலும் உழவுக் காலத்தில், அண்டை வீட்டுப் பணக்காரனிடம் மற்றொரு எருதைக் கடன் வாங்கி அவன் உழுது வந்தான். ஒரு வசந்த காலத்தில், உழவு வேலை முடிந்ததும், கடன் வாங்கிய எருதை அந்தப் பணக்காரனிடம் திருப்பிக் கொடுத்தான். ஒரு மாதத்துக்குப் பிறகு, அந்த எருது நோயுற்று இறந்துவிட்டது. ''என் எருதை நீ கடுமையாக வதைத்து விட்டாய்; அது நோயினால் இறப்பதற்கு நீதான் காரணம். ஆகவே, நீ நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்'' என்று அந்தப் பணக்காரன் கூறினான்.

ஏழை விவசாயி இந்தக் குற்றச்சாட்டை அடியோடு மறுத்தான். ஆகவே, பணக்காரன் நீதிமன்றம் சென்றான்; ஏழையின் மீது வழக்குத் தொடுத்தான்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, ஏழைக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறினார். பணக்

காரன் இதை ஒப்புக் கொள்ளவில்லை. நஷ்டஈடு வேண்டும் என்று பிடிவாதமாக நின்றான். ஆகவே நீதிபதி அவனைப் பார்த்துக் கூறினார்: ''இந்த வழக்கு உடனே தீர்க்கப்பட வேண்டும் என்று நீ விரும்பினால், இந்த மூன்று கேள்விகளுக்கு நீ விடை அளிக்க வேண்டும்: எல்லாவற்றிலும் வேகமானது எது? எல்லாவற்றிலும் இனிமையானது எது? எல்லாவற்றிலும் மதிப்பு மிக்கது எது? இந்தக் கேள்விகளுக்குச் சரியான விடையளிப்பவர், இந்த வழக்கில் வெற்றிபெற்றவர் ஆவார்.''

நீதிபதியின் கேள்விகளுக்கு அந்த ஏழையும் பணக்காரனும் உடனே விடையளிக்க முடியவில்லை. ஆகவே, அந்த நீதிபதி கூறினார்: ''உங்களுக்கு இரண்டு நாட்கள் தவணை தருகிறேன். இரண்டு நாட்களுக்குப் பிறகு, விடைகளோடு வர வேண்டும்.''

அந்த ஏழை வீடு திரும்பினான். கன்னத்தில் கை வைத்துக் கொண்டு, கணப்பருகில் உட்கார்ந்தான். கவலையோடு தன் மகளிடம் கூறினான்: ''நீதிபதி என்னிடம் மூன்று கேள்விகள் கேட்டிருக்கிறார்: எல்லாவற்றிலும் வேகமானது எது? இனிமையானது எது? மதிப்பு மிக்கது எது? இதற்கு என்ன பதில் சொல்வேன்? விடை தெரியவில்லையே?''

''கவலைப்படாதீர்கள் அப்பா! இந்தக் கேள்விகளுக்குச் சுலபமாக விடையளிக்கலாம். நீங்கள் நீதிபதியைச் சந்திக்கும்போது, இந்த விடைகளைக் கூறுங்கள்: 'எல்லாவற்றிலும் வேகமானது சிந்தனை; எல்லாவற்றிலும் இனிமையானது தூக்கம்; எல்லாவற்றிலும் மதிப்பு மிக்கது இவ்வுலகம்.''

அந்த ஏழை மிகுந்த மகிழ்ச்சியுடன் நீதிமன்றத்துக்குப் புறப்பட்டான்.

அந்தப் பணக்காரன் நீதிபதியின் கேள்விகளை வேறுமாதிரியாகப் புரிந்து கொண்டான். ஆகவே, அவனது விடைகளும் வேறுமாதிரியாக இருந்தன! மிக வேகமாக ஓடக்கூடிய ஒரு குதிரை, ஒரு கொழுத்த பன்றி, ஒரு பாத்திரத்தில் தேன் ஆகியவற்றுடன் அவன் நீதிமன்றத்துக்கு வந்தான்.

''நீதிபதி அவர்களே! உங்கள் கேள்விகளுக்கு விடை சொல்லட்டுமா? எல்லாவற்றிலும் வேகமானது, என் குதிரை! மதிப்பு மிக்கது என் பன்றி! இனிமையானது இந்தத் தேன்!'' என்று அந்தப் பணக்காரன் தற்பெருமை அடித்துக் கொண்டான்.

நீதிபதி அந்த ஏழையைப் பார்த்தார்: ''உன் விடைகள் யாவை?'' என்றார்.


''நீதிபதி அவர்களே! எல்லாவற்றிலும் வேகமானது சிந்தனை: இனிமையானது தூக்கம்; மதிப்பு மிக்கது இவ்வுலகம்'' என்று அந்த ஏழை கூறினான்.

''இந்த விடைகளை உனக்குச் சொல்லிக் கொடுத்தது யார்? இந்தக் கேள்விகளை முதலில் கேட்ட பொழுது



சோவியத் நாட்டின் ஒரு பகுதியான அப்காசியாவில் வழங்கும் இந் நாடோடிக் கதை அறிவுக்கு முதலிடம் தருகிறது. அவன் ஏழை தான்; ஆனால் அவனது அறிவுச் செல்வம் நீதிபதியையே அல்லவா கவர்ந்துவிடுகிறது! ★

அப்காசிய நாடோடிக் கதை



குடித்தால் பலம் என்று எண்ணாதே.

செக்கு இழுக்கும் மாடும், வண்டி பாரம் இழுத்துக் கொண்டு ஓடும் குதிரையும் தண்ணீர்தான் குடிக்கும்.

குடித்தால் தைரியம் என்று எண்ணாதே.

காட்டு யானையும், புலியும், சிம்மமும் கூடத் தண்ணீர்தான் குடிக்கும்.

ராஜாஜி - நன்றி : குமரி மலர்

பதில் சொல்ல உனக்குத் தெரிய வில்லையே!'' என்றார் நீதிபதி.

''இந்த விடைகளை என் மகள் சொல்லிக் கொடுத்தாள்.''

''அவள் மிகவும் கெட்டிக்காரி. அவளை இங்கே அழைத்து வா '' என்றார் நீதிபதி.

அவர் பணக்காரனைப் பார்த்துச் சொன்னார் : '' என் கேள்விகளுக்குச் சரியான விடைகளை நீ அளிக்கவில்லை. உன் பொருள்களை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போ. உன் பரிசுகள் எனக்குத் தேவையில்லை.''

அடுத்த நாள் அந்த ஏழையும், அவன் மகளும் நீதிபதியைக் கண்டனர். அப் பெண்ணை நீதிபதிக்குப் பிடித்து விட்டது. எனவே, அவளைக் கல்யாணம் செய்து கொண்டார்.

ஒரு நாள் அந்த நீதிபதி வெளியூருக்குச் சென்றார். செல்லுமுன், தம் மனைவியிடம் இவ்வாறு கூறினார்: ''நான் வெளியூரில் இருக்கும்போது, உன் விருப்பம்போல் நீ நடந்து கொள்ளலாம். ஆனால், நீதிபதி வேலையை மட்டும் பார்க்காதே; யாருக்கும் யோசனைகள் சொல்லாதே; என் விருப்பத்துக்கு மாறாக நடந்தால், என்னுடன் நீ வாழ முடியாது.''

நீதிபதி வெளியூருக்குப் போனவுடன், இரண்டு பேர் அவர் வீட்டுக்கு வந்தார்கள். ஒருவன் குதிரையில் வந்தான்; மற்றவன் வண்டியில் வந்தான். அவர்கள் இருவரும் ஒரு குதிரைக் குட்டிக்குச் சொந்தம் கொண்டாடினர். அவர்களிடையே இப்படித்தான் சண்டை மூண்டது : அந்த மனிதன் ஒரு சினைக் குதிரையில் ஏறி வந்தான். மறுநாள் இரவில், அந்தச் சினைக் குதிரை ஒரு குட்டி போட்டது. அந்தக் குட்டி எப்படியோ வண்டியின் கீழே படுத்துக் கொண்டது. காலையில் குதிரைக்காரன் குட்டியை எடுக்கச் சென்றான். அப்பொழுது வண்டிக்காரன் அவனுடன் சண்டையிட்டான்: ''குதிரைக்குட்டி என் வண்டியின் கீழே படுத்திருக்கிறது. இதன் பொருள் என்ன? என் வண்டிதான் அந்தக் குட்டியை ஈன்றது.''

இதைக் குதிரைக்காரன் ஒப்புக் கொள்ளவில்லை. எனவே அவர்கள் இருவரும் நீதிபதி வீட்டுக்கு வந்தனர். நீதிபதி வெளியூர் சென்றிருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்தனர்; எனினும் அங்கிருந்து அவர்கள் போகவில்லை. நீதிபதியின் மனைவி, இந்த வழக்கில் தீர்ப்புக் கூறவேண்டும் என வலியுறுத்தினர்.

அவள் வந்தாள்; முற்றத்தில் நின்றவாறு, அவர்கள் கூறியதைக் கேட்டாள் ; . பிறகு உள்ளே போய்விட்டாள். நெடுநேரம் கழித்து வெளியே வந்தாள். தங்களை நெடுநேரம் காக்க வைத்ததற்காக அவ்விருவரும் அவளைக் கோபித்தனர். காக்க வைத்ததற்கு அவள் காரணம் கூறினாள்: ''இங்கிருந்து சிறிது தூரத்தில் ஒரு சிற்றூர் இருக்கிறது; கொஞ்ச நேரத்துக்கு முன்பு அது தீப்பற்றிக் கொண்டது; அதன் மேல் சருகுகளை வீசி, அந்தத் தீயை அணைத்தேன்.''

இதைக் கேட்ட அவ்விருவரும் வியப்படைந்தனர். ''நீங்கள் சருகுகளுக்குப் பதிலாகத் தண்ணீரை ஊற்றி, தீயை அணைத்திருக்கலாமே?'' என்று அவர்கள் கூறினர்.

''தண்ணீர் தீயை அணைக்கும் என்பது உங்கள் இருவருக்கும் தெரியும்; ஆனால், வண்டி குதிரைக்குட்டி போடாது என்பது உங்கள் இருவருக்கும் தெரியாது !''

இவ்வாறு அவள் ஒரு போடு போட்டதும் அவர்களால் ஒன்றும் பேச முடியவில்லை. அவர்கள் திரும்பிச் சென்றார்கள். வெளியூருக்குச் சென்றிருந்த நீதிபதி திரும்பி வந்தார். தம் கட்டளையை மனைவி மீறிவிட்டாள் என்பதை அறிந்ததும், அவளை விவாகரத்துச் செய்யத் தீர்மானித்தார்.

''உனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்; என் வீட்டைவிட்டு வெளியே போ'' என்று அவர் உத்தரவிட்டார்.

'' உங்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிகிறேன். ஆனால் நாம் பிரியுமுன்னர், உங்களுடன் விருந்து சாப்பிட விரும்புகிறேன் '' என்றாள்.

அவர் சம்மதித்தார். இருவரும் விருந்து உண்டனர். விருந்தின்போது, அவள் அவருக்கு நிரம்ப ஒயின் கொடுத்தாள். எனவே, அவர் விரைவில் தூங்கிவிட்டார்.

அவள் அவரை ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டு, தன் தந்தை வீட்டுக்குச் சென்றாள்.

வழியில் நீதிபதி விழித்துக் கொண்டார். '' என்னை எங்கே அழைத்துக் கொண்டு போகிறாய் ?'' என்றார்.

'' உனக்கு வேண்டியதை எடுத்துக் கொள் என்று என்னிடம் கூறினீர்கள். எனக்கு வேண்டிய பொருள் நீங்கள்தான். இவ்வுலகில் உங்களைவிட உயர்ந்த பொருள் எதையும் நான் காணவில்லை'' என்று அவள் கூறினாள்.

நீதிபதியின் உள்ளம் உருகியது. தம் மனைவியுடன் அவர் வீடு திரும்பினார். அதன் பின் சிக்கலான வழக்கு ஏதேனும் வந்தால், அவளுடன் கலந்து ஆலோசித்துத் தீர்ப்பு வழங்கினார்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam



உங்கள் எல்லாத் தலைவலிகளையும்
தலைவலி:
மூக்கடைப்பு, கடும்
ஜலதோஷத்தினால்
ஏற்படுவது.
தலைவலி:
மனவாட்டம், மனச்
சோர்வுண்டாகும்
சங்கடமான சமயங்
களில் ஏற்படுவது.
தலைவலி:
சுற்றுப்புற சப்தத்தி
னால் ஏற்படுவது.
தலைவலி:
அதிக வெப்பத்தி
னால் ஏற்படுவது.
தலைவலி:
கண்களில் அயர்ச்சி
நெடுநேரம் இரவில்
படிப்பதால்
ஏற்படுவது
தலைவலி:
கண்களில் அயர்ச்சி
தையல் மற்றும்,
பின்னல் வேலையி
னால் ஏற்படுவது.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon
இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

